REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

## திலீபன் நினைவு தாக்குதலுக்கு புலிகள் தயார்!



## மலையகத்து தலைமகன் சிலையாகத் தலைநகரில்



## அரசியல் சிக்கல் அடுத்து என்ன?

## இனி சமாதான பேச்சுக்கு சமாதி

## திருமலை துறைமுகம்: ஊழியருக்கு கல்தா?

மிக விரைவில் சுடர் ஒளி நாளிதழ் வருகிறது

# திலீபன் நினைவு நாளையொட்டி இன்னொரு களவேள்வி

## பாரிய நடவடிக்கையை எதிர்பார்த்து படைத்தரப்பு உஷார்!

தியாகத் தீபம் என்று ஏற்றிப் போற்றப்படும் லெப்டினன்ட் கேணல் திலீபனை நினைவு கூருமுகமாகப் புலிகள் பெருந்தாக்குதல் ஒன்றை நடத்தவிருக்கிறார்கள் என்ற செய்தி வெளியாகியிருக்கிறது.

தமிழினத்தின் உரிமைகளுக்காகத் தம் உயிர் நீத்த வீரர்கள் மாவீரர் பட்டியலில் சேர்க்கப்படுகிறார்கள்.

மாவீரர்களில் திலீபன் குறிப்பிடத் தக்க ஒருவர்.

இலங்கை இந்திய ஒப்பந்த விஷயங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்ததை எதிர்த்தும் தமிழினத்தின் நலனுக்காக ஐந்து கோரிக்கைகளை முன்வைத்தும் நீர் கூட அருந்தாமல் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டவர் திலீபன்.

1987 செப்டெம்பர் 15 ஆம் திகதி நல்லூர் முருகன் ஆலய வீதியில் சாகும்வரை உண்ணா விரதத்தை மேற்கொண்ட திலீபன் 12 ஆவது நாளில் அதாவது செப்டெம்பர் 26 ஆம் திகதி இறந்தார்.

அவரை நேசித்த மக்கள் அவரை தமது நெஞ்சில் இருத்திக் கொண்டு வருடந்தோறும் அவருக்கு நினைவஞ்சலி செலுத்தி வருகிறார்கள். அவருடைய படத்துக்கு மாலையிட்டுத் தீபமேற்றி அவர் தியாகச்சுடர் என்று போற்றி வருகிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள், அரச படைகளுக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்தி திலீபன் நினைவை நிலைநிறுத்தி வருகிறார்கள்.

இம்முறையும் அது நடக்கும், விமரிசையாகவே நடக்கும் என்று அரச படைத்தரப்பு மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கிறது.

கடந்த ஜூன் 30ஆம் திகதி விசேட ஊடகத்தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் முக்கியமாக ஒரு விஷயம் குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது கடந்த ஜூன் மாதம் 22ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய விசேட பூஜையில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் செப்டெம்பர் 26ஆம் திகதி திலீபனின் நினைவு நாளை இம்முறை புதிதாகக் கைப்பற்றவுள்ள யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்போம் என்று கூறியிருந்தார் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த மாவீரர் தின உரையில் பிரபாகரன் — யாழ் குடாநாட்டை மீளக் கைப்பற்றுவோம்; கைப்பற்றியே தீருவோம் — என உறுதிபடக் கூறியிருந்தார்.

இவற்றையெல்லாம் நினைத்துப் பார்த்தால் படையினர் நிம்மதியாக இருக்க முடியுமா? மாவீரர் வாரம் என்றாலே ஒவ்வொரு ஆண்டும் உலகெங்கும் எல்லோரும் பிரபாகரனின் உரையையும், படைத்தரப்பு புலிகளின் தாக்குதலையும் எதிர்பார்த்திருப்பது வழமை.

இராணுவத்தினரின் அராஜகங்கள் இடம் பெற்ற நாட்களின் நினைவாகத் தாக்குதல்களை மேற்கொள்வதும் புலிகளின் 'ஸ்டைலாக' வளர்ந்திருக்கிறது.

அம்பாறை மத்திய முகாம் மீதான தாக்குதல் சமீபத்தில் இடம் பெற்றது அல்லவா? கோணேஸ்வரி என்ற தமிழ்ப் பெண் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டுக் கொலை செய்யப்பட்ட நாளை நினைவு படுத்தும் தாக்குதல் தான் அது என்று அறிவிப்பு விடுக்கப்பட்டது.

'அக்கினிச்சுவாலை'யை ஆரம்பித்து, புலிகளின் எதிர்த்தாக்குதலால் பொசுங்கிப் போன படையினர் இன்று வரை எந்த ஒரு படை நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாத நிலைக்குப் பலவந்த மாகத் தள்ளப் பட்டுவிட்டனர். கடந்த நான்கு மாத காலமாகக் களமுனைகளில் சூடு தணிந்து விட்டது. பட்டாலியன் கணக்கில் யுத்த முனைகளில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட படையினருக்கு மாற்றீடாக புதியவர்களை நடவடிக்கையில் படைத்தலைமைகள் ஈடுபடுத்தின.

படைக்குப் புதியவர்களைச் சேர்ப்பதற்கும் படையை விட்டு ஓடியவர்களை மீண்டும் படையில் இணைத்துக் கொள்வதற்கும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பெரு முயற்சி செய்தார். ஒன்றும் ஆகவில்லை.

தற்போது இந்த மாதிரியான முயற்சிகளிலெல்லாம் இறங்க இயலாமல் இருக்கிறார்.

ஆள்பலம் இல்லாவிட்டாலும் இராணுவத்தை ஆயுதங்கள் மூலம் பலப்படுத்தலாம் என்ற நோக்கில் பல கோடி ரூபாய்க்கு ஆயுதங்கள் கொள்முதல் செய்யப்பட்டன. இதில் ஏகப்பட்ட சிக்கல்கள். வாங்கிய ஆயுதங்கள் பழையவை, வாங்கியவர்கள் மீது லஞ்சப் புகார் வேறு.

சகல வழிகளிலும் புலிகளை அழிக்க மேற்கொண்ட முயற்சிகளில் படைத்தரப்பும் அரசும் பாரிய பின்னடைவுகளேயே சந்தித்தன; சந்திக்கின்றன.

அம்பாறை, ஜானகபுர, கொக்குத் தொடுவாய், மணலாறு ஆகிய இடங்களில் சமீபத்தில் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் புலிகளை ஆயுத வளத்தால் மேலும் வலுப்படுத்தியிருக்கின்றன.

கடந்த காலப் படைநடவடிக்கைகள் புலிகளை மனோரீதியிலும் பலப்படுத்தியிருக்கின்றன. ஆயின் திலீபனின் நினைவாக நடைபெறவுள்ள தாக்குதல் நடவடிக்கைகள் எப்படி இருக்கும் என்பதை எவரும் ஊகித்துக் கொள்ளலாம்.

இதேவேளை — இந்த வாரம் இராணுவப் புலனாய்வுப் பிரிவு தனது தலைமையகத்துக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில், திலீபன் ஞாபகார்த்தமாகப் புலிகள் யாழ் குடாநாட்டைக் கைப்பற்றத் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

தீபன் தலைமையிலான சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும், மதுஷா தலைமையிலான மகளிர் அணியும், கடாபி தலைமையிலான பாரிய அணி ஒன்றும் புலிகளின் மேற்படி திட்டத்துக்கு ஏற்ப தயார் நிலையில் இருப்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

— எறியன்

### தியாக தீபம்

பார் முழுதும் வியந்து விழிநீர் சொரிய
பார்த்தோரெல்லாம் பதறியழ, பண்பற்ற
பாரத தேசத்துக்கு பாடம் சொல்லி, மறைந்த
பார்த்திபனே! தியாகத்தின் தீபமே!
இரும்புக்கரம் கொண்டு எம்
இனிய தேசத்தை இருளில் புதைக்க
எண்ணிய அந்நியப் பிசாசுகளை
அம்பலப்படுத்தி,
அகிம்சையென்ற ஆயுதங்கொண்டு
உன் தேகத்தை நெருப்பாக்கி,
குட்டிச் சூரியனாய் உருமாறி
சுட்டெரித்தாய்; சுடர் விளக்கானாய்!
மெழுகாய் உருகி எம்
தேசத்துக்கு ஒளி கொடுத்துவிட்டு
நீ மட்டும் கருகிப் போனாய்!
இலட்சிய வேள்வியில்
ஆகுதியான மறவர்கள் மரணிப்பதில்லையே!
மக்கள் மனங்களிலல்லவோ வாழ்கிறார்கள்!
திலீபன் என்ற தியாக தீபமே!
நீ அணைந்து போய்
ஈழேழு ஆண்டுகளாகியும்
இன்னும் உன் நினைவால்
சரமாகின்றன எம் விழிகள்!

— த.பிரபாகரன், சுழிபுரம்

# தேசியத் தலைவர்கள் வரிசையில் தொண்டா


பாட்டனாரின் சிலைக்கு மாலை அணிவிக்கும் அமைச்சர் ஆறுமுகம்

தற்போது ஜனாதிபதி செயலகம் அமைந்துள்ள இலங்கையின் முதலாவது நாடாளுமன்றக் கட்டடத்தின் முன் அமரர் தொண்டமானின் உருவச் சிலை அவரது சிரார்த்த தினமான கடந்த 30ஆம் திகதி ஜனாதிபதியினால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஜனநாயக எல்லைக்குள் இருந்தே பல வெற்றிகளைப் பெற்றவர். எதிர்ப்புகளுக்கும் சோதனைகளுக்கும் மத்தியில் சாதனை படைத்தவர். அனைவராலும் ஒரு தேசியத் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர். அதனால் தான் நாட்டின் தேசியத் தலைவர்கள் மத்தியில் அவருக்கும் சிலை வைக்கப்பட்டது.

சிலையைத் திரை நீக்கம் செய்து வைத்து ஜனாதிபதி உரை நிகழ்த்துகையில்: அமரர் தொண்டமான் நாட்டுக்கும் தமது சமூகத்துக்கும் ஆற்றிய சேவைகளைப் புகழ்ந்து பாராட்டினார்.

பாட்டனாரின் வழியைப் பின்பற்றி அமைச்சர் ஆறுமுகமும் சாதனை படைக்க வேண்டும் என்று ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். அமைச்சர் ஆறுமுகம் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது.

வைபவத்தில் இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் பிரதிநிதியாக இந்திய ரயில் போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் தீப்விஜயசிங் கலந்து கொண்டார்.

இலங்கைக்கான இந்தியத்தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தி, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மற்றும் இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் என்று பலரும் கட்சி பேதமின்றி இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தவிர்க்க முடியாத காரணத்தால் வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை. அவர் செய்தியை கருணாசேன கொடித்துவக்கு வாசித்தார்.

அமைச்சர் ஆறுமுகத்தின் விசேட அழைப்பின் பேரில் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் டாக்டர் ஜனார்த்தனன் சிறப்பு அதிதியாக வைபவத்தில் கலந்து கொண்டார்.

இந்திய ராஜாங்க அமைச்சர் தீப்விஜேசிங், இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தி, பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா அமைச்சர் ஆறுமுகம் உட்படப் பலர் வைபவத்தில் உரை நிகழ்த்தினர்.

அமரர் தொண்டமானின் குடும்பத்தின் சார்பில் அவரது பேத்தி சித்தம்மை கோதைநாச்சியார், இ.தொ.கா சார்பில் அதன் தேசிய அமைப்பாளர் ஆர்.யோகராஜன் ஆகியோர் நன்றி தெரிவித்து உரை நிகழ்த்தினர்.

அமரர் தொண்டமான் தனது பதினொராவது வயதில் இந்தியாவில் இருந்து வந்தார். இன்று அவரது சிலையும் இந்தியாவில் இருந்தே கொண்டு வரப்பட்டு ஜனாதிபதி செயலகத்தின் முன்றலில் ஏனைய தேசியத் தலைவர்களின் சிலைகளின் வரிசையில் அமைக்கப்பட்டுள்ளது.

தேசியத் தலைவர்கள் வரிசையில் அமரர் தொண்டமானுக்கும் சிலை நிறுவப்பட்டமை இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினருக்குக் கிடைத்த கௌரவமும் அவர்களது தனித்துவத்துக்குக் கிடைத்த ஓர் அங்கீகாரமும் ஆகும்.

—புத்திரசிகாமணி


யாழ். ''உதயன்'' தினசரி பத்திரிகையில்
உங்கள் விளம்பரங்களும் இடம்பெற
கொழும்பில்
வசதி செய்யப்பட்டுள்ளது
தொடர்புகொள்க:
இல. 36/2, பிரெட்ரிக்கா றோட், கொழும்பு — 06.
Tel / Fax: 501409/599834
குறிப்பு:— விளம்பரம் செய்ய விரும்பும் விளம்பர முகவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்புகொண்டு தம்மை பதிவு செய்துகொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

உதயன்
விளம்பரதாரர்கள் வாசகர்களுக்கு அரியதோர் வாய்ப்பு!
இப்பொழுது உதயன் விளம்பரங்கள் இணையப் பதிப்பில்
(Internet Edition)
தினசரி ''உதயன்'' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திருமண அழைப்பு, பிறந்தநாள் வாழ்த்து, நன்றி நவிலல், வர்த்தக விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், நினைவஞ்சலி, மணமக்கள் தேவை, வீடு விற்பனை போன்ற விளம்பரங்கள் ''உதயன்'' இணையப்பதிப்பில் (Internet Edition) மேலதிகக் கட்டணம் எதுவுமின்றி சேர்த்துக்கொள்ளப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்!
உதயன் வெப்தள முகவரி:
www.uthayan.com

# களத்தில் இறங்கிய சுகாதார தொண்டர்கள்




மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு முன்னால் கடந்த வாரம் பெரும் தொகையான பெண்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர்.

பெண்கள் எல்லோரும் தனித்து இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. சிலர் தமது பச்சிளம் குழந்தைகளையும் தூக்கி வந்திருந்தனர்.

தகிக்கும் வெயிலில் குழந்தைகளுடன் அவர்கள் அமர்ந்திருந்தது பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது. குழந்தைகளும் போராட்டத்திலா என்று கேட்கத்தோன்றியது.

தமது நீண்டகாலக் கோரிக்கை நிறைவேறவேண்டும் என்ற உறுதியுடன் இந்தப் பெண்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட சுகாதாரத் தொண்டர்களே இந்தப் போராட்டத்தை நடத்தினர். பத்து வருடங்களாக சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை.

தம்மை நிரந்தரமாக்கும்படி கோரியே இந்தப் பெண்கள் போராட்டத்தில் இறங்கினர். 150 பேர் வரை இதில் கலந்துகொண்டனர்.

தொண்டர் அடிப்படையில் தாம் கடமை ஆற்றிவரும் வேளையில் அரசியல் செல்வாக்கின் மூலம் வைத்தியசாலைகளில் சிலர் சிற்றூழியர் நியமனங்களைப் பெற்றுள்ளனர் என்று மட்டக்களப்பு மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்கத் தலைவர் எஸ். குவேந்திரராணி தெரிவித்தார்.

சுமார் 35 பேர் வரை இப்படி சிற்றூழியர் நியமனம் பெற்றுள்ளனர் என்றும் இவர் குற்றம் சாட்டினார்.

உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா உண்ணாவிரதிகளைச் சந்தித்தார். இவ்விவகாரத்தினை மாகாண ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா இவ்விடயத்தை மாகாண ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.





கல்குடா வலய சுகாதாரத் தொண்டர்கள் சங்கப் பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் ''கடந்த 15 வருடங்களாக நாம் எதுவித வேதனமுமற்ற நிலையில் சேவை செய்து வருகிறோம். ஆயினும் ஒரு சில அரசியல்வாதிகளின் செல்வாக்கின் மூலம் சில புதியவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுகின்றன'' என்றார்.

''கடந்த மாதம் 4ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு எந்த ஒரு சுகாதாரத் தொண்டரும் அழைக்கப்படவில்லை.

''இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் உரிய பதில் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை'' என்றும் அவர் சொன்னார்.

மட்டக்களப்பு ஈ.பி.டி.பி அலுவலகப் பொறுப்பாளர் பரணீதரன் பிரதீபன் மற்றும் விஜி தங்கராஜா ஆகியோர் இந்த விடயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

செப்டெம்பர் 7 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படும் போது இப்பிரச்சினை தொடர்பாக ஆராயப்படும் என்று அமைச்சர் தொலைபேசி மூலம் உறுதி மொழி வழங்கி இருந்தார்

அதே சமயம் தொண்டர் அடிப்படையில் சேவை செய்ய முன்வருபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற உத்தரவாதம் சுகாதாரத் திணைக்களத்தினால் ஒரு போதும் வழங்கப்படவில்லை என்று திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிய உறுதி மொழியை அடுத்து சுகாதாரத் தொண்டர்களின் உண்ணாவிரதப் போராட்டம் அன்று பிற்பகலே கைவிடப்பட்டது.

அமைச்சரின் உறுதி மொழியில் நம்பிக்கை வைத்து சுகாதாரத் தொண்டர்கள் காத்திருக்கின்றனர். இவர்களது நம்பிக்கை நிறைவேறுமா?

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடிப் பிரிவில் 75 சுகாதாரத் தொண்டர்களும், வாழைச் சேனைப் பிரிவில் 85 சுகாதாரத் தொண்டர்களும் வேலை செய்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

—துவாரகன் , சத்துருக்கன்




## தனித்துவம் வேண்டாம்

அரசியல் சூழ்நிலை எப்படி இருந்தாலும் தேர்தல் ஒன்றுக்கு அரசியல் கட்சிகள் இப்போதே தயாராகி வருகின்றனவாம்.

புதிய நட்புகளை ஏற்படுத்துவதில் நாட்டம் அதிகரித்திருக்கும் இந்த வேளையில் கூட்டுக்குள் இருந்த இரு கட்சிகளை இனிமேல் சேர்த்துக்கொள்வதில்லை என அதிகாரத் தரப்பு தீர்மானித்திருக்கிறதாம்.

நீலக்கட்சிக்காரர்களின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் அந்த இரண்டு கட்சிகளினால் அடைந்த துன்பங்களை அதிகார அம்மணி விளக்கியிருக்கிறாராம்.

அந்த இரண்டு கட்சிகளில் ஒன்றான தனித்துவமான கட்சியை எந்தக் காரணம் கொண்டும் இனிமேல் சேர்த்துக்கொள்வதில்லை என்று தீர்மானமும் எடுத்துப்போட்டார்களாம்.

ஆட்சியில் இருக்கு மட்டும் அரவணைத்த கட்சிகளை தேர்தல் நெருங்கிய வேளையில் தூக்கி எறிந்து பேசக்கூடாது என்று சில முக்கியஸ்தர்கள் சுட்டிக்காட்டினாலும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாம்.

## பட்டமும் பதற்றமும்

இரண்டெழுத்து இயக்கக்காரர்களிடம் வானூர்திகள் இருக்கின்றனவோ இல்லையோ. ஆனால் நீலச்சீருடையாளர்கள் மத்தியிலும் வேறு சில சீருடையாளர்கள் மத்தியிலும் அந்த நம்பிக்கை இருப்பதாகத் தெரிகிறது.

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்கள். இரத்மலானை தளம் பகுதியில் இரவு நேரம் நடந்த சம்பவம் இதனை உறுதிப்படுத்துகிறது.

இரண்டு இளைஞர்கள் பட்டம் விட்டார்கள். பட்டத்தில் சிறிய ரக பட்டரியைப் பொருத்தி எல்.ஈ.டி எனும் மின்குமிழ்களை எரிய விட்டார்கள். நல்ல முயற்சி. ஆனால் வந்ததோ வினை.

பட்டம் அந்தத் தளத்திற்கு மேலாக பறந்த போது இரண்டெழுத்துக்காரர்களின் விமானம் வந்து விட்டதோ என்ற பீதி சீருடையாளர்களுக்கு ஏற்பட்டது. சீருடையாளர்கள் சுடத் தயாரானார்கள். விடயம் தலைமையகம் வரை சென்று விட்டது. பின்பு உண்மையை அறிந்து ஆசுவாசமாக மூச்சுவிட்டாலும், ஆத்திரம் அடங்கவில்லையாம்.

பட்டம் விட்ட இளம் வயதுக்காரர்களைத் தேடிப் பிடித்து ஆத்திரம் தீர உதை கொடுத்திருக்கிறார்களாம்.

## இங்கும் ஒரு மிலோசெவிக்

அரசமைப்பில் உள்ள விதிகளின்படி அதிகார அம்மணிக்கு எதிராக உள்ளூரில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது. அதனால்தான் தமிழ் மக்களுக்கு எதிராக எதையெல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவையும் அதிகார அம்மணி செய்கிறார். இதற்கெல்லாம் அவர் ஒரு நாள் தண்டனை அடைந்தே ஆகவேண்டும்.

இப்படி ஒரு தமிழ்க்கட்சியின் தலைவர் ஆக்ரோஷமாகத் தெரிவிக்கிறார். அந்த ஆக்ரோஷத்தைச் செயலில் காட்டும் பணியிலும் இப்போது அவர் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறாராம்.

உள்நாட்டில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாத காரணத்தால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அதிகார அம்மணிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் முயற்சியில் அந்தத் தலைவர் ஈடுபட்டிருக்கிறாராம். பல முக்கியஸ்தர்களுடன் இது குறித்துப் பேச்சும் நடத்தி வருகிறாராம்.

வழக்குத் தாக்கல் செய்யப்படுவது பற்றிய விவரங்களை விரைவில் ஊடகங்களுக்கு அவர் தெரிவிப்பாராம்.

''என்ன குற்றம் கண்டீர்'' என்று கேட்டால் தமிழ் மக்களுக்கு அதிகார அம்மணி செய்தவைகளே போதும் என்கிறாராம்.

5 லட்சம் மக்களை விரட்டியடித்தது, 24 ஆயிரம் குடும்பங்களை மீளக் குடியேற விடாமல் தடுத்தது, 20 ஆயிரம் யுத்த விதவைகளை உருவாக்கியது, 79 ஆயிரம் வீடுகளைத் தரைமட்டமாக்கியது, தென்மராட்சியில் இரசாயன ஆயுதங்களைப் பிரயோகித்தது, இனங்களுக்கு ஏற்றவாறு சட்டங்களை அமுல்ப்படுத்தியது.

இப்படி பட்டியல் நீண்டு கொண்டே போகிறதாம்.

அண்மையில் கொழும்பு நகர தந்தை இல்லத்தில் நடைபெற்ற ஒரு விசேட கூட்டத்திலும் இந்தத் தமிழ்த் தலைவர் கலந்து கொண்டாராம்.

சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம், சர்வதேச ஜூரர்கள் அமைப்பு, மலேசிய சட்டத்தரணிகள் அமைப்பு ஆகியவற்றின் முக்கிய பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனராம்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒரே ஒரு தமிழ்த் தலைவர் இவர்தானாம். அவர்களுக்கு இத்தலைவர் விடயங்களை தெட்டத் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கிறாராம்.

நல்ல விடயம்தான். ஆனால் மற்றத் தமிழ்த் தலைவர்கள் இத்தலைவரின் காலை வாரிவிடாமல் இருக்க வேண்டுமே.

## இணைப்பும் பதவிகளும்

தொழிலாளர்களுக்கான ஒரு ஜனநாயகக் கட்சியும், அகில இலங்கைக்குமான ஒரு தமிழ்க் கட்சியும் இணைந்து மேல் மாகாணத்தில் அமைக்கும் முன்னணி, அடுத்த வெள்ளிக்கிழமைக்கு முன் பதிவு செய்யப்பட்டு விடுமாம்.

புதிய முன்னணியின் அமைப்பு விதிகள் (மெமரான்டம் ஒப் அசோசியேஷன்) தயாரிக்கப்பட்டு அந்தத் தமிழ்க்கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு கையளிக்கப்பட்டு விட்டனவாம்.

அமைக்கப்பட்ட முன்னணியின் முக்கிய பதவிகள் தமிழ்க் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு ஒதுக்கப்பட்டும் விட்டனவாம். முன்னணியின் தலைவராகவும் பொதுச் செயலாளராகவும் மனோகரமானவர் விளங்குவாராம்.

முன்னணியின் தவிசாளர் பதவியை ஒரு கூத்தனார் ஏற்றுக் கொள்ள பிரதித் தலைவர் பதவியை ஒரு நல்ல ஐயா ஏற்றுக் கொள்கிறாராம்.

மத்திய குழுவில் கூத்தனாரும், நல்ல ஐயாவும் ஓட்டோமெட்டிக்காக வர மேலும் 3 பேரை தமிழ்க் கட்சிதான் நியமிக்க வேண்டுமாம். மிகுதி 15 மத்திய குழு உறுப்பினர்களை தொழிலாளர்களுக்கான கட்சியே முடிவு செய்யுமாம்.

தமிழ்க்கட்சி மேல்மாகாணத்தில் முன்னணியுடன் இணைந்து செயற்படும்.

அதேநேரம் இந்த முன்னணிக்கு வேறு தமிழ்க்கட்சிகளின் முக்கியஸ்தர்கள் ஆதரவும் ஆசியும் தெரிவித்துள்ளார்களாம்.

# சுடர் ஒளி

09 செப்டெம்பர், 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com


## அரசியல் சிக்கல் தீருமா, தொடருமா?

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை அமைச்சர் பதவியிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா என்று தூக்கி எறிந்தாரோ அன்றிலிருந்தே அவருக்கும் (ஜனாதிபதிக்கும்) அவருடைய அரசுக்கும் கஷ்ட காலம் ஆரம்பித்து விட்டது.

* தன்னுடைய அரசாங்கம் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நிலைத்து இருக்க முடியாது என்பது ஜனாதிபதிக்கு ஏற்கனவே தெரியும். என்றாலும் எதிர்க்கட்சிகளால் தன்னுடைய அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டதாக வரலாற்றுப் பதிவு இடம்பெறுவதை அவர் விரும்பவில்லை.

அதனால் உடனே நிகழ இருந்த ஆபத்தை சட்டபூர்வ நடவடிக்கைகள் மூலம் தள்ளி வைத்து விட்டு ஜனாதிபதி நிரந்தர பாதுகாப்புத் தேட முயன்றார்.

1971இல் அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்தி தென்னிலங்கை முழுவதையும் கலக்கி அடித்த மக்கள் விடுதலை முன்னணி இப்போது நாடாளுமன்றத்தில் பத்து உறுப்பினர்களைக் கொண்டிருப்பதால் அந்தக் கட்சியின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் ஜனாதிபதி நாடினார்.

அந்தக் கட்சி தவித்த முயல் அடிக்கப் பார்த்தது.

அரசாங்கக் கட்சியினருக்கு அது சரிப்பட்டு வரவில்லை.

தேசிய அரசாங்கம் அல்லது கருத்தொருமிப்பு அரசாங்கம் என்ற பெயர்களில் கூட்டாக ஆட்சி நடத்த ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு வார்த்தைகள் நடந்தன.

முக்கிய விடயங்களில் இணக்கம் காண முடியாமல்போய் விட்டது. பேச்சுவார்த்தைகள் முறிந்தன.

ஜனாதிபதியும் பிரதமரும் மீண்டும் மக்கள் விடுதலை முன்னணித் தலைவர்களிடமே சென்றார்கள். பேசிப் பல விடயங்களில் உடன்பாடு கண்டார்கள்.

நாடாளுமன்றம் எதிர்வரும் 7ஆம் திகதியோ அல்லது ஜனாதிபதி விரும்பினால் அதற்கு முன்னரோ கூடலாம்.

முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட (அரசின் மீதான) நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றம் கூடும் அதே நாளில் விவாதித்து வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

பிரேரணையை வாக்கெடுப்புக்கு விட்டால் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவுடன் அதைத் தோற்கடிக்க முடியுமா?

கணக்கின்படி அரசாங்கக் கட்சியில் 109 பேர் இருக்கிறார்கள். மக்கள் விடுதலை முன்னணி எம்.பிக்கள் 10 பேரையும் சேர்த்தால் மொத்தம் 119 பேர்.

ஆனால் நான்கு அமைச்சர்களையும் அவர்களைச் சார்ந்த எம்.பிக்களையும் ஜனாதிபதி பகைத்துக்கொண்டுவிட்டார். அவர்கள் இரகசியமாக எதிர்க்கட்சியுடன் ஒட்டி உறவாடி வருகிறார்கள்.

எதிர்க்கட்சி அணியில் உள்ள எம்.பிக்களின் எண்ணிக்கை 104 ஆக இருந்தபோதிலும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 113 எம்.பிக்களின் கையெழுத்துகளுடன் ஆதரவுக் கடிதங்களை வாங்கி வைத்திருக்கிறார்.

அதனால் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்க முடியாத நிலை அரசுக்கு ஏற்படலாம்.

இதற்கு மாற்று வழி ஜனாதிபதி நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து விட்டு உடனே அதை மீண்டும் ஒத்தி வைப்பது தான்.

அப்படிச் செய்தால் பெரும்பான்மையினராக இருக்கும் தாம் வெளியே செல்லாமல் நாடாளுமன்றக் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தப் போவதாக எதிர்க்கட்சியினர் அறிவித்திருக்கிறார்கள்.

அப்படியானால் சட்டம், ஒழுங்கு சீர்குலையும். குழப்பம் ஏற்படும். நாடாளுமன்றத்திலேயே அடிதடி நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நாடாளுமன்றக் கூட்டத் தொடரைத் துவக்கி வைக்கும் நாளிலேயே நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை அறிவிக்கும் ஒரு வழியும் இருக்கிறது.

புதிய நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு முன்னர் அதாவது வருகிற அக்டோபருக்கு முன் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. வேண்டுமானால் உறுப்பினர்கள்தான் அதற்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்கு மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவு இருந்தாலும் கூட அரசாங்கத்துக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைக்காது.

ஆக, இன்றைய நிலையில் அரசியல் நெருக்கடி தீர்ந்து விட்டதாகக் கூறுவதற்கு இல்லை. அது தொடரப் போகிறது. சிக்கல்கள் அதிகரிக்கும் சாத்தியக் கூறுகளும் உள்ளன.


# பிரச்சினை தீர்வுக்கு பேச்சுவார்த்தை இனி முடிந்த கதை

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வா? இனி அது முடிந்த கதைதான். பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய இரண்டு முன்னணிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புதிய ''சம்பந்தம்'' அதை உறுதிப்படுத்து கிறது.

இனப்பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் என்று அரசாங்கம் என்றுமே விரும்பியதில்லை.

தமிழ் மக்களுக்கு உரிமை வழங்க வேண்டும். அவர்களின் துயர் துடைக்க வேண்டும். அதிகாரத்தைப் பரவலாக்கி அவர்களுக்கும் பிரதேச ஆட்சியில் பங்களிக்க வேண்டும் என்று அரசாங்கம் எண்ணியது கிடையாது.

பேச்சுவார்த்தை நடத்தினால் அவர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு உரிமைகளை வழங்க வேண்டிவரும். அப்படி வழங்கினால் அது பேரினவாதப் பூதத்துக்குப் பிடிக்காது. அதன் விளைவு என்ன? வாக்கு வங்கி வரண்டுவிடும். அப்படி ஆகிவிட்டால் ஆட்சி பீடம் ஏறமுடியுமா? அதிகாரம் செலுத்த வாய்ப்புக் கிடைக்குமா?


அன்டன் பாலசிங்கம்

தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டியதை வழங்கலாம். எப்போது? தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டிவிட்டு அல்லது அவர்களின் முதுகை முறித்து இயங்க முடியாத அளவுக்குப் பலவீனப்படுத்திவிட்டு.

அந்தக் கட்டத்தில் தமிழ் மக்கள் வாய் திறந்து உரிமை என்று எதையும் கேட்காமல் கொடுத்ததை இரு கரம் நீட்டி வாங்கிக் கொள்வார்கள்.

இந்த எண்ணத்தில்தான் அரசாங்கம் கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டி பயங்கர கொலை ஆயுதங்களை வாங்கிப் போரைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

இடையிடையே சமாதானம், பேச்சு வார்த்தை, நோர்வேயின் அனுசரணை என்றெல்லாம் அரசு பேசுவது சர்வதேச சமூகத்தின் காதைக் குளிர வைக்கவேண்டும் என்பதற்காகத்தான்.

சர்வதேச சமூகத்தின் ஆதரவும் அனுதாபமும் இருந்தால்தான் கடன் கிடைக்கும்.

வெளிநாட்டுக் கடன் இல்லா விட்டால் நாட்டில் பஞ்சமும் பட்டினியும் தாண்டவமாடும். யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தவும் இயலாது போகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நோர்வே அரசாங்கம் அரும்பாடுபட்டு மேற்கொண்டு வந்த அனுசரணை முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டது யார்? அரசாங்கம்தான்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் நான்கு மாதங்களாக ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அனுஷ்டித்து வந்தனர்.

அரசு அதைச் செய்ததா? தானாக நினைத்துச் செய்யாவிட்டாலும் புலிகளைப் பார்த்தாவது செய்திருக்க வேண்டாமா? அவர்களின் வேண்டுகோளை ஏற்றாவது செய்திருக்க வேண்டாமா?

புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்காக அறிவித்ததுதான் யுத்த நிறுத்தம் என்று அதைக் கொச்சைப்படுத்தி வந்தது அரசாங்கம். அத்துடன் புலிகளின் நிலைகள் என்று கூறிக் கண்ட இடங்களிலெல்லாம் தாக்குதலும் நடத்தியது.

இப்போது அரசாங்கம் வேறு விதமாகக் கூறுகிறது. வெளிநாட்டு அமைச்சர் கதிர்காமர் தாம் முன்னர் கூறிய அபத்தங்களுக்கு எல்லாம் பிராயச்சித்தம் தேடும் வகையில் சில வார்த்தைகளை உதிர்த்திருக்கிறார்.

அவை வருமாறு:—

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க அரசு விரும்புகிறது. அதற்குப் புதியதொரு முன் முயற்சியாக புலிகளுடன் பரஸ்பரம் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க அரசாங்கம் முன் வந்துள்ளது.

இனப்பிரச்சினை விஷயத்தில் அரசின் கொள்கையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைக்கு முன் யுத்த நிறுத்தத்துக்கு இணங்குவது புலிகளின் முக்கிய கோரிக்கை ஒன்றை நிறை வேற்றுவதாக இருக்கும். இந்தக் கோரிக்கைக்கு அரசாங்கம் முன்னர் இணங்காததால் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகள் தடைப்பட்டன.

ஐ.தே.க — பொ.ஐ.முன்னணி பேச்சுவார்த்தை பலனளித்திருக்குமானால் இருகட்சிகளாலும் கூட்டாகப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கும். பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால் அரசு தனியாகப் புலிகளுடன் பேச முன் வந்துள்ளது.

நோர்வே சமாதான முயற்சிகளில் தேக்கநிலை காணப்பட்டாலும் அவற்றைக் கைவிட்டு விடவில்லை. இப்படி அமைச்சர் கதிர்காமர் தெரிவித்திருக்கிறார்.

காண்டீபம்

அமைச்சர் கதிர்காமருக்கு லண்டனிலிருந்து புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் கடுமையான வார்த்தைகளில் சுருக்கென்று ஏறக்கூடிய சூடான பதில் அளித்திருக்கிறார்.

அவர் கூறியிருப்பதாவது:—


இலங்கை அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து விட்டது. எனவே நிலையில்லாத ஓர் அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாங்கள் தயாரில்லை.

செயற்திறனற்ற ஊழல் மலிந்து விட்ட பொ.ஐ.மு அரசு முன்வைக்கும் இரு தரப்பினரினதும் உடன்பாட்டுடனான யுத்த நிறுத்தத்துக்கும் நாங்கள் தயாரில்லை. அரசின் இந்த யோசனையை நாங்கள் நிராகரிக்கிறோம்.

யுத்த நிறுத்த யோசனை திட்டமிட்ட ஓர் அரசியல் வேடதாரித்தனம். முகம் கொடுத்து வரும் அரசியல் நெருக்கடிகளிலிருந்து மக்களினதும் சர்வ தேசத்தினதும் கவனத்தை திசை திருப்புவதற்கு கையாளப்படும் ஒரு அரசியல் தந்திரமே இந்த யுத்த நிறுத்த யோசனையும் சமாதானப் பேச்சும் ஆகும்.

தீவிரமடைந்துவரும் அரசியல் நெருக்கடியிலிருந்து சிங்கள மக்களதும் சர்வதேச சமூகத்தினதும் கவனத்தை திசைதிருப்பும் நோக்கிலேயே இந்த சமாதானத்திற்கான சமிக்ஞை காட்டப்படுகிறது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து ஊழலும், சீர்கேடும் மலிந்து ஆட்டம் காணும் நிலையிலுள்ள இந்த அரசாங்கத்துடன் நாம் பேச்சுக்களை நடத்த தயாராக இல்லை.

எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பில் இருக்கும் தமிழ்க் கட்சிகளைப் பிளவுபடுத்தும் நோக்கத்துடனேயே அரசு இந்த கபட நாடகத்தை ஆடுகிறது.


கதிர்காமர்

மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் ஏறிக் கொள்வதற்கு நாம் அப்படி முட்டாள்கள் அல்லர்.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததையடுத்து ஆட்சியை தக்கவைத்துக் கொள்ளவும், சரிந்துவிட்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் அரசாங்கம் மேற்கொள்ளும் கண்துடைப்பு நடவடிக்கையே இதுவாகும்.

இப்படி அன்டன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

ஆட்சியில் நிலைத்து இருப்பதற்காக மக்கள் விடுதலை முன்னணியுடன் அரசாங்கம் கைகோக்க முனைந்து விட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் கருத்து அனைவரும் அறிந்ததே.

புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கு அரசு போகக்கூடாது. அவர்களோடு தொடர்ந்து யுத்தம் செய்து அனைவரையும் கொன்றுவிட வேண்டும். அதன் பின்னர் தமிழ் மக்களுக்கு உரிமைவழங்குவது பற்றிப் பார்க்கலாம் என்பதே மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு.

ஆட்சி அதிகாரத்தில் இருப்பதற்காக எந்தப் பிசாசோடு உறவாடவும் அது சொல்வதையெல்லாம் கேட்டு அதன்படி நடக்கவும் அரசு தயார்.

இனம் இனத்தோடு சேர்வதில் வியப்பில்லை. சமாதானப்பேச்சை விரும்பாதவர்கள் ஒன்றுசேர்ந்து விட்டால் சமாதானப் பேச்சுக்குச் சமாதிதான்!.

## தாக்குதல் சம்பவங்கள்

வடக்கு கிழக்கில் சமீப நாட்களாக புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

* முகமாலைப் பகுதியில் ஆகஸ்ட் 26இல் படையினருடன் இடம்பெற்ற மோதலில் மூன்று புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். கப்டன் இளஞ்சுடர் (சுப்பிரமணியம் சிவராசா — யாழ்ப்பாணம்), 2ஆம் லெப்டினன்ட் மன்னன் (சுந்தரலிங்கம் சிவகுமார் — யாழ்ப்பாணம்), 2ஆம் லெப்டினென்ட் அறிவமுதன் (ஆரோக்கியசாமி கமலேஸ் —மன்னான்) ஆகியோரே உயிரிழந்தவர்கள் என்று புலிகள் அறிவித்தனர்.
* பாலமோட்டையிலிருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த படையினரின் ஜீப் ஒன்று ஆகஸ்ட் 27இல் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானது. அதில் இருந்த மேஜர் ஜயதிலக்க கொல்லப்பட்டார். படைவீரர் ஒருவர் படுகாயமடைந்தார். ஜீப் பலத்த சேதம் அடைந்தது.
* திருகோணமலையில் தம்பலகாமம், புதுக்குடியிருப்புப் பகுதியில் தமிழ்க் குழு ஒன்றின் ஆதரவாளர் எஸ். சங்கர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் அன்றிரவு 8.25 மணியளவில் இடம் பெற்றது.
* வவுனியா கல்மடு பகுதியில் படையினரின் டிராக்டர் ஒன்று ஆகஸ்ட் 28இல் கிளைமோர் தாக்குதலுக்கு உள்ளானது. அதில் பயணம் செய்த ஐந்து இராணுவத்தினரும் அதே இடத்தில் பலியாகினர். கல்மடு இராணுவ முகாமுக்கு காலை ஆகாரம் கொண்டு சென்ற டிராக்டரே தாக்குதலுக்கு உள்ளானதாக படைத்தரப்பு தெரிவித்தது.
* மன்னார் முருங்கன் பகுதியில் சைக்கிளில் பொருத்தப்பட்ட குண்டை வெடிக்க வைத்து அதிரடிப் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதிரடிப்படையினர் திருப்பித் தாக்கியதில் ஒரு புலி உறுப்பினர் உயிரிழந்தார்.
* முல்லைத் தீவு சாலைக் கடற் பரப்பில் ஆகஸ்ட் 29இல் புலிகளின் படகுத் தொகுதி ஒன்றின் நடமாட்டத்தை ரேடர் மூலம் கண்டறிந்த படையினர் அங்கு சென்று தாக்குதல் நடத்தினர். புலிகளின் 12 படகுகள் அங்கு நின்றன என்றும் கடல் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரின் வருணகிரண அணியில் இரண்டு டோறாக்கள் விரைந்து சென்று தாக்குதல் நடத்தின என்றும் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலைக் கடற்படை அணியும் தாக்குதலுக்கு ஒத்துழைப்பு அளித்ததாக படைத்தரப்பு தெரிவித்தது.

படையினரின் தாக்குதலில் புலிகளின் இரண்டு படகுகள் முற்றாக அழிக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது. இந்த மோதலில் ஒரு சார்ஜன்ட் காயமடைந்தார்.

* மணலாற்றில் புலிகளின் திடீர்த் தாக்குதலில் ஒரு படைவீரர் காயமடைந்தார்.
* வவுனியாவில் நாட்டான் அரிப்பு என்ற இடத்தில் விசேட அதிரடிப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் ஒரு புலி உறுப்பினர் உயிரிழந்தார்.
* ஆனையிறவுக்கு வடக்காக ஏழு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சோரன் பற்றில் ஆகஸ்ட் 30இல் விமானப் படையின் இரண்டு கிபிர் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

# மலையகத்தைப் பங்கு போடும் கட்சிகள், தொழில் சங்கங்கள்

## யதார்த்த நிலை உணர்ந்து செயற்படாவிடில் 16 ஆசனங்கள் பகல் கனவு

இந்திய வம்சாவளியினருக்கு நாடாளுமன்றத்தில் 16 ஆசனங்கள் கிடைக்க வேண்டும் என்பது மலையகத் தலைவர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் ஆதங்கம்.

ஆனால் தற்பொழுது மலையகத்தில் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் புதிது புதிதாக உருவாகும் வேகத்தையும்—

அவற்றுக்கு மத்தியில் ஏற்பட்டு வரும் போட்டி மனப்பான்மையையும் நோக்கும் போது இது சாத்தியமா என்ற கேள்வி எழுகிறது.

யதார்த்த நிலையை உணர்ந்து செயற்படாவிட்டால் உள்ளதையும் இழக்க நேரிடலாம்.

தொழில் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட 23 தொழிற்சங்கங்கள் மலையகத் தொழிலாளர்களைப் பங்கு போட்டுக் கொண்டிருக்கின்றன. இவை அனைத்துமே தொழிலாளர்களின் சந்தாப்பணத்தைப் பெற்றுக் கொண்டாலும், விரல் விட்டு எண்ணக் கூடிய சில தொழிற் சங்கங்கள் மட்டுமே குறிப்பிடும்படியாகச் செயற்படுகின்றன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, புதிய ஜனநாயகக் கட்சி, தொழிலாளர் தேசிய சங்கம் ஆகியவை அரசியல் கட்சிகளாக அங்கீகரிக்கப்பட்டவை ஆகும்.

இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் அங்கமாக இயங்குகின்றது.

செங்கொடிச் சங்கம், புதிய செங்கொடிச் சங்கம், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் என்பன இடதுசாரி அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்படுகின்றன.

ஏனைய சிறு சிறு தொழிற் சங்கங்களும் தொண்டர் அமைப்புகளும் அவ்வப்போது சூழ் நிலைக்கேற்ப ஏதாவது ஓர் அரசியல் கட்சியுடன் தொங்கிக் கொள்கின்றன. இப்பொழுது புதிதாக இலங்கை ஜனநாயக மக்கள் முன்னணி என ஓர் அரசியல் கட்சியும் உருவாக்கப்பட்டுள்ளது.

இதுவரை தோட்டத் தொழிலாளர்கள் 22 கூறுகளாகப் பங்கு போடப்பட்டிருந்தனர். இனி 23 கூறுகளாகப் பிளவுபடப்போகின்றனர். இந்தப் பிரிவினைகள் தொழிலாளர்களுக்கு நன்மை அளிக்குமா?

பெரும்பான்மையாக வாழும் சிங்கள இன மக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, நவசமசமாஜக் கட்சி, சிஹல உறுமய, பூமிபுத்ர, ஜே.வி.பி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றில் அங்கம் வகிக்கின்றனர்.

அதேபோன்று முஸ்லிம்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி ஆகியவற்றில் அங்கம் வகிக்கின்றனர்.

தேர்தல் வந்துவிட்டால் இவர்கள் ஏதோ இரண்டு அல்லது மூன்று பிரிவுகளாகப் பிரிந்து தமது இனத்தவர்களின் வாக்குகள் சிதைந்து போகாமல் பார்த்துக் கொள்கின்றனர். நாடாளுமன்றத்தில் தமது ஆசனங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றனர். அங்கே வாதாடித் தமது உரிமைகளையும் மேலதிக சலுகைகளையும் பெற்றுக் கொள்கின்றனர்.

ஆனால் மலையகத்தின் நிலைமை நேர் மாறாக இருக்கின்றது. இன விகிதாசாரப்படி ஆகக் குறைந்த — மிகவும் கடைசிநிலையில் இருப்பவர்கள் இந்திய வம்சாவளித் தமிழர்கள். குறைந்த அளவான மக்களுக்குக் கூடுதலான கட்சிகளையும், சங்கங்களையும், தொண்டர் அமைப்புகளையும் உருவாக்கி கின்னஸ் சாதனை படைத்தவர்கள் மலையகத் தலைவர்கள். தத்தமது சுயலாபங்களுக்காக ஒற்றுமையைக் குலைத்துக் குளிர் காய்கின்றனர்.

1947இல் மலையகத்தில் இந்திய வம்சாவளியினருக்கு இலங்கை இந்தியன் காங்கிரஸ் என்ற ஒரே ஒரு அமைப்பு மட்டுமே இருந்த போது நாடாளுமன்றத்தில் இந்திய வம்சாவளியினரைப் பிரதிநிதித்துவம் செய்யும் எம்.பிக்கள் ஏழு பேர் இருந்தனர்.

காலப்போக்கில் பதவி மோகமும், தலைமைத்துவப் போட்டியும் அப்பாவி இந்தியத் தமிழர்களைத் துண்டாடி விட்டன. ஒன்று இரண்டாகி இரண்டு நான்காகித் தற்போது 23 துண்டுகளாக வெட்டிச் சிதைத்துவிட்டனர்.

பிரிவினைகள் கூடக் கூட உழைக்கும்

**மலையகக் கண்ணோட்டம்**

இரா. புத்திரசிகாமணி

தொழிலாளர்களின் பலமும் சக்தியும் குறைந்து கொண்டு போகின்றன.

பிரிந்து போகின்றவர்கள் முன்னவர்களைக் குறை கூறிக் கொண்டும் பலவிதமான குற்றச் சாட்டுகளை அடுக்கிக் கொண்டுமே போகின்றனர்.

தோட்டங்களில் எல்லா சுகபோகங்களையும் வசதிகளையும் அனுமதித்து வந்த ஒரு தோட்டக் கமிட்டித் தலைவர், பதவியில் இருந்து நீக்கப்பட்டால் அந்தத் தலைவர் புதியதொரு சங்கத்தில் சேர்ந்து தானும் தலைவராகித் தோட்டத்தை இரண்டாக்கி விடுவார்.

இதேபோன்றுதான் மலையகத் தொழிற்சங்க அரசியல்வாதிகளும் மலையக மக்களைப் பிரித்து வைத்து வேடிக்கை பார்க்கின்றனர்.

இது ஏன்? ஐக்கிய தேசியக் கட்சியாக இருக்கட்டும், பொதுஜன ஐக்கிய முன்னணியாக இருக்கட்டும் இவர்கள் தமது உறுப்பினர்களிடம் மாதா மாதம் சந்தாப் பணம் வசூலிப்பதில்லை.

ஆனால் மலையகத் தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களிடம் மாதா மாதம் சந்தாப் பணம் அறவிடுகின்றன. தொழிலாளர்களுக்குத் தெரியாமலே சந்தாப்பணம் சம்பளத்தில் பிடிக்கப்பட்டு சங்கங்களுக்குப் போய்விடுகின்றன. சங்கங்களின் வங்கிக் கணக்கு லட்சம் லட்சமாக அதிகரிக்கின்றது. அந்தப் பணத்தைக் கொண்டே சங்கம் நடத்துகின்றனர், கட்சி வளர்க்கின்றனர். வளர்ந்தபின் தொழிலாளர்களின் தோள்களில் சவாரி செய்கின்றனர். இப்படி ருசி கண்டவர்கள் எப்படித் தொழிலாளர்களை ஒன்றுபட விடுவார்கள்?

அண்மையில் பூர்த்தி செய்யப்பட்ட குடிசனக் கணிப்பீட்டின்படி இந்திய வம்சாவளித் தமிழர்கள் ஆகக் குறைந்தது 16 பேராவது நாடாளுமன்றம் செல்ல இடமுண்டு. அதனைப் பெற்றே தீர வேண்டும் என எல்லாத் தலைவர்களும் ஆதங்கப்படுகின்றனர்.

இதனை எப்படிப் பெறுவது? தலைவர்கள் ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி வீசிக் கொண்டும் ஒருவரை ஒருவர் காலை வாரி விடுவதிலும் தீவிரமாக இருக்கின்றனர். இவர்களுக்குள்ளேயே ஐக்கிய உணர்வு இல்லை என்றால் படிக்காத பாமரத் தொழிலாளர்கள் எப்படி ஒன்றுபடுவார்கள்?

பெரும்பான்மை தேசியக் கட்சிகள் கூட சிறுபான்மைக் கட்சிகளால் ஆபத்து ஏற்படும் என அஞ்சுகின்றன. பதவியைப் பாதுகாக்க சாத்தானுடனும் ஒன்று சேரத் தயாராகின்றனர். இப்படிப் பல பக்கங்களிலும் குட்டுப்பட்ட பின்னரும் இந்த மலையகத் தலைவர்கள் திருந்திய பாடில்லையே.

''ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்'' என்பதற்கு உதாரணமாகவே தலைவர்கள் இயங்குகின்றனர்.

பெரும்பான்மைக் கட்சிகள் இணைந்தால் சிறுபான்மையினருக்கு எதிர்காலமே இல்லை. இதைக் கருத்தில் கொண்டாவது மலையகத் தலைவர்கள் ஒன்றுபட வேண்டும். இல்லாவிட்டால் இருக்கும் ஸ்தானத்தையும் இழந்து விடுவதோடு, மலையகத்தவருக்கு 16 ஆசனங்கள் என்பது கூட பகல் கனவாகவே போய் விடும்.

# பிரிந்து சென்றோர் ஒன்று கூடி மலையகத்தில் புது அரசியல் கட்சி




இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணி அரசியல் கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் எஸ். இராஜரட்ணம், பி.பி.தேவராஜ், எஸ்.சதாசிவம், டி.பி.சென்னன், கே.கனகராஜ், ஏ.எம்.டி.இராஜன்.

மலையகத்தில் மேலும் ஒரு புதிய அரசியல் கட்சி உருவாகி உள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து வெளியேறிய அதிருப்தியாளர்கள் குழுவினரே இந்தப் புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளனர்.

இவர்களுடன் மலையக மக்கள் முன்னணியில் இருந்து வெளியேற்றப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கனகராஜும் இணைந்து கொண்டிருக்கின்றார்.

இதுவரை இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் ஒரு தொழிற் சங்கமாகவே இது இயங்கி வந்தது.

சங்கம் ஆரம்பித்து சில காலங்களுக்குள் 40 ஆயிரம் பேர் எம்முடன் இணைந்து விட்டனர் என்று இவர்கள் கூறுகின்றனர்.

தொழிற் சங்க வாதிகளினாலும் அரசியல்வாதிகளினாலும் இந்திய வம்சாவளி மக்கள் இதுவரை ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். என்றும் இவர்களுக்கு விமோசனம் தேடிக் கொடுப்பதே தமது நோக்கம் என்றும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு சுகததாஸ ஸ்போர்ட்ஸ் ஹோட்டலில் இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணி என்ற பெயரில் இக்கட்சியின் அங்குரார்ப்பண வைபவம் இடம் பெற்றது.

கட்சியின் தலைவராக டி.பி.சென்னனும் பொதுச்செயலாளராக எஸ்.சதாசிவம் எம்.பியும் தவிசாளராக பி.பி.தேவராஜ் எம்.பியும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக் கட்சியின் யாப்பு இம்மாதம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் உத்தியோக பூர்வமாகக் கட்சி பதிவு செய்யப்படும் எனக் கட்சியின் செயலாளர் எஸ்.சதாசிவம் தெரிவித்தார்.

அதன் பின் கட்சி நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

சுகததாஸ ஸ்போர்ட்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதேச அமைப்பாளர்களும், பிரதிநிதிகளும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

பி.பி.தேவராஜ் எம்.பி, எஸ்.சதாசிவம் எம்.பி, கே.கனகராஜ் எம்.பி மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் ஏ.எம்.டி.இராஜன், டி.பி சென்னன், எஸ்.இராஜரட்ணம் ஆகியோர் புதிய அரசியல் கட்சியின் நோக்கங்கள் பற்றி விளக்கம் அளித்தனர்.

* அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் நடத்தும் பேச்சுவார்த்தை ஆக்க பூர்வமாக அமைய வேண்டும். நாட்டில் நிரந்தர சமாதானத்திற்கு அது வழி வகுக்க வேண்டும்.
* தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படவேண்டும் பொருளாதார அபிவிருத்திக்கு வழி வகுக்க வேண்டும். 400 ரூபா சம்பள அதிகரிப்பை உடன் வழங்க வேண்டும்.
* அன்றாடம் இடம் பெற்று வரும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற சட்டவிரோத செயல்களைத் தடுக்க சட்டமும், ஒழுங்கும் நிலை நிறுத்தப்பட வேண்டும்.

மேற்கண்ட மூன்று தீர்மானங்களும் புதிய கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

# இராதா கிருஷ்ணனுக்கு எதிராக தொ.தே.சங்கம் போர்க்கொடி

மத்திய மாகாணத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளில் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் சீர் கேடுகளுக்கு அமைச்சரே பொறுப்பேற்க வேண்டும். தக்க சமயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கத்தவறிய மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் வி. இராதா கிருஷ்ணன் உடனடியாக தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும்.

இப்படி தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.வி.கந்தையா கோரிக்கை விடுத்துள்ளார்.

மலையகத்தில் உள்ள பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள்; மலையக மக்கள் எதிர் கொள்ளும் அரசியல், பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுக்குழு அண்மையில் கூடி ஆராய்ந்தது அப்பொழுதே மேற் கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் டி. அய்யாத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இப்பிரதேச தமிழ் பாடசாலைகளில் இடம் பெறும் நிர்வாகச் சீர்கேடுகள், ஊழல்கள் தொடர்பாக நீண்டநேரம் விவாதிக்கப் பட்டது.

''பத்திரிகைகளும், ஏனைய தகவல் துறை ஊடகங்களும் தமிழ் பாடசாலைகளில் இடம் பெறும் சம்பவங்களை அன்றாடம் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றன.

''ஆனால் பொறுப்பான அமைச்சரும் உயர் அதிகாரிகளும் ஆரம்பத்திலேயே உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டனர்.

''இவர்களுடைய அசமந்தப் போக்கே இன்று விபரீதங்களை ஏற்படுத்தி இருக்கிறது.

''எனவே இப்பாடசாலைகளில் நிர்வாகத்திற்கு பொறுப்பான அமைச்சர் வி. இராதாகிருஷ்ணனே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும். முறைகேடுகளை நிவர்த்தி செய்யத் தவறிய அவர் தனது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும்'' இப்படித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக சங்கத்தின் செயலாளர் கந்தையா தெரிவித்தார்.

அமைச்சர் இராதாகிருஷ்ணன் தமிழ் கல்வி அமைச்சராக பொறுப்பேற்ற பின் மத்திய மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் பெருமளவில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

வளங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் இதை எல்லாம் செய்கிறார். படிப்பிக்க வேண்டிய ஆசிரியர்கள் பண்பு தவறி நடந்தால் பாவம் இந்த அமைச்சர் என்ன செய்வார்?'' இப்படி இப்பிரதேச மக்கள் கேட்கின்றனர். இதற்குப் பதில் என்ன?

## 180 ஆம் நாள் நினைவுகள்

1986 — 05 — 05



2001 — 03 — 04

செல்வன்

**அம்பலவாணர் சிவசங்கரன்**

(மண்/முருங்கன் மகாவித்தியாலயம்)

அலையோரம் கதை எழுதி
அழியவிட்ட பாவிகள் நாம்,
மலைபோல் உந்தன் வாழ்வு மலரும்
என்றிருந்தோம்,
சிலையாக்கிய சிவனுக்கும்
இதயமில்லை,
ஆறுதிங்களென்ன உயிருள்ளவரை
உந்தன் நினைவு ஆறாத்துயரமே

கற்கிடந்த குளம்,
முருங்கன்.

— குடும்பத்தினர்









# சுடர் ஒளி

## சுடர் ஒளிக்கு வயது ஒன்று வாசக அன்பர்கள் வாழ்த்து

சுடர் ஒளி ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்து இந்த இதழுடன் இரண்டாவது வருடத்தில் பிரவேசிக்கிறது.

சுடர்ஒளியின் முதலாவது இதழ் புத்தாயிரமாம் ஆண்டில் அதாவது 2000 ஆம் ஆண்டில் செப்டெம்பர் 10 ஆம் திகதி வெளிவந்தது.

எந்தக் குடும்பத்திலும் ஒரு குழந்தையின் முதலாவது பிறந்தநாள் சிறப்புப் பெறுகிறது.

இந்த நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் கடல் கடந்த நாடுகளிலிருந்தும்கூட வாசக அன்பர்கள் சுடர் ஒளிக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து வருகிறார்கள்.

சுடர் ஒளி மேல் வைத்திருக்கும் அளவற்ற அபிமானத்தால் இளம் சிட்டு ஒன்று தம்மை முழுமையாகவே சுடர் ஒளிப் பிரதிகளால் அலங்கரித்துக்கொண்டு விநோத உடைப் போட்டியில் போஸ் கொடுத்த காட்சி கடந்த வாரம் முன் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டு இருந்தது அல்லவா?

அந்தப் படத்திற்கு எழுதப்பட்ட குறிப்பு சுடர் ஒளியின் முதலாவது பிறந்த தினத்தை எல்லோருக்கும் நினைவு படுத்திவிட்டது. அதனால் வாழ்த்துக்கள் வந்து குவிந்துவிட்டன.

சுடர் ஒளி உங்கள் பத்திரிகை. உங்களின் அன்பு, அபிமானம், பற்று, பாசம் ஆகியவற்றினால்தான் சுடர் ஒளி ஒரு வருட காலத்தில் வியத்தகு வளர்ச்சி அடைந்து வரலாறு படைத்திருக்கிறது. உங்கள் நெஞ்சில் நீங்காத இடம்பெற்று நிலைத்து நிற்கிறது.

வாரமலராக மட்டுமல்லாமல் வெகு விரைவில் நாளிதழாகவும் சுடர் ஒளி வெளிவரப்போகிறது.

சுடர் ஒளியில் வழமையான தீஞ்சுவை அம்சங்களுடன், சிறுவர்களுக்கான இளஞ்சுடர் பகுதியும், வெளியில் சொல்ல முடியாத பல்வேறு நோய்களினால் அவதிப்படுபவர்களுக்கான இலவச மருத்துவ ஆலோசனைப் பகுதியும் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

சுடர் ஒளி வார இதழ் இந்த இரண்டாவது ஆண்டில் இன்னும் எத்தனையோ புதிய அம்சங்களுடன் மேலும் சிறப்பாக வெளி வரும் என்று உறுதி கூறுகிறோம்.

உங்கள் சுடர் ஒளி அழகானது, அருமையானது, துணிச்சலானது என்று வாசகர்களாகிய நீங்கள் பெருமைப்படுவது எமக்குத் தெரியும். அதற்குப் பங்கம் ஏற்படாத வகையில் தொடர்ந்து பணி செய்வது எங்கள் பொறுப்பு.

உங்கள் சுடர் ஒளிக் குழந்தையைத் தொடர்ந்து அன்புடன் அரவணைத்துச்சீராட்டி வளர்த்தெடுப்பது உங்கள் பொறுப்பு.

அன்பு உரிமையுடன்,

ஆசிரியர்.









# திண்ணமற்ற மக்கள் தலைவர் மூப்பனாரின் நிறைவேறாத ஆசை


மூப்பனார்

தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார் காலமானது தமிழக அரசியலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தாமல் விட்டிருக்கலாம். ஆயினும் ஒரு நீண்ட வெற்றிடத்தை அது ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் ஐயம் இல்லை.

தமிழக அரசியலில் ஒரு அமைச்சராகவோ அல்லது முதலமைச்சராகவோ பதவி வகிக்காதவர். ஆனால் அவற்றிற்கான தகுதிகள் இல்லாதவர் அவர் என்று சொல்வதற்கில்லை. முதலமைச்சர்களையும் பிரதமர்களையும் உருவாக்கக் கூடிய 'கிங் மேக்கர்' என்ற அந்தஸ்து அவருக்கு இருந்தது. ஆனால் அந்தப் பதவிகளைத் தாமே வாரிச் சுருட்டிக் கொள்ளும் குள்ள நரித்தனம் அவருக்கு இல்லாமல் போய் விட்டது என்னவோ உண்மைதான்.

நேர்மையான அரசியல்வாதி என்று பெயரெடுத்தவர் மூப்பனார். ஊழல்கள் எதிலுமே சம்பந்தப்படாதவர். எதிரிகளை உருவாக்கிக் கொள்ளாதவர்.

தமிழகத்தில் ஒரு காலத்தில் முதலமைச்சராக இருந்த கர்மவீரர் காமராஜரின் சீடன் என்று தம்மைக் கூறிக்கொண்டவர். அந்தக் காமராஜரின் ஆட்சியை மீண்டும் தமிழகத்தில் ஏற்படுத்துவேன் என்று உறுதி பூண்டவர். அந்தக் கனவை அவர் நிறைவேற்றும் காலம் வரும் முன்னரே காலன் அவரைக் கவர்ந்து சென்று விட்டான். அது துரதிஷ்டவசமானது.

காமராஜர் தமிழகத்தை ஆண்ட காலம் மிகவும் சிறப்பு மிக்கது என்பது உண்மைதான். காங்கிரஸ் கட்சியைக் கட்டி எழுப்புவதற்காக முதலமைச்சர் பதவியிலிருந்து ஒதுங்கினார் காமராஜர். பக்தவத்சலம் முதலமைச்சரானார். அவருடைய ஆட்சிக் காலத்தில்தான் எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் தன்னைப் பலப்படுத்திக் கொண்டது.

அறிஞர் அண்ணா தலைமையில் திராவிட இயக்கம் ஆட்சிக்கு வந்தது. அதன் பின்னர் திராவிட இயக்கங்கள் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்த போதிலும் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி ஏற்படவே இல்லை. என்றோ ஒரு நாள் மூப்பனார் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியைக் கொண்டுவருவார் என்று தமிழகத்தில் ஒரு சாரார் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஆனால் மூப்பனாரின் மரணம் அந்த நம்பிக்கைக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டது.

மூப்பனார் தமது அரசியலின் ஆரம்ப காலத்தில் காங்கிரஸ் கட்சியின் முக்கிய பிரமுகர் என்ற கௌரவத்தைப் பெற்றிருந்தார். பிரதமர்கள் இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி ஆகியோரின் அன்பினையும் பெற்றிருந்தார். ஆனால் பிரதமர் நரசிம்மராவுடன் அவர் இணங்கிப் போகவில்லை. காரணம் ஜெயலலிதாவுடன் நரசிம்மராவ் தேர்தல் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டதை மூப்பனார் ஏற்றுக்கொள்ளாதது தான்.

ஜெயலலிதாவுடன் கூட்டு வைத்துக் கொண்டதை எதிர்த்து காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்றவர் மூப்பனார். தனக்கென ஒரு தனியான கட்சியை ஆரம்பித்துக் கொண்டவர். தமிழகத்தில் ஜெயலலிதாவின் ஊழல் ஆட்சி ஏற்பட்டால் எல்லோருக்கும் அழிவுதான் வரும் என்று கூறியவர். ஆனால் பின்னர் அதே ஜெயலலிதாவைப் புரட்சித் தலைவியாக ஏற்றுக் கொண்டவர் மூப்பனார்.

தமிழக சட்டசபைத் தேர்தல் வரும் வேளையில் எல்லாம் காமராஜர் ஆட்சியைக் கொண்டு வர முயலுவார் மூப்பனார். ஆனால் தமிழகத்தில் காங்கிரஸை இரு பிரிவுகளாக்கி அதனைப் பலவீனப்படுத்திய அவரால் அதனைப் பலம் பெறச் செய்ய முடியவில்லை.

கருணாநிதியுடன் அல்லது ஜெயலலிதாவுடன் கூட்டணி சேர்ந்து தமது கட்சிக்கு சில சட்டசபை உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்ளத்தான் அவரால் முடிந்தது. அவ்விதம் கூட்டணி அமைத்து வெற்றிகளைப் பெறும் வேளைகளில் எல்லாம் ஆட்சிக்கு வந்த முதலமைச்சருக்கு அந்தப் பதவியைத் தேடித் தந்தவர் மூப்பனாரே என்று கூறிக் கொண்டார்கள் அவருடைய ஆதரவாளர்கள்.

தேர்தல்கள் நடைபெறும் வேளைகளில் எல்லாம், சாம்பாருக்குத் தாளித்துப் போடும் கறிவேப்பிலைபோல் பயன்பட்டவர் மூப்பனார். தமது கட்சிக்குத் தனித்தன்மையை ஏற்படுத்தித் தர அவர் முயலவில்லை என்ற கருத்து அவருடைய ஆதரவாளர்கள் மத்தியில் இருந்தது. இதன் காரணமாக மூப்பனாரின் தளபதி என்று போற்றப்பட்ட முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கட்சியிலிருந்து வெளியேறினார். தமக்கென ஒரு கட்சியை ஆரம்பித்தார்.

தமிழ் மாநில காங்கிரஸ் கருணாநிதியுடன் சேர்ந்திருந்த காலத்தில் அகில இந்திய ரீதியில் உச்சம் பெற்றிருந்தது. அவ்வேளையில் இந்தியப் பிரதமர் பதவியே மூப்பனாரைத் தேடி வந்தது என்று பரபரப்பாகப் பேசப்பட்டது. பின்னர் ஜெயலலிதாவுடன் கூட்டு வைத்துக் கொண்ட போது மூப்பனார் கேவலமாக நடத்தப்பட்டதை தமிழகம் கண்டது.

தேர்தலில் ஜெயலலிதாவுக்கு சார்பான அலை வீசியதால் அதன் பயன்பாடு மூப்பனாருக்கும் கிடைத்தது. ராஜ்ய சபைக்கும் ஒரு உறுப்பினரை ஜெயலலிதாவிடம் சுவீகரித்துக் கொண்டார்.

பத்தி ஏடு

மூப்பனாருக்கு ஒரு ராஜ்ய சபை உறுப்பினர் பதவியைக் கொடுத்தபடியால் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸின் எதிர்ப்பை ஜெயலலிதா பெற்றுக் கொண்டார்.

மூப்பனாருக்குக் கிடைத்த ராஜ்ய சபை உறுப்பினர் பதவியை அவர் தமது மகன் கோவிந்தவாசனுக்குக் கொடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. கட்சியிலும் அதற்கு ஏகமனதான ஆதரவு இருந்தது. ஆயினும் மூப்பனார் தமது கட்சிக்குள் பரம்பரை அரசியலை ஏற்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. கட்சியின் தனாதிகாரிக்கு ராஜ்ய சபை உறுப்பினர் பதவி கிடைத்தது.

தனது மகனே தனது கட்சியின் எதிர்காலத் தலைமைப் பதவியை ஏற்க வேண்டும் என்ற ஆசை இந்தியாவில் எந்த அரசியல் தலைவர்களுக்கும் ஏற்படாமல் விட்டது இல்லை.

நேருவின் பின் இந்திரா, இந்திராவின் பின் ராஜீவ்காந்தி, இன்று ராஜீவின் பின் மனைவி சோனியா அல்லது மகள் பிரியங்கா என்று வாரிசு வரலாறு நீளும் வாய்ப்பு இருக்கிறது.

கருணாநிதியின் பின் அவர் மகன் ஸ்டாலின் வர வேண்டும் என்ற உத்வேகம் தமிழ் நாட்டில் எழுந்து அது மங்கிப்போனதையும் உலகம் கண்டது. ராமதாஸ் தனது மகனைத் தலைவனாக்க முயலுவதையும் தமிழகம் காண்கிறது இன்று.

மூப்பனாருக்கு அவர் உயிருடன் இருந்த போதே தமது மகனை வாரிசாகப் பிரகடனம் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது.

ஆயினும் மூப்பனார் ராஜ்ய சபையின் ஓர் உறுப்பினர். தமது கட்சியின் அடுத்த உறுப்பினராக தமது மகனையே உருவாக்கிக் கொள்ள அவர் விரும்பவில்லை.

மூப்பனார் காலமாகிய பின்னர் கட்சித் தலைமையை அவருடைய மகனுக்கே கொடுத்திருக்கிறார்கள். எனவே தந்தையின் மரணத்தின் மூலம் ஏற்படும் ராஜ்ய சபை உறுப்பினர் வெற்றிடமும் மகன் கோவிந்தவாசனுக்கே கிடைக்கலாம்.

ஆயினும் அப்பாவின் பதவியை மகனுக்குக் கொடுப்பதன் மூலம் கட்சியின் எதிர்காலம் வலுப் பெறும் என்று கூற முடியாது. பிரிந்து சென்ற சிதம்பரத்தை மீண்டும் கட்சிக்கு கொண்டு வரவேண்டும். அதன் மூலம் தமிழ் மாநில காங்கிரஸ் மீண்டும் தன்னைப் பழைய நிலைக்கு உயர்த்திக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

— கதாசி

# ஆலயங்கள் புனரமைப்பா, அகதிமுகாம் பராமரிப்பா?

## இவற்றில் எது முக்கியம் என்று கேள்வி எழுப்பப்படுகிறது

குடாநாட்டில் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்காக அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் நிறுவப்பட்டவை நலன்புரி முகாம்கள் என அழைக்கப்படும் அகதி முகாம்கள்.

அவற்றின் நிலை குறித்து யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அபாய அறிவிப்பு விடுத்திருக்கிறது.

சரியான — நீண்டகால — திட்டமிடல் இன்றி அமைக்கப்பட்டதாலும் அவற்றைச் சீராகப் பராமரிக்காமையினாலும் இந்த முகாம்களில் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளும் சமூகப் பிரச்சினைகளும் தலைதூக்கி இருக்கின்றன என்று அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் பல குறிகளில் இருந்து மாறி மாறி இடம்பெயர்ந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

ஆனால் அவர்களில் பெரும்பாலானோருக்கு இடப்பெயர்வு வாழ்க்கை நிரந்தரமாகிப் போனதால் எப்படியோ அவர்கள் மாற்று வாழ்விடங்களைத் தேடிக்கொண்டு விட்டனர்.

சற்று வசதி படைத்தோர் ஆரம்பத்தில் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கி விட்டுப் பின்னர் தனியாக வீடுகளை அமைத்துக்கொண்டு அல்லது வாடகைக்கு வீடுகளைப் பெற்றுக்கொண்டு வசிக்கத் தொடங்கி விட்டனர்.

ஆனால் வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்ட ஆயிரக்கணக்கான மக்கள் நீண்டகாலமாக வாழ்விடம் இன்றி இந்த நலன்புரி முகாம்களில் தங்கி வாழ்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்து முகாம்களில் வசிப்போரை 1990களின் முன்பும் பின்பும் இடம்பெயர்ந்தோர் என்றும், 2000 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்தோர் என்றும் இரு பெரும் பிரிவுகளாக வகுத்தால் மொத்தம் 5 ஆயிரத்து 496 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 319 பேர் நலன்புரி முகாம்களில் வசிக்கின்றனர். இது அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோக பூர்வ புள்ளி விவரம்.

அந்தந்தப் பகுதி பிரதேச செயலகங்களால் நிர்வகிக்கப்படுகின்ற இந்த முகாம்களின் ஒழுங்கமைப்பு, வடிவமைப்பு, நீர்வசதி, மலசலகூட வசதி என்பவற்றில் பாரிய குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.




நலன்புரி நிலையங்களில் உள்ள குடிசைகளின் கூரைகள் பலத்த சேதமடைந்து விட்டன. குடாநாட்டில் இன்னும் சில நாட்களில் பருவமழை தொடங்கப் போகிறது. அப்போது இந்த நிலையங்களில் வசிக்கும் மக்கள் பெரும் சிரமங்களைச் சந்திக்க வேண்டிய அவல நிலை எதிர்நோக்கப்படுகிறது.

குடாநாட்டில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்கு என பெரும் தொகை நிதி தமிழ்க் கட்சி ஒன்றின் ஊடாக — அதன் வசதிகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப அள்ளி வீசப்பட்டு வருகிறது.

ஆலயங்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் அள்ளி வழங்கப்படுகின்ற — வழங்கப்பட இருக்கின்ற — நிதி பற்றிய விவரங்கள் பெருந்தொகைப் பணச் செலவில் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றன.

யுத்தத்தால் இடிந்துபோன சேதமடைந்த ஆலயங்கள் புனரமைக்கப்பட வேண்டியவை தான். ஆனால், அந்த ஆலயங்கள் மீண்டும் எந்த வேளையிலும் தாக்கப்படும் — அழிவுக்குட்படும் — நிச்சயமற்ற நிலைமை நீடிக்கிறது. இத்தகைய சூழலில் பல லட்சக் கணக்கான பணத்தைக் கொட்டி அவற்றைப் புனரமைப்பதை விட —

யுத்தத்தால் பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குத் தகுந்த வசதிகள் கொண்ட நலன்புரி முகாம்களை அமைப்பதற்கும், அமைக்கப்பட்ட முகாம்களைப் பராமரிக்கவும் அவர்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் மிக அதிக எண்ணிக்கையான இடம்பெயர்ந்த மக்கள் தங்குவதற்கான பாரிய முகாம்களை அமைத்து அவற்றைத் தயார் நிலையில் பேணுவதற்கும் திட்டங்களைத் தீட்டி அவற்றுக்குப் பெருமளவு நிதியை ஒதுக்குவதற்கு முன்னுரிமை கொடுப்பது நல்லதல்லவா? சம்பந்தப்பட்டோர் சிந்திக்க வேண்டும்.

குடாநாட்டு மக்களின் புனர்வாழ்வு, அபிவிருத்தி என்பன அரசியல் நோக்கங்களுக்கு உட்பட்டிருக்கும் வரை, அவற்றில் எந்தவித பயனும் கிட்டப்போவதில்லை. அவை அர்த்தமில்லாத — அத்திபாரம் இன்றி அமைக்கப்படும் கட்டடங்கள் போலவே — இருக்கும்.

### சலூன்களின் முன் மாதிரி

யாழ். ஆஸ்பத்திரியில் அடுத்தடுத்துப் பல 'எய்ட்ஸ்' நோயாளர்கள் இனங்காணப்பட்டிருப்பதைத் தொடர்ந்து 'எய்ட்ஸ்' பற்றிய பீதி யாழ். மக்களிடையே பரவியிருக்கின்றது.

எங்கே 'எய்ட்ஸ்' தனக்கும் தொற்றி விடுமோ என்ற பீதியில் குழம்பிப் போயிருப்பவர்களோ பலர்.

சவர அலகுகளைப் (பிளேட்) பயன்படுத்தி முகச் சவரம் செய்யும் சலூன் உரிமையாளர்கள் விழிப்பாக இருந்து 'எயிட்ஸ்' பரவாது தடுக்க பொறுப்புணர்ச்சியுடன் உதவவேண்டும் என்று கோரும் வாசகர் ஒருவரின் ஆதங்கத்தை யாழ். பத்திரிகை ஒன்று வெளியிட்டிருந்தது.

'எயிட்ஸ்' ஒருவருக்குத் தொற்றுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று எச்.ஐ.வி கிருமிகள் இரத்தத்தில் நேரடியாகக் கலத்தல். இதற்கு வாய்ப்பாக அமையும் ஏது நிலைகளில் ஒன்று முகச் சவரத்தின்போது ஏற்படும் சிறு காயங்களும் அவற்றின் ஊடாக எச்.ஐ.வி கிருமிகள் இரத்தத்தில் கலப்பதுமே ஆகும்.

வாசகரின் வேண்டுகோள் பத்திரிகையில் வெளியானதையொட்டி தங்களின் தார்மீகக் கடமையை — சமூகப் பொறுப்புணர்ச்சியை — புரிந்து கொண்ட பல சலூன் உரிமையாளர்கள் முகச்சவரம் செய்பவரும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியான பிளேட்டுக்களைப் பயன்படுத்துவதற்கும் சவரம் செய்யும் உபகரணங்களின் தூய்மையைப் பேணவும் சம்மதித்திருக்கின்றனர்.

இந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதற்குத் தாங்கள் முன்வந்திருப்பதைச் சில பிரதேசங்களைச் சேர்ந்த சிகையலங்கரிப்பாளர் சங்கங்கள் பகிரங்கமாகப் பொது மக்களுக்கு அறிவித்திருக்கின்றன. நல்ல அறிவிப்பு; வரவேற்கத்தக்கதே. அதே நேரம் 'எய்ட்ஸ்' பரவுவதற்கு முகச்சவரம் செய்து கொள்வதுதான் ஒரே காரணம் என்ற தவறான — அறிவற்ற — முடிவுக்கு மக்கள் வந்து விடக்கூடாது என்றும் —

முறைகேடான — பாதுகாப்பற்ற — உடலுறவு உட்பட பல வேறு பிரதான செயல்களே எய்ட்ஸ் தொற்றுவதற்கு முக்கிய காரணங்கள் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் சிகையலங்கரிப்பாளர் சங்கங்கள் கேட்டிருக்கின்றன.

எது எவ்வாறாயினும் 'எய்ட்ஸ்' என்றால் என்ன என்று கேட்ட காலம் போய் எய்ட்ஸ் வராமல் தடுப்பதற்கான முன்காப்பு முயற்சிகளில் யாழ். சமூகம் தீவிரமாக இறங்கியிருப்பது வரவேற்க வேண்டிய விடயமே.

— வலிகாமத்தான்

# திருமலை துறைமுக ஊழியர்கள் கலக்கம்

## எதிர்காலம் எப்படி இருக்கும்? வேலை பறிபோகுமா?

ஆசியக் கடற்பிராந்தியத்தில் கேந்திரமாக விளங்கும் திருகோணமலைத் துறைமுகத்தில் தற்போது 'பூதம்' ஒன்று கிளம்பியுள்ளது.

துறைமுக ஊழியர்கள் தாம் மிகவும் இரகசியமான முறையில் அமுக்கப் பட்டுவிட்ட மர்மம் ஒன்றை அம்பலத்துக் குக் கொண்டு வந்துள்ளனர்.

அரசாங்கமும் பிறிமா நிறுவனமும் செய்து கொண்ட ஒப்பந்தமே இந்த நிலைக்குக்காரணம் என்று கூறப்படுகிறது.

தற்போது திருகோண மலைத் துறை முகத்தின் வேலைகள் யாவும் முற்றுமுழுதாகத் துறைமுக ஊழியர்கள் மூலமாகவே நடைபெற்று வருகின்றன.

ஒப்பந்தம் காரணமாக எதிர்காலத்தில் இனி என்ன நடக்குமோ தெரியாது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் துறைமுகச் சரக்கு ஏற்றி இறக்கல் வேலைகள் யாவும் முற்றாகப் பிறிமா நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று அறியப்படுகின்றது.

இதனால் திருகோணமலைத் துறை முகத்தில் வேலை செய்யும் தொழிலாளர் களின் எதிர்காலம் கேள்விக்குறியா கியுள்ளது.

துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து இறக்கப்படும் பொருட்களை ஏற்றி இறக்கல், துறைமுகத்திலிருந்து பொருட் களை அப்புறப்படுத்தல், லொறிகளில் பொருட்களை ஏற்றி அனுப்புதல் போன்ற வேலைகள் ஒவ்வொன்றும் தொழிலாளர் குழுக்கள், லொறிச் சங்கங்கள், நாட்டாண்மை சங்கங்கள் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டு வருவது வழக்கம்.

இதனால் துறைமுகத்தைச் சூழவுள்ள பலருக்குத் தொழில் வாய்ப்புக்களும், லொறி சங்கங்கள் வருவாய் ஈட்டும் வாய்ப்பும் ஏற்பட்டு வந்தன.

திருகோணமலைத் துறைமுகம் துறைமுக அதிகார சபையினால் இது வரை நிர்வகிக்கப்பட்டு வந்ததால் இலங் கையர்கள் இத்தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர்.

ஒப்பந்தம் காரணமாக துறைமுக அதிகார சபையின் கையில் இருந்து இச்சாதகமான நிலைகள் பறிக்கப்படுவ தால் இலங்கையின் வருமானத்தில் பல இலட்சம் ரூபா நட்டம் ஏற்படும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை துறைமுக அதிகார சபைக் குக் கிடைத்து வந்த வருமானமும், அப்பகு தித் தொழிலாளர்கள், மற்றும் லொறிப் போக்குவரத்துச் சேவையினருக்குக் கிடைத்து வந்த வருமானங்களும் இனிப் பிறிமா நிறுவனத்திற்கே போய்ச் சேர்ந்து விடும்.

திருகோணமலைத் துறைமுகத்தில் சரக்கு ஏற்றி இறக்கும் அதிகாரம் பிறிமா தனியார் நிறுவனத்திடம் கைமாற்றப்பட்ட தாகக் கேள்வியுற்றதும் துறைமுக ஊழியர் கள் ஒரு கணம் அதிர்ந்தே போனார்கள்.

துறைமுக ஊழியர்களின் ஆறு தொழிற்சங்கங்களும் உஷாராகின.

சட்டப்படி வேலை செய்து காங்கேசன் துறையை நோக்கிச் செல்லவிருந்த 'மேர்க்ஸ் யொல்கொட' என்ற சரக்குக் கப்பலைத் தாமதப்படுத்துவதன் மூலம் உலக நாடுகளின் 'கவனத்தை' ஈர்க்கத் தொழிற் சங்கங்கள் திட்டமிட்டன.

அத்துடன் மகஜர்கள் மூலம் ஜனாதிபதிக்கும், உயர் அதிகாரிகளுக்கும் இப்பிரச்சினையை கொண்டு செல்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. நீதி கிடைக்காது விட்டால் மறியல் போராட்டம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

திருகோணமலைத்துறை முகவேலைகளை பிறிமா நிறுவனத்திடம் கையளிக்கும் செயல் ஆபத்தானதும், விபரீதமானதும் என்று ஆறு தொழிற் சங்கங்களும் துறைமுக அபிவிருத்தி மற்றும் நீரியல் அபிவிருத்தி அமைச்சர் ரொனி டி.மெல்லிடம் தெரிவித்தன.

ஒப்பந்தம் காரணமாக திருகோண மலைத் துறைமுகத்தின் வருமானத்தில் 36 சத வீதத்தை துறைமுக அதிகார சபை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

திருமலைத் துறைமுகத்தில் கப்பலில் மா ஏற்றப்படுகிறது



கோதுமை தானியக்கப்பலின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 4 கோடியே 40 லட்சம் ரூபாவும் கோதுமை மாக் கப்பல்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 1 கோடியே 80 லட்சம் ரூபாவும், கோதுமைக்குறுணல்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 2 கோடியே 20 லட்சம் ரூபாவும் இல்லாது போகும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டி உள்ளன.

துறைமுக நடவடிக் கைகள் அனைத்தும் பிறிமா நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படுவதன் மூலம் துறைமுக ஊழியர்களின் சேவை நல பாதுகாப்புத் தன்மையும் ஆபத்துக்கு உள்ளாகி இருக்கிறது.

கைமாறிப் போகும் துறைமுகத்தை மீட்பதற்கான போராட்டத் தின் முதற்கட்டமாகச் சட்டப்படி வேலையை துறைமுக ஊழியர்கள் மேற்கொண்டனர். ஒகஸ்ட் 11 ஆம், 12ஆம் திகதிகளில் சட்டப்படி வேலைப்போராட்டம் நடைபெற்றது.

இது சம்பந்தமாகத் துறைமுக அதிகார சபைத்தலைவருடன் பேசி முடிவெடுப்பதற்காகச் சென்ற திருகோணமலை வதிவிட முகாமையாளர் 13 ஆம் திகதி 'பக்ஸ்' செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

பிறிமா பாலத்தில் நடைபெறும் ஏற்றுமதி — இறக்குமதி தொடர்பான சகல வேலைகளும் திரு மலைத்துறைமுக ஊழியர் களுக்கு உரியவைதான். அதில் எந்த வித மாற்ற மும் இல்லை என்று அப் பக்ஸ் செய்தியில் தெரி விக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து சட்டப் படி வேலைப் போராட்டம் கைவிடப்பட்டது.

ஆனால் இதுவல்ல பிரச்சினை. சென்ற வருட இலாபத்தில் 36 சத வீதத்தை இழக்க நேரிடும் அபாயமே சிந்திக்க வைத்துள்ளது.

துறைமுக வேலைகள் பிறிமா நிறுவனத் திடம் கையளிக்கப்படுவதால் தொழிலாளர்க ளின் எதிர்காலம் அபாயத்துக்குள்ளாகும். வேலை இல்லாப் பிரச்சினை ஏற்படும். துறைமுக ஊழியர்களின் நிலை என்ன? இவர்களில் தங்கியிருக்கும் குடும்பங் களின் கதி என்ன என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

இவற்றை எல்லாம் சிந்தித்துப் பார்க்காமல் பிறிமா நிறுவனத்திடம் ஒப்படைத்தது ஏன்? கடந்த மே மாதம் பிறிமா நிறுவனத்துக்கும் அரசுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் பற்றித் துறைமுக அதிகார சபைத் தலைவருக்கோ, உயரதிகாரிகளுக்கோ, பணிப்பாளர் சபைக்கோ, தொழிற்சங்கங்களுக்கோ தெரிந்திருக் காமை விந்தையானது.

உலக வங்கியும், அரசும், பிறிமா நிறுவனமும்தான் இதில் சம்பந்தப் பட்டிருக்கின்றன. 1999ஆம் ஆண்டு ஐந்து கோடியே 20 லட்சம் ரூபாவும் 2000 ஆம் ஆண்டு ஐந்து கோடியே 40 லட்சம் ரூபாவும் தேறிய இலாபங்களை ஈட்டித் தந்த நிறுவனம் 570 கோடி அமெரிக்க டொலருக்கு விற்கப்பட வேண்டிய அவசியம் என்ன? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் முழு அதி காரமும் பிறிமா நிறுவனத்துக்கு வழங்கப் பட்டதாக நினைத்து அதன் முகவர்கள் புதிய ஆட்களையும் திரட்டியுள்ளனர்.

பிறிமாவின் நோக்கங்களில் ஒன்று யாழ்ப்பாணத்துக்குச் செல்லுகின்ற கோதுமை மாவைத் தவிர ஏனைய பிரதேசங்களுக்குச் செல்லும் கோதுமை மாவை லொறிகள் மற்றும் கொள்கலன்கள் மூலம் அனுப்புவதுதான்.

இத்திட்டம் தொழிற்சங்க நடவடிக்கை கள் மூலம் சற்றுப் பிசுகி விட்டாலும் இது வெறும் கண்துடைப்புத்தான் என்று கருதுவதற்கும் இடமுண்டு.


இதுவரை கப்பல்களைப் பதிவு செய்து வந்த உணவு சந்தைப்படுத்தல் திணைக்களமும் மூடை முடிச்சுகளைக் கட்டி விட்டது. இனிமேல் தனக்குத் தேவையான கப்பல்களைப் பிறிமாவே பதிவு செய்து கொள்ளும்.

இந்த வகையில் கோதுமைத் தானி யத்தை இறக்குமதி செய்வதற்காக பிறிமா பதிவு செய்த முதலாவது கப்பல் கடந்த 16ஆம் திகதி அமெரிக்காவில் இருந்து வந்துள்ளது. பிறிமா நிறுவனம் காலப் போக்கில் துறைமுக ஊழியர்களை வேண் டாமென்று கூறி அதற்கான தொகையைக் கட்டுவதற்குச் சம்மதிக்கலாம். அப்போது துறைமுக ஊழியர்களின் நிலைமை கவலைக்குரியதாகிவிடும்.

எது எவ்வாறிருப்பினும் திருகோண மலைத் துறைமுகம் இப்போது மாயை யிலேயே சிக்கி உள்ளது.

— ரஹ்மான்


# நோய் தீர்க்கும் அதிசய வர்மக்கலை




வர்மக்கலை என்றால் என்ன என்ற கேள்வி அநேக வாசகர்களுக்கு தோன்றலாம். இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பதினெண் சித்தர்கள் வழங்கிய அரிய கலையே இவ் வர்மக்கலையாகும். இது காலத்தால் மக்களால் அறிய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. இங்கு முக்கியமான ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். பதினெண் சித்தர்களில் மூத்த சித்தர் நாம் எல்லோரும் அறிந்த அகத்திய பெருமான் ஆவார்.

அவராலும் அவரது சீடர்களாலும் உலகுக்கு வழங்கப்பட்ட அருட்கொடையே இவ் வர்மக்கலையும் முறையாகக் கற்றுத் தேர்ந்த ஒரு டாக்டரால் சுகமாக்க முடியாத நோயே இல்லை என்று கூறலாம். மனித சரீரத்தில் எத்தனையோ சக்தி நாளப் புள்ளிகள் உண்டு. அவை மாத்திரமே பிராண பலத்தைப் பெறுகின்றன. ஆனால் உண்மை அதுவல்ல சுவாசத்தால் எப்படி பிராண பலத்தைப் பெறுகின்றோமோ அதேபோல் 72000 நாடி நரம்புகளின் மூலம் எத்தனையோ சக்தி நாளப் புள்ளிகளின் வழியாக இந்தச் சரீரம் சுவாசித்துக் கொண்டே இருக்கின்றது. அந்த சக்தி நாளப்புள்ளிகளில் அடைப்பு, தடை ஏற்படும் பொழுது நோயின் நிலை ஆரம்பமாகின்றது.

ஒருவனின் நாசியை இறுக்கிப் பிடித்து சுவாசிக்க முடியாமல் செய்யும் பொழுது எப்படி அவன் இறந்து போகின்றானோ அதேபோல் குறிப்பிட்ட ஒரு நாளப் புள்ளியில் அடைப்பு ஏற்படும் பொழுது அதனோடு நேரடி தொடர்புள்ள ஓர் உறுப்பும் பழுதடைய ஆரம்பிக்கின்றது. இதுவே எந்த ஒரு நோயினதும் அடிப்படைக் காரணமாகும்.

உதாரணத்திற்கு ஒரு ஆஸ்துமா நோயாளி ஆஸ்துமாவால் அவஸ்தைப்படும் பொழுது நுரையீரலுக்கு உண்டான சக்தி நாளப்புள்ளி தடைப்பட்டு அது தனது பிராண பலத்தை இழந்துள்ளது என்று எடுத்துக் கொள்ளவேண்டும். அந்த வேளையில் மனித சரீரத்தில் உள்ள நுரையீரலுக்கு உண்டான சக்தி நாளப்புள்ளியை அறிந்து அப்புள்ளியை திறந்து விடும் பட்சத்தில் அந்த நோய் அடியோடு மறைந்து விடும் என்பது உண்மை. இது அதிசயம் ஆனால் உண்மை. இப்படியும் ஆயிரக்கணக்கான சக்தி நாளப்புள்ளிகள் மனித சரீரத்தில் எங்கெங்கும் அமைந்துள்ளது என்பதை அறிந்து அந்த சக்தி நாளப்புள்ளிகளை ஊக்குவிக்கும் அரிய கலையே இவ்வர்மக் கலையாகும்.

இவரும் முடிச்சுகளை அறிந்தவரே வர்மக் கலை நிபுணராவார். இப்படியான ஒரு வர்மக்கலை நிபுணரால் சுகமாக்க முடியாத நோயே இல்லையென்று மீண்டும் அழுத்தமாக வலியுறுத்திக் கூறுகிறேன்.

இன்னுமொரு உதாரணமாக நோக்குவோமேயானால் சிறு நீரகம் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளியின் சிறு நீரக சக்தி நாளப்புள்ளி எங்கு அமைந்துள்ளது என்றொரு கேள்வி எழுமேயானால் அது அவரின் காலில் உள்ள சுண்டு விரலின் நகக் கண்ணிலிருந்தே ஆரம்பிக்கின்றது என்பது வியத்தகு உண்மை சிறுநீரகம் பாதிக்கப்பட்டவரின் கால் சுண்டு விரலை அழுத்திப் பிடித்து பார்ப்போமாயின் அவர் ஒருவிதமான வலியை உணர்வார் இதுவும் ஒரு சகுணமே இப்பொழுது சுண்டு விரலிலிருந்து ஆரம்பிக்கும் அவரது சிறுநீரக சக்தி நாளப் புள்ளிகள் தொடர்ச்சியை அறிந்த ஒரு வர்மக்கலை நிபுணரால் அந்த சக்தி நாளப் புள்ளிகளின் தொடர்ச்சியைத் தூண்டி செயலிழந்து கொண்டிருக்கும் சிறுநீரகத்தை உயிரூட்ட முடியும் என்பது வியத்தகு உண்மை. அப்படியானால் சித்தர்களால் உருவாக்கப்பட்ட சித்த வைத்தியத்துக்கும் வர்மக்கலைக்கும் இடையில் என்ன தான் தொடர்பு என்ற கேள்வி எழும்பும் பட்சத்தில் இவை இரண்டும் சித்தர்களால் உருவாக்கப்பட்டதால் இவ் இரண்டு கலையும் அறிந்த வைத்திய நிபுணர் ஒருவரால் சித்த வைத்தியரால் இன்னும் வெகு துரித கதியில் எல்லா நோய்களையும் தீர்க்கக் கூடிய ஆற்றல் பெற்றவராக இருப்பார் என்பதில் ஐயமில்லை.

இன்றைய நவீன உலகத்தில் முற்றாக குணமாக்க முடியாத புற்றுநோயிலிருந்து ஸ்பொண்டிலோசிஸ் என்று வர்ணிக்கக் கூடிய முதுகுத் தண்டு வட நோய்கள் ஊடாக அல்சர் ஆஸ்துமா எல்லாவற்றையும் மிக குறுகிய காலகட்டத்தில் பரிபூரணமாகக் குணப்படுத்த வர்மக்கலை பயின்ற சித்த வைத்தியர் பஞ்ச பூதத்தத்துவங்களை கடைப்பிடிக்கிறார் என்பது மறைக்க முடியாத உண்மை. பஞ்ச பூதங்கள் என்றால் நீர் ,நிலம் , நெருப்பு, காற்று ,ஆகாயம் இந்த ஐந்துமே ஒன்றை ஒன்று சார்ந்து இயங்கு கின்றது. மழையும் வெய்யிலும் சமநிலை தவறும் பட்சத்தில் நாட்டில் பஞ்சம் ஏற்படுவது வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவது நாம் அறிந்ததே. அதே போல ஆதி சித்தர்கள் நம் சரீரத்திலும் இப் பஞ்ச பூதத்தத்துவத்தை சமநிலைப்படுத்த நாடி பரிசோதனை என்ற தத்துவத்தை கற்றுத் தந்தார்கள் நாடிப் பரிசோதனை இரண்டு கைகளிலும் ஆறு நாடிகளின் வழியாக அறியப்படு கின்றது. இத்தகைய அரிய கலையை அந்த சித்தர்களின் அருளாலும் ஆசியாலும் மதுரைத் திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த கூடல் மலை நகரில் குருகுல வாசத்தால் கற்றுக் கொள்ளும் அரிய வாய்ப்பை தந்த இறைவனுக்கு என்றென்றும நன்றி சொல்வேன். இலங்கையில் கடந்த மூன்று வருடங்களாக பணியாற்ற வாய்ப்புத்தந்த இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன் . வாழ்க வளமுடன்.

**டாக்டர் V. சுரேஸ்** (S.M.P) (India)
41 A, Bus Stand (Orchid Saloon அருகில்),
Hatton.
Tel: 051 - 24203
Fax: 051 - 23650




''விசில் அடிச்சால்தான் எனது மனைவி சாப்பிடுவா''

''ஏன்?''

''எங்க வீட்டுச் சமையல் பிரசர் குக்கரிலதான்!''

# சுடர் ஒளி சிறுகதை

# பாசப் பிணைப்பு

ச.கவிதா,
தம்பலகாமம்.



இடைவேளை மணியடித்ததுகூடத் தெரியாமல் சிந்தனையிலிருந்தான் அகிலன். அவன் மனம் குழப்பத்திலிருந்தது நான் எடுத்த முடிவு சரியா? என் முடிவு மற்றவர்களுக்கு எப்படியோ? அது எனக்கு கவலையில்லை. அம்மாவுக்கும், அக்காவுக்கும் துன்பம் கொடுக்காம, மனச்சாட்சிக்கு விரோதமில்லாம நடந்தாச் சரி.

''என்ன அகிலன்? எந்தக் கோட்டையப் பிடிக்கிற யோசனை?''

கேட்டுக் கொண்டு வந்தான் கரன். இருவரும் ஆசிரியர்கள்.

கரனின் குரலால் சிந்தனை கலைந்த அகிலன், ''என்ன கேட்ட?'' புரியாமல் கேட்டான்.

''அதுசரி. இப்ப உங்களுக்கு எங்களையே தெரியாதிருக்கும். நீங்க பெரியாக்களா போகப் போறீங்கல்ல. கார், வீடெண்டு சும்மாவா?''

''என்ன கரன் பேசுற?''

''தெரியாதமாதிரி நடிக்காதடா. எல்லாம் நான் கேள்விப்பட்டன். ''பிரெண்ட்ஸ் எண்டு இருந்தென்ன? உன்னப்பத்தி மத்தவங்க சொல்லித்தானே தெரியுது''

சலித்துக் கொண்டான் கரன்.

''சொல்றதை விவரமாகச் சொல்லன்ராப்பா.''

''உனக்கு கல்யாணமாமே? உங்க வீட்டிலயும் சம்மதிச்சிட்டாங்களாமே? அக்கா அக்கான்னு உருகுவ? இப்ப மாறிட்டியாக்கும்?''

''நீ என்ன பேசுற கரன்? என்னப்போய் நீ... ச்சே. மத்தவங்கமாதிரி பணத்துக்கு ஆசப்படறவன் நானில்லடா. அதுவும் கடமையும், பொறுப்பும் என்னச்சுத்தி இருக்கும் போது, நான் சுகத்தத் தேடுவனா? கல்யாணம் பேசத்தான் செய்வாங்க. அதுக்காக பேசுறதெல்லாம் முடிஞ்சிடுமா என்ன?'' கோபத்தில் படபடத்தான் அகிலன்.

வகுப்பறையில் படிப்பித்துக் கொண்டிருந்தாலும் அகிலனின் மனக்கண்ணில் அடிக்கடி வத்சலா வந்து போனாள். பாடசாலை நேரம் முடிந்தது. வகுப்பறையில் அமர்ந்தவன், டயறியைப் பிரித்து எழுதத் தொடங்கினான்.

என்ன மன்னிச்சிடு வத்சலா. உன்ன நான் முதன் முதலா பார்த்தப்பவே என் மனசப் பறிகொடுத்திட்டன். ஆனா என் குடும்ப சூழ்நிலையும், எனது படிப்பு முடியாத நிலையும் என்காதல சொல்லவிடாம தடுத்திச்சி. நாம சேரணும்னுதானோ என்னவோ, நான் கம்பஸ் முடிச்சிட்டு வந்தும் நீ எனக்காகவே இருக்கிறாப்போல தோணுச்சி. இப்பவும் என் குடும்ப நிலைமை மாறல. உன் மனசில நான் இருக்கிறன் என்றது சந்தோஷம்தான். ஆனா லும்.... என்னால உன்ன பொண்ணுகேக்க முடியலடா.

இப்பவும் சொல்றன் வத்சலா. என் வாழ்க்கைய விட என் அக்கா வாழ்க்கைய நான் பெரிசா மதிக்கிறன். எனக்கு கல்யாணமானா அம்மாவும், அக்காவும் தவிச்சிடுவாங்க. என்ன மன்னிச்சு மறந்திரு வத்சலா"

எழுதிவிட்டு நிமிர்ந்தான். அங்கு கரன் உட்கார்ந்து எதையோ வாசித்துக் கொண்டிருந்தான். மற்ற எல்லோரும் சென்றுவிட்டனர்.

''என்னடா இன்னுமா நீ போகேல்ல'' கவலையோடு கேட்டான்.

''உன்ன விட்டுட்டு எப்படா அகிலா போயிருக்கன். வரவர உன் போக்கே மாறுது'' இருவரும் புறப்பட்டனர்.

* * *

அகிலனின் அக்கா மஞ்சுளாவிற்கு வயது முப்பத்தி ஐந்து இன்னும் திருமணமாகவில்லை. அம்மா அன்னபூரணி நோயாளி.படுத்த படுக்கையாய் இருக்கிறாள். அவளது அனைத்து தேவைகளையும் கவனிப்பது மஞ்சுளாவே.

அகிலன் ஆசிரியராகப்பணியாற்றுகிறான். அவனுக்கு பலர் பெண் கொடுப்பதற்கு முன்வந்தபோதும் அக்காவிற் குத் திருமணம் செய்து கொடுக்காமல் தான் திருமணம் செய்வதில்லை என்று பிடிவாதமாக மறுத்து வருகிறான்.

இப்போதும் ஆனந்தன் கம்பனி முதலாளி சுந்தரலிங்கத்தார் தனது மூத்த மகளுக்கு அகிலனை வரன் கேட்டு வந்து போயிருந்தார்.

ஆனாலும் அகிலன் தாய், தமக்கையை விட்டு விட்டுத் தான் மட்டும் சொகுசாக வாழ முடியாது என்று மறுத்து விட்டான்.

தன்னால் தன் தம்பியின் வாழ்வு கெடுவதை அக்கா மஞ்சுளாவினால் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை.

அவள் அது விடயமாக சுந்தரலிங்கத்தைச் சந்தித்து பேசினாள். எப்படியாவது தன் தம்பியை திருமணத்துக்கு சம்மதிக்க வைக்குமாறு கேட்டுக்கொண்டாள்.

* * *

அகிலனுக்கு படபடப்பாக இருந்தது. என்னத்துக்காக சுந் தரலிங்கம் வரச் சொல்லியிருப் பார்? கலியாண மேட்டரோ நான் தான் வேண்டாமென்று சொல்லிட்டேனே! தவித்துக் கொண்டிருந்தான் அகிலன் . அதனைக்கண்ட கரன்

''ஏன் அகிலா வீணா டென்சனாகுற? வேறேதும் அலுவலோ தெரியேல்ல. பதறாம போய்ப்பாரு. ஷோட்லீவு போட்டுட் டுப்போ. (கரனிடம் நடந்தது ஒன்று விடாமல் கூறியிருந்தான் அகிலன்)

கரனுக்கும் கவலை. நண்பனது குடும்ப நிலைமை அவனை யோசிக்க வைத்தது. அகிலன் நன்றாக வாழ்வான் என்பது மட்டும் அவனுக்கு உறுதியாகத் தெரிந்தது . தனது பைக்கில் விரைந்தான் அகிலன். சுந்தரலிங்கத்தின் வீட்டினுள் நுழைந்தான்.

''ஆனந்தன் வாப்பா.... உட்கார்'' அவனை வரவேற்று ஒரு கதிரையைக் காட்டிவிட்டுத் தானும் அமர்ந்தார் சுந்தரலிங்கம்.

கதிரையின் அழகை வியந்தபடியே அமர்ந்தான். குஷன் கதிரை தொபீரென்று புதைந்தது. பஞ்சுக் கூடைக்குள் அமர்ந்த உணர்வு. நல்லகாலம், சுந்தரலிங்கம் கவனிக்காமல் ''சுடரொளியில்'' கண்களைப் பதித்திருந்தார்.

''என்ன விஷயம்? என்னை வரச்சொன்னீங்களாம்?'' கேட்டான்.

''ஆமாம் தம்பி. வரச்சொன்னன்தான்''

''எ... என்னன்னு தெரிஞ்சிக்கலாமா?''

அவனை நன்றாக உற்றுப் பார்த்தவர், ''இதப்பாருங்க தம்பி! எனக்கு ரெண்டு பொண்ணுங்க. மூத்தவ வத்சலா. ரெண்டாவது சர்மிளா. ரெண்டு பேரையும் உங்களுக்குத் தெரியும்தானே?''

''ம்....'' முனகினான்.

''என் ரெண்டாவது பொண்ணுக்கு நல்ல வரன் வந்திருக்கு. என்ர நண்பனின் பையன்தான். என்ஜினியரா இருக்கான். அவனும் வீட்ல ஒரே பையன். அவங்க கல்யாணத்துக்கு அவசரப்படறாங்க. என் மூத்த பொண்ணக் கட்டிக் குடுத்தாத்தான் சர்மிளாவப் பத்தி யோசிக்க முடியும். நீ என்னப்பா சொல்ற?'' கம்பீரக்குரலில் அமைதியாகக் கேட்டார்.

அகிலனுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. நேரடியாகவே தன்னைக் கேட்பார் என்று எதிர்பார்க்கவில்லை.

''நான்... நான்தான் அப்பவே சொல்லியனுப்பிச்சிட்டனே?' எங்கக்காவுக்கு நல்லது நடக்காம எனக்கு ஒரு விஷேசமும் நடக்காதெண்டு. நீங்க உங்க பொண்ணுக்கு வேற மாப்பிள்ளையப் பாருங்க. என்னை மன்னிச்சிடுங்க'' தழுதழுத்த குரலில் கூறிவிட்டு எழுந்தான்.

''இரு. இருப்பா... அதுக்குள்ள ஏன் போக வெளிக்கிடுற? ஏதும் அவசரமா?'' தற்செயலாக எதிரே இருந்த அறையைப் பார்த்தான். சடாரென்று ஒரு முகம் உள்ளே மறைந்தது. சந்தேகம் இல்லை. அது வத்சலாதான். மீண்டும் பார்த்தான். அவள் அங்கு இல்லை.

''இங்கபாரு தம்பி. எனக்கு வேற மாப்பிள தேட முடியாதெண்டு இல்லை. வத்சலாவும் உன்னை விரும்புற மாதிரித் தெரியுது. நீயும் அவள விரும்புறியான்னு தெரியல. எங்களுக்கும் உன்னப் பிடிச்சிருக்கு'' அதுதான்.

''தம்பி! வத்சலா நான் சொன்னா கேப்பா. நான் காட்டுற பையன கட்டிக்கன்னா சம்மதிப்பா. இருந்தாலும் என் மகளுடைய விருப்பத்தை நிறை வேற்ற ஆசைப்படுறன்''

ஏதோபேச வாயெடுத்த அகிலனைக் கையமர்த்தி தடுத்தார்.

''பொறப்பா, நான் பேசி முடிச்சிர்றன்''

''உங்கக்காவுக்கு நான் ஒரு நல்ல மாப்பிள்ளையப் பார்த்துத் தந்தா சம்மதிப்பியா?''

திடுக்கிட்டான் அகிலன். எந்த ஒரு ஆணுக்கும் இருக்கும் பிரச்சினை. தன்மானப் பிரச்சினை. அது அகிலனை விடவில்லை. தனது அக்காவுக்கும் அவரே மாப்பிள்ளை பார்த்தால், அவனது கௌரவம் என்ன ஆகும்? வேண்டாம். எங்க அக்காவுக்கு நானே மாப்பிள்ளை பார்ப் பன். அதைக்கூற முடியாமல்,

''நானே ஒரு மாப்பிளைய பேசியிருக்கிறன். அது சில வேளை சரிவரும்...'' கூறியவன் விறுவிறுவென சென்று விட்டான்.

சுந்தரலிங்கத்திற்கு எல்லாமே புரிந்தது. இவனால் நிச்சயமாக என் மகள் சந்தோஷமாக வாழ்வாள். முடிவே எடுத்துவிட்டார்.

* * *

''என்னடா அகிலா சொல்ற? ''அதிர்ச்சியில் கேட்டாள் மஞ்சுளா. அவளுக்கு கவலையாக இருந்தது.

''ஆமாக்கா. நான் வேணாமெண்டு சொல்லிற்று வந்திட்டன். இனி அதப்பத்திப் பேசாத'' பாடசாலைக்குப் புறப்பட்டான் அகிலன்.

பாசமுள்ள தம்பியை நினைத்து அவள் உள்ளம் பூரித்தது. தாயிடம் அவனைப் பற்றிக் கூறிக்கூறி அழுதாள்.

அவர்களின் தாய் அன்னபூரணி சகலதையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தாள். பெற்ற பிள்ளைகளின் அன்பு அவளைப் பரவசப்படுத்தியது.

''இதப்பாரும்மா மஞ்சு.... அகிலன் எனக்கு மகனாப் பொறக்க நான் என்ன புண்ணியம் செஞ்சனோ? அவன்ர நல்ல குணத்துக்கும், மனசுக்கும் நிச்சயமா நல்லதுதான் நடக்கும். நீ கவலைப்படாதம்மா. உனக்கும் அவன் நல்லதுதான் செய்வான்''

''ஆமாம்மா அகிலன்ர நல்ல மனசுக்காகத்தான் நானும் இந்தச் சம்பந்தத்த விடல்ல'' வேறொரு ஆண் குரல் கேட்க இருவரும் திடுக்கிட்டனர். மஞ்சுளா திரும்பிப் பார்த்து திகைத்துப் போனாள். வந்தது சுந்தரலிங்கம்.

''வா.. வாங்க... இருங்க...'' உபசரித்தாள்.

அமர்ந்தவர் ''அம்மா, போனவாரம் அகிலனோட பேசினன். ஒரேயடியா மறுத்துட்டான். எனக்குத்தான் மனசு கேக்கல்லை'' பேசியவர் நிறுத்தினார்.

தாயும் மகளும் ஒருவரை ஒருவர் கவலையோடு பார்த்துக் கொண்டனர்.

''க்கும்'' குரலைச் சரிசெய்து கொண்டவர், ''நான் சொல்றதக் கேட்டுத் தப்பா நெனைக்கக் கூடாது. நேற்று என் மனைவியின்ர தூரத்து உறவுக்காரன் ஒருவன் வந்திருந்தான். நல்ல பையன். ஊரில விவசாயம் செய்யறான். வசதியானவன்தான். அவனப் பார்த்ததுமே உங்க ஞாபகம் வந்திடிச்சி. எல்லாத்தையும் பேசினன்.

அவனும் சம்மதிச்சிட்டான். நீங்களும் ஓ.கேன்னா சம்பிரதாயத்துக்கு பொருத்தம் பார்த்துட்டு கலியாணத்தை முடிச்சிடலாம். பக்கத்து ஊர்தான். அவனுக்கு அம்மா அப்பா இல்ல. உங்கம்மாவக் கூட்டிற்று அங்கேயே நீ போயிடலாம். என்ன சொல்றீங்க?''

இருவரும் மௌனமாகினர். அன்னபூரணி சந்தோஷத்தில் திக்குமுக்காடிப் போனாள்.

''இதில என்ர சுயநலமும் இருக்கும்மா. என் மகள நல்லவன் கையில ஒப்படைக்கணும் என்றுதான் பாடுபடறன். சம்மதம்னா சொல்லியனுப்புங்க. ஒரே மேடைல ரெண்டு கலியாணத்தையும் நடத்திடலாம்'' கூறிவிட்டுப் புறப்பட்டார்.

அன்னபூரணிக்கு வாய் ஓயவில்லை. ''என்ன தங்கமான மனசுடி அவருக்கு? என்ர மகன்தான் பாசமானவன்னு நெனச்சேன். குடும்பத்துக்காக பாடுபடறவன்னு பெருமைப்பட்டன். இப்போ இந்த மனுசனப் பாரேன். பணமிருந்தாலும் குழந்தைங்க நல்லா வாழணும்னு பாசத்தைத் தேடி நடையா நடக்கிறாரு. இதுதான் பாசப் பிணைப்பா?'' சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாள்.

* * *

ஊரே மெச்சும்படியாக ஒரே மேடையில் இரண்டு திருமணங்கள். வத்சலா நினைத்தவர் கிடைத்த சந்தோஷத்தில் திளைத்திருந்தாள். ஒவ்வொருவரும் இன்ப வெள் ளத்தில் மூழ்கினர்.

திருமணங்கள் நல்லபடியாக நிறைவேறின. மறு நாள் பொழுது எல்லோருக்கும் இன்ப மயமாகவே புலர்ந்தது. ஆனால்.....

தன் மக்களுக்கு நல்ல வாழ்க்கை அமைந்து விட்ட சந்தோஷத்திலும், தான் யாருக்கும் பாரமாகிவிடக்கூடாது என்ற கவலையிலும் இருந்த அன்னபூரணிக்கு மறுநாள் பொழுது புலரவே இல்லை.......

(யாவும் கற்பனை)

# வாசகர் இதயம் பேசுகிறது



சுடர் ஒளி 19.08.01 இதழில் வெளிவந்த முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பான கட்டுரை நன்றாக இருந்தது. சாவித்திரி சிறுகதையும் என் மனதை மிகவும் பாதித்தது. சுடர் ஒளிக்கு என் வாழ்த்துக்கள்.

ஏ.எச்.எம்.ஜாபீர்,
நொச்சியாகமம்.

சுடர் ஒளியே, உன்னில் வரும் அத்தனை அம்சங்களும் சூப்பர். குறிப்பாக மருத்துவம், பெண்கள் பக்கம், அரசியல், சிறுகதை, கவிதை என்பன. நீ எப்போ தினமும் வெளி வரப் போகிறாய்? உன் தரம் குறையாமல் ஒளிகுன்றாமல் நீண்ட காலம் சுடர் விட்டுப் பிரகாசிக்க மனமாரப் பாராட்டுகிறேன்.

கே.ஜயசீலா, டோவடஸ்.

''சுடர் ஒளி'' இதழ்கள் தரமான ஆக்கங்களுடன் அசத்துகின்றன. கண்களைக் கவரும் வர்ணப் பக்கங்களில் வரும் பல் சுவை ஆக்கங்கள் அனைத்தும் பிரமாதம். 26 ஆகஸ்ட் 2001 இல் வெளியான ''ஆட்டிப்படைக்கும் படையினர் வாடிவதங்கும் பொது மக்கள்'' என்ற செய்தி கலங்கவைத்து விட்டது. ''பயணம்'' சுடர் ஒளி சிறுகதை அருமையாக இருந் தது. ''சுடர் ஒளி'' காத்திரமான படைப்புகளோடு வெளிவரு வதையிட்டு சந்தோஷம். நவரசத் தகவல்களைத் திரட்டுவதில் உனக்கு நிகர் நீயே!

கே.அக்கீத், செட்டிகுளம்.

சுடர் ஒளி நாளிதழை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறோம். வட–கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம்களின் இன்ப துன்பங்களை எடுத்துக்காட்டும் சுடர் ஒளிக்கு எங்கள் மனமார்ந்த 'நன்றிகள்'.

ஜே.எம் பைரூஸ், கிண்ணியா—03.

சுடர் ஒளியே நீ சுமந்து வரும் அத்தனையும் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றன. கவிதைப்புனல் படு ஜோர். இலவச மருத்துவ ஆலோசனைப் பகுதி சிறப்பாக உள்ளது. சுடர் ஒளிக்குப் பாராட்டுக்கள். மற்றும் பெண்கள் பக்கத்தில் பிரதீபா, பஸீனா தொகுத்துத் தரும் தகவல்கள் மிக மிகச் சிறப்பாக உள்ளன. பாராட்டுக்கள் சுடர் வீசும் சுடர் ஒளிக்கு.

பி. பிறேம், வவுனியா.

தென்னிலங்கையில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில் எனது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய பத்திரிகையாக சுடர் ஒளி இருக்கிறது. சுடர் ஒளியின் தரம் இன்னும் இன்னும் உயர வேண்டும் என ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

சு.ஜெயக்குமார், கிளிநொச்சி.

துயர் படிந்து கிடக்கும் இந்த இனத்தின் வரலாற்றில் 'சுடர் ஒளி' தன் பங்கினை மனப் பூர்வமாக நிதர்சனத்துடன் ஆற்ற வந்திருப்பதை வரவேற்கின்றேன். அமைப்பும், செய்தி அளிப்பும் மிக நன்றாக உள்ளன. தங்கள் பத்திகளின் விடயதானங்கள் நன்றாக உள்ளன. இந்த நேரத்தில் இதய சுத்தியுடன் வெளிவரும் பத்திரிகையை வரவேற்கின்றோம். தினசரியாக சுடர் ஒளி வரவிருப்பதனை வரவேற்கின்றோம்.

மா. குலமணி, கொழும்பு—06

சுடர் ஒளி பத்திரிகையில் வெளிவரும் செய்திகள் மனதைக் கவரக் கூடியவையாக இருக்கின்றன. தற்போது வெளிவருவது போலவே தொடர்ந்தும் ஆழமான செய்திகளையே பிரசுரிக்கும்படி தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீ.சிவகஜனி, புங்குடுதீவு.

வாரந்தோறும் பல பயனுள்ள தகவல்களைத் தாங்கி வரும் சுடரொளியின் பணி பாராட்டுக்குரியது. தாங்கள் இளஞ்சுடரின் மூலம் மாணவ சமுதாயத்தின் ஆக்கங்களைப் பிரசுரித்து வருகிறீர்கள். சுடரொளி வார இதழ் தமிழ் மாணவ சமுதாயத்தின் எழுத்தாற்றலை வளப்படுத்தி எதிர்கால எழுத்தாளர்களின் அத்திபாரமாக அமையும் எனத் திடமாக நம்புகிறோம்.

எல். விஜயா, யாழ்ப்பாணம்.

# படையினரை ஏமாற்றும் புலிகளின் உளவாளிகள்!

## மட்டக்களப்பில் சகல முகாம்களுக்கும் அபாய எச்சரிக்கை

புலிகள் இயக்கத்திலிருந்து தப்பிவந்து படையினரிடம் சரண் அடையும் புலி உறுப்பினர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு மட்டக்களப்பு படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்படி வந்து சரணடைந்த ஒருவர் ராசிக் குழுவின் சிரேஷ்ட உறுப்பினர் களில் ஒருவரான குட்டி எனப்படும் செம்பாப் போடி மேகநாதனை (வயது 37) சுட்டுக் கொன்று விட்டு அவரது துப்பாக்கி யையும் அபகரித்துக் கொண்டு சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குட்டி என்பவர் கன்னன் குடாப் பகுதியில் இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வந்தவர் என்று தெரிவிக்கப் படுகிறது.

இவரைச் சுட்டுக் கொன்றவர் முதலைக் குடாவைச் சேர்ந்த தில்லைநாயகம் நற்குணம்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து தப்பி வந்ததாகக் கூறி கடந்த மார்ச் 15ஆம் திகதி இவர் இராணுவத்திடம் சரணடைந்திருந்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து, விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து தப்பி வந்ததாக எவராவது தெரிவித்தால் அவர்கள் விடயத்தில் மிகக் கவனமாக இருக்கும் படியும், அவர்களைத் தனிமை யாக வைத்திருக்கும்படியும் படைத்தரப் பினருக்கு சிரேஷ்ட படை அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

மார்ச் மாதம் தில்லைநாயகம் நற்குணம் சரணடைந்த போது படையினர் அவரைப் புலிகளுக்கு எதிரான தமது பிரசாரத்துக்கு நன்கு பயன்படுத்தி இருந்தனர்.

2—33 ஆவது இராணுவ படைத்தள தலைமை அலுவலகத்தில் அப்பொழுது அவர் வைக்கப்பட்டிருந்தார். உள்ளூர் பத்திரிகையாளர்கள் அழைக்கப்பட்டு அவரினால் புலிகளுக்கு எதிராகப் பேட்டி கொடுக்கப்பட்டது. சில பத்திரிகைகளிலும் அவரது படம் பிரசுரமாகி இருந்தது.

தில்லைநாயகம் நற்குணம் புலிகளின் உளவாளி என்றும்—

படையினரிடம் சரணடைவதாக நடித்து இராணுவ முகாம் பற்றிய தகவல்களையும் ராசிக்குழு பற்றிய தகவல்களையும் சேகரித்துக் கொண்டு மீண்டும் புலிகள் இயக்கத்திடம் தப்பிச் சென்று விட்டார் என்றும் — தற்பொழுது நம்பப்படுகிறது.

கடந்த சில மாதங்களில் நடத்தப்பட்ட புலிகளுக்கு எதிரான தாக்குதல்களில் படையினராலும் ராசிக் குழுவினராலும் இவர் நன்கு பயன்படுத்தப்பட்டு வந்ததால் அவர்களின் நம்பிக்கையை இவர் பெற்றுக் கொள்வதில் வெற்றி கண்டிருந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

தில்லைநாயகம் நற்குணம் தப்பிச் சென்ற சம்பவத்தினால் படையினருக்கும் ராசிக் குழு வினருக்கும் புதிய தலையிடி ஏற்பட்டுள்ளது.

படையினரினதும் ராசிக் குழுவினரி னதும் சகல இரகசிய விடயங்களையும் அவர் அறிந்து வைத்திருந்தார். சகல தகவல் களையும் அவர் புலிகளிடம் வழங்கி இருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

ராசிக்குழு உறுப்பினர் குட்டி சுடப்பட்டபோது புலிகள் பதுங்கி இருந்து சுட்டதாகவே முதலில் கருதப்பட்டது.

குட்டியின் சடலம் மட்டுமே அங்கு கிடந்தது.

தில்லைநாயகம் நற்குணம் தப்பிச் சென்றது பிறகுதான் தெரியவந்தது.

இதன் பின்பே சரணடையும் புலிகள், குறித்து அவதானமாக இருக்கும் படி கண்டிப்பான உத்தரவு படையினருக்கு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மட்டக்களப்புப் பகுதி யில் அப்பாவி மக்கள் படையினரால் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

செங்கலடி பதுளை வீதியில் உள்ள றூகம் குளத்தில் கடந்த 14 ஆம் திகதி ஆறு மீனவர்கள் கைது செய்யப்பட்டுப் படையின ரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு ஆரையம்பதி 5ஆம் கட்டையில் அதே இரவு குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான கோ. தேவராஜா (45 வயது) என்பவரே இனம் தெரியாதவர்களால் கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

சம்பவதினம் இவரின் மனைவியும், பிள்ளைகளும் வீட்டில் இருக்கவில்லை. கண்டியில் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தனர். இக்கொலைக்கான காரணம் மர்மமாகவே உள்ளது.

வாழைச்சேனை மாவடி வேம்பைச் சேர்ந்த சின்னவன் விக்கினேஸ்வரன் (18 வயது) என்பவர் வாழைச்சேனை பொலிஸாரினால் 15 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் சிகை அலங்காரக் கடையொன்றில் வேலை செய்துவருபவர் ஆவார்.

இதே வேளை ஏறாவூர் காளி கோயில் வீதியில் உள்ள வீடொன்றில் இனம் தெரி யாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சில் வெள்ளத்தம்பி இராஜேந்திரம் பிள்ளை என்பவர் படுகாயம் அடைந்தார்.

புதுக்குடியிருப்பு, கிரான்குளம் பகுதி களிலும் அடிக்கடி சுற்றி வளைப்புக்களை இராணுவத்தினர் மேற் கொண்டு வருகின்றனர். பொது மக்களை இரவு வேளைகளில் நடமாட வேண்டாம் என கண்டிப்பான உத்தரவை அவர்கள் விடுத்துள்ளனர்.

— நேரன்

## கடும் வரட்சி மட்டக்களப்பையும் விட்டு வைக்கவில்லை

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களில் வரட்சி காரணமாகக் குடி தண்ணீர் இன்றி சுமார் ஐயாயிரத்திற்கு மேற் பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவில் கடுக்காமுனை, அருள்நேசபுரம், கொத்தியா வலை, வால்கட்டு, சின்னமடு, கற்சேனை, மாவடிமுன்மாரி ஆகிய இடங்களிலும்—

வெல்லாவெளி பிரதேசச் செயலர் பிரிவில் தும்பங்கேணி, காந்திபுரம், 40ஆம் கிராமம், கருமுந்தன்வெளி ஆகிய இடங்களிலும்—

வவுணதீவு பிரதேசச் செயலர் பிரிவில் மண்டபத்தடி, ஆயித்தியமலை, உன்னிச்சை ஆகிய இடங்களிலும்— வரட்சி காரணமாக மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது குருணாகல், அம்பாறை மாவட்டங்களில் வரட்சியினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு அரசினால் வழங்கப்படும் நிவாரணம் போன்று மட்டக்களப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என மட்டக்களப்பு அரச அதிபரிடமும் நாடாளுமன்ற உறுப் பினர்களிடமும் பொதுமக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.



### எமது ஆசை

பறவையாக மாறி
சிறகடித்துப் பறக்க
ஆசை கொள்ள வில்லை!
***
விஞ்ஞானியாகி
விண்ணில் ஆய்வு செய்யவும்
ஆசை கொள்ளவில்லை!
***
விமானத்தில் ஏறி
வெளிநாடு சென்றுவர
ஆசை கொள்ளவில்லை!
***
வெற்றிலைக் கட்டுப்போல்
சீதனம் கேட்கவும்
ஆசை கொள்ளவில்லை!
***
ஷாஜகானைப் போல்
ஒரு தாஜ்மஹால் அமைத்திட
ஆசை கொள்ளவில்லை!
***
இமயத்தை உடைத்துச்
சமதரையாக்கி கீர்த்திபெறவும்
ஆசை கொள்ளவில்லை!
***
மதம் விட்டு
மதம் மாறி உயிர் வாழவும்
ஆசை கொள்ளவில்லை!
***
அடுத்தார் வீட்டு வளவில்
ஓரடி மண்ணைக் கூட அபகரிக்க
ஆசை கொள்ள வில்லை!
***
அழகியொருத்தியைக் கண்டு
மோகம் கொண்டு
அவளை மோசம் செய்யவும்
ஆசை கொள்ளவில்லை!
***
அரசியல் வாதியாகி
ஆசனத்தில் அமர்ந்து காலாட்ட
ஆசை கொள்ளவில்லை!
***
'மெய்' என்னும் 'பொய்' உடலை
பொன்னகைகளால் அலங்கரிக்கவும்
ஆசை கொள்ளவில்லை!
***
கின்னஸ் புத்தகத்தில்
ஒரு இடம் பிடிப்பதற்கும்
ஆசை கொள்ளவில்லை!
***
சுதந்திர தேசமதில்
(சொற்ப நேரமாவது) சுதந்திரமாய்
வாழவே ஆசை கொள்கின்றேன்.

சரவணமுத்து நவேந்திரன்,
எருவில்.

### காதலர் தினம்

வாலிபச் சிறையில்
வாழ்வைத் தொலைத்து
காதலில்
காயம் பட்ட கனவுகளுடன்
தனிமையில்
தவம் இருந்த
இரு இதயங்கள்
கண்ணீரில் நனைந்து
கற்பனை வானில் பறந்து
உள்ளத்து உணர்வுகளை
உதட்டால் உயில் எழுதி
அருகமர்ந்தும் அணைக்க
முடியாத மௌனங்கள்
ஒட்டி உறவாட இதில்
எதுகை மோனை — அற்று
இதயங்களை இணைக்கும்
இனிய கவிதை...!

எஸ். தமிழாம்பிகை ஜெகன்,
நானாட்டான்.

### புகைத்துப் பார்!

உன் விரல்கள்
தீக்குச்சிகளை
அடிக்கடி முத்தமிடும்
உதடுகளைக்
கைவிரல்கள் பலமுறை
வணங்கிக் கொள்ளும்
புகைத்துப்பார்!
***
உன் சுவாசப்பை
புகையின் இருப்பிடமாகும்
புற்றுநோய்
இருமல்
உன் நண்பர்களாவர்
புகைத்துப்பார்!
***
உன் பையில்
பணம் காலியாகும்
துர் நாற்றமே
உன் வாய்க்குச்
சொந்தமாகும்
புகைத்துப் பார்!
***
அடிக்கடி நீ!
வைத்தியரை
நாடிச் செல்வாய்
இடைக்கிடை
உன் இதயத்தை
எக்ஸ்ரே எடுத்துக் கொள்வாய்
புகைத்துப் பார்!

கவிப்பித்தன் — குணம்,
களுவாஞ்சிக்குடி.

### தாய்க்குலம்

கோடையில் 'மழை'யான கோதைகள்
கோவிலில் 'சிலை'யான பாலைகள்
பாதைகளில் படுகின்ற
பரிதாபம் அகலவில்லை!
பள்ளிகளில் பாலியல் வன்முறை
படைமுகாம்களில் 'சோதனை'
உள்ளமிலா பேய்களினால்
உருக்குலையுதே தாய்க்குலம்!

நா.ஜெயபாலன், பிபிலை.

### சிட்டுக்களுடன்

யாரும் இல்லாத
ஆகாயத்தில் — என் குடிசைமட்டும்
தொங்கிக் கொண்டிருக்கிறது!

எரிமலை வெடித்து நெருப்புக்
குளத்தில் நீந்திக்
கொண்டிருக்கிறது
என் வாலிபம்!

ரோஜாவை நுகர நினைத்தால்
முகத்தைத் தாக்க நினைக்கிறது
முட்கள்....!

பாதம் நகர மறுக்கிறது
நகர்ந்தால் தகர்ந்திடுமோ
என்ற அச்சம்
என் வாய்க்கும் பூட்டு
அதனால் பறக்கிறேன்
சிட்டுக்களுடன்

மருதூர், அன்ஸார்.

### அரங்கேறும் அழகு

வானத்தில் உலாவர
சிறகுகள் கடனாக
ஒட்டினால் ஒடிந்துபோகும்
நேரத்தைப் பொன்னாக்கி
உழைப்பை நெருப்பாக்கி
புடம்போட்டு படிகட்டி
ஏறி நின்றுபார்
நிலவும் எட்டும் தூரமென்று தெரியும்
பூமியில் பிறந்து கண்டதென்ன
புலம்பலில் விளம்பரங்களைத்
தேடுவதில் இல்லையொரு பெருமை
வேதனை விழிகளின் ஈரம்துடைத்து
வெற்று வயிறுகளின் வெறுமை நிரப்பி
அங்கங்கள் அங்கங்கே துண்டுபட
ஐயோவென அலறும்
நெஞ்சங்களில் இடம் தேடு
அரங்கேறும் வாழ்க்கையின்
அத்தனை அழகெல்லாம்!

ஜெ.சூரியன்,

### சொர்க்கத்தின் சோகங்கள்

என் சொந்த ஊரே
உன்னை நினைக்கையில்
என்னுள்ளே ஏதோவோர்
ரணகளம்!

நான் தவண்டு
தளிர் நடை போட்டு
அள்ளி உண்டு உறவாடித்
துள்ளி விளையாடியது
உன் மடியிலல்லவா!

பள்ளிப் பருவப் பகிடிகளும்
பருவ வயதுச் சேஷ்டைகளுமாய்
எத்தனை எத்தனை
பதிவுகள் செய்தே னுன்னில்
எங்கு நான் சென்ற போதும்
என்னை யடையாளப் படுத்துவதும்
நீ யல்லவா!

இன்று நாமுன் வசமில்லை
இதை யெண்ணும் போது
இதயம் வெடிக்கிறது!
இரத்தம் கொதிக்கிறது!
இருந்தும் இருக்கின்றோம்
இங்கு மனித மரமெனவே!

வேலிகள் போட்டு அறுக்கையாய்,
அழகாயிருந்தாயன்று!
வேலிகளழிந்து பற்றைகள் முளைத்து
சிறு காடாயிருக்கின்றா யின்று!

என் வாசஸ்தலமெங்கே?
நானுலாவிய தெருக்களெங்கே?
என் வணக்கஸ்தல மெங்கே?
நானோடியாடிய வெட்டை யெங்கே?
என் வாசிக சாலை யெங்கே?
நான் படித்த பள்ளிக் கூடமெங்கே?

என்னூரே பொன்னூரே
என்னுயிர் மூச்சே!
உனக்கு வந்த கண்ணூறாயிது?
நீயிப்போ சிறுகாடு
எமக்கிப் போ தெருவீடு!

அகியோபி, வதிரி

அனற் பற்றிய ஆராய்ச்சியில் மிகவும் மந்தமாகவே முன்னேறியிருந்தான் றொபேட். ஆனால் கிடைக்கும் தகவல்கள் பயனுள்ளவையாகவே இருந்தன. விமான நிலையப் பொறுப்பாளரிடம் பேசி ஒழுங்குகளைச் செய்திருந்தான் அவன். அவர்களும் அவனது துப்புத்துலக்கும் முயற்சிக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்திருந்தனர். தமது பணியாளர் ஒருவரின் நடவடிக்கைகளில் றொபேட்டினது சந்தேகம் பற்றி அவர்கள் அலட்சியமாக இருக்க இயலாது. அதுவும் சந்தேகம் விமான நிலையக் கொள்ளை தொடர்பாக எழுந்திருக்கிறதே.

அவளுக்கு வரும் தொலைபேசி அழைப்புக்களைப் பதிவது தொடர்பான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு றொபேட் கேட்டிருந்தான். மேலதிகமாக அவளது கணினியில் இருந்து கட்டுப்பாட்டு அறைக் கணினி ஒன் றிற்கு விசேட இணைப் பொன்றையும் நிர்வாகம் ஏற்படுத்தியிருந்தது.

கணினியின் முன்னே அவளது கம்பீரம் இரட்டிப்பாகத் தென்படும். இருபத்து மூன்று வயதில் பம்பரமாய்ச் சுழலும் அவளது அழகுமேனி, அபாரத் திறமை, வாடிக்கையாளர்களைத் திருப்தியாகக் கையாளும் இனிய சுபாவம் எல்லாம் அந்த எயார்வேய்ஸ் நிறுவனத்திற்குரிய அவளது தகுதியைப் பறைசாற்றவே செய்யும். இத்தனைக்கும் இடையே தனது சந்தேகத்தை எப்படிப் புகுத்துவது என ஆராய்ந்தவாறு தொலைவில் நின்றுகொண்டிருந்தான் றொபேட்.

நெருக்கடி சற்றுத் தளர்ந்ததும் கருமபீடத்தை நோக்கி அவன் நடக்கலானான். தனது குடும்பத்துடனான பயணமொன்றிற்கான பதிவையும் ஒரு வாரத்தில் திரும்பி வருவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொள்ளும்படி அவளைக் கேட்டிருந்தான். அவள் பதிவேடுகளை கணினியில் தடவிக் கொண்டிருந்தாள்.

குடும்பத்துடன் பயணம் செய்வதற்கு வேண்டிய முதலாம் வகுப்பு ஆசனங்களை ஒதுக்குவது சிரமமாக இருந்தது. இரண்டொரு ஆசனங்கள் குறைவா கவே இருந்தன. இரண்டாம் வகுப்புப் பயணத்தை றொபேட் முற்றாக நிராகரித் திருந்தான். அவளோடு கதையை வளர்க்க அது வாய்ப்பாக இருந்தது. தான் வெளியில் ஒருவாரம் தங்குவதால் தனது வீட்டையும் பொருட்களையும் காப்புறுதி



# முத்தமிடும் ரோஜா இதழ்கள்

இதழ் 16

மு.சிவநேசன்

அதன் மூலமாக அனற்றினது கணினி நடவடிக்கைகள் அனைத்தும் கட்டுப்பாட்டு அறைக் கணினியுடன் இணைக் கப்பட்டன. அவள் தனது கணினியில் புரியும் அனைத்து செயற்பாடுகளும் கட்டுப்பாட்டு அறையில் உள்ள கணினியில் தென்படும். அத்தோடு அவளது தொலைபேசித் தொடர்புகளும் அங்கே கண்காணிக்கப்படும் வகையில் இணைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

***

பயணிகளுக்கான ஆசனப் பதிவை மேற்கொள்ளும் அவளது விரல்கள் பத்தும் அந்தக் கணினி விசைப் பலகை மீது புரண்டு விளையாடின. அவற்றின் வேகமோ தனி. அவளது ஆணைக்குக் கட்டுப்பட்டு அந்த எயர் லைன்ஸின் கணினித் திரை, தகவல்களை மின்னி எறிந்து கொண்டிருந்தது.

உல்லாசத்திற்காகவும் அவசர அலுவல்களுக்காகவும் பறக்கத் துடிக்கும் பல ரக மனிதர்களின் அவசரத்தை உணர்ந்தவள்தான் அனற். என்றாலும் தனது சக்திக்கு மீறி பயணிகளால் நிரம்பி வழியும் அந்தப் பிரபல விமான நிறுவனத்தின் பதிவேடுகளில் விரும்பியவர்களுக்கெல்லாம் அவளால் இடம்பிடித்துக்கொடுக்க இயலுவதில்லை.

அனற் தனது எயார் வேய்ஸ் கம்பனியின் சீருடையில் மிகவும் எடுப்பாக இருந்தாள். காண்பவர் கண்களைக் கிறங்கவைக்கும் அவளது துடிப்பும் எடுப்பும் றொபேட்டையும் ஒரு கணம் சொக்க வைத்ததில் வியப்பில்லை.

''இவளிடம் மாட்டுப்பட்டவன் தொலைந்தான். அவனால் வேறு எதையும் சாதிக்க இயலாது'' என நினைத்தான் அவன்.

ஆட்களைச் சுத்திவிட்டுத் தனது அலுவலை ஒப்பேற்றத் தக்க வல்லமை இவளிடம் உண்டு என்பதைக் கண்டவுடனேயே அவன் உணர்ந்து கொண்டான். இவளைத் தானாகவே கையாள வேண்டிய அவசியத்தையும் அப்போது உணர்ந்துகொண்டான் றொபேட்.

பயணிகள் பதிவு, ஆசன ஒதுக்கீடு, விமானப் பயணச் சீட்டுக்களை வழங்கல் போன்ற பல பணிகளை அவள் கையாள அவளது கணினியே கைகொடுக்கும்.

செய்யவேண்டி இருப்பதாகவும், அதனால் துல்லியமாக பயணத் திகதிபற்றித் தெரியவேண்டும் எனவும், காப்புறுதித் தொகை பெரியதாக இருப்பதால் கட்டண இழப்புக்களை தான் தவிர்க்க விரும்புவதாகவும் றொபேட் மேலும் தெரிவித்தான்.

அசட்டையாக இருந்த அனற்றை அவனது உரையாடல் சற்றுக் கவர்ந்தது எனலாம். அவளது ஆர்வம் இவனது கேஸில் சற்று அதிகமானது. 'பெரிய காப்புறுதிக் கட்டணம் என்றால், காப்புறுதி செய்யப்படும் பொருட்களின் பெறுமதி எவ்வளவாக இருக்கும்?' என அவள் நினைத்தாள்.

ஐந்து பேருக்கான ஆசனப் பதிவை றொபேட் கேட்டிருந்தான்.

''ஒரு பயணி தனது பயணத்தை ரத்துச் செய்வதாக இருந்தால் மட்டும் நீங்கள் கேட்கும் திகதியில் பயணத்தை ஒழுங்கு செய்ய இயலும்'' என்றாள் அனற்.

''பொதுவாக கடைசி நேரத்தில்தான் அத்தகைய அறிவித்தல்கள் வருவதுண்டு. அதற்கிடையில் ஏனைய ஆசனங்களும் பறிபோய் விடும்!'' என்றாள் மேலும் அவள்.

பின்பு சில தொலைபேசித் தொடர்புகளை மேற்கொண்டாள். ஆனாலும் அவளது கவனம் இவனது தொலைபேசி உரையாடல் மீது இருந்ததை அவன் அவதானிக்கத் தவறவில்லை. சற்று நேரம் கழித்து றொபேட்டின் ஆசனப்பதிவிற்கு அவள் சம்மதித்தாள். பதிவை மேற்கொண்டபின் வெளியேறிய றொபேட் விமான நிலைய அதிகாரியிடம் வந்தான்.

அவனது சந்தேகம் நியாயமானதாக இருக்கலாம் என அந்த அதிகாரி றொபேட்டிடம் தெரிவித்தபோது றொபேட் நெற்றியைச் சுருக்கி ஆராய்ந்தான். 'அதற்கிடையில் என்னதான் இவர்கள் கண்டுபிடித்தார்களோ?'

றொபேட்டிற்கான ஆசனங்களைப் பதிவதற்காக அவள் அதிக ஆர்வம் எடுத்திருந்தாள். பிற பயணி ஒருவரை— அதுவும் ஒரு வி.ஐ.பியை வற்புறுத்தி அவரது பயணத்தை இரத்துச் செய்யவைத்து இவனுக்கான பதிவை அவள் மேற்கொண்டிருந்தாள்.

இந்த நடவடிக்கை அதிகாரிகளைச் சீற்றமடைய வைத்தது. நிறுவனத்தின் பெயருக்கு மாசு கற்பிக்கும் வகையில் இவள் செயற்படுவது பற்றி அவர்கள்

## சுடர் ஒளி தொடர் கதை

இதுவரை.....

மேசியின் கொலைவழக்கில் டானியல் நிரபராதி என்று உறுதியாக நம்புகிறான் றோமன். மைக்கேல்தான் கொலையைச் செய்திருக்கவேண்டும் என நிரூபிக்க முயல்கிறான் அவன். மைக்கேலின் இரத்த மாதிரி, கைரேகைப் பதிவுகளைப் பெறுவதற்காகத் திட்டமிட்டு நாடகமாடுகிறான். அதில் வெற்றியும் பெறுகிறான்.

இனி.....

கவலைப்பட்டார்கள். அவர்களைச் சற்றுப் பொறுமை காக்கும்படியும் இன்னும் பலவிடயங்கள் ஆராயப்படல் வேண்டும் எனவும் றொபேட் கேட்டுக் கொண்டான்.

பிறிதொரு விமான நிறுவனத்தில் அந்த வி.ஐ.பி யிற்கு ஆசனத்தை ஒதுக்கிக் கொடுத்து றொபேட்டிற்கு உதவி செய்யும் அவசியம் அவளுக்கு ஏன் ஏற்பட்டது? அத்தகைய அவசியத்தை ஏற்படுத்தும் வகையில் றொபேட்டினது தந்திரம் எவ்வாறு செயற்பட்டது என்றெல்லாம் அதிகாரிகள் சிந்தித்தாலும் அவற்றுக்கெல்லாம் விடை கிடைக்கவில்லை.

அதற்கான விடை றொபேட்டிற்கும் அனற்றிற் கும் மாத்திரமே தெரிந்திருந்தது. அனற்றைப் பின்தொடரும் முடிவை இப்போதைக்கு றொபேட் கைவிட்டிருந்தான். இது வில்லியமை சீற்றமடைய வைத்தது.

தனது இலக்கில் வெகுதூரம் முன்னேறி விட்டதாக றொபேட் வில்லியமிடம் தெரிவித்திருந்தான். ''இவன் எப்போதும் முன்னேறிக் கொண்டே இருப்பான். எங்களது அவசரம் இவனுக்குப் புரியாது!'' எனத் தவித்தான் வில்லியம். இருவரும் அன்று மாலை றொபேட் ஏஜென்ஸியில் சந்திப்பதாக ஏற்பாடு.

***

ஆய்வுகூட அறிக்கையினை முற்றிலும் நம்பியே றோமன் வழக்கில் தீவிரமாக இறங்கியிருந்தான். ஆனால் ஆய்வுகூடத்தில் இருந்து அவன் கைக்கு அறிக்கை மட்டும் தான் கிடைத்திருந்தது. அங்கிருந்த தடயங்கள் அனைத்தும் மாயமாக மறைந்திருந்தன. சந்தடி இல்லாமல் அத்தனை பாதுகாப்பையும் மீறி காரியங்கள் நடந்தேறி இருக்கின்றன.

கோர்ட்டில் சுமரா கேட்டிருந்த ஆதாரங்கள் எதனையும் றோமனால் உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்க இயலவில்லை. அவை மாயமாக மறைந்தமைக்கும் மைக்கேல் மீதுதான் சந்தேகம் எழுப்பப்பட்டது. ஆதாரம் அற்ற ஊகங்கள் எதனையும் பற்றிச் சிந்திக்கும் நிலையில் சுமரா இருக்கவில்லை.

உரிய நேரத்தில் ஆய்வுகூட தொழில்நுட்ப அதிகாரிகள் தக்க ஆதாரங்களுடன் நீதிமன்றிற்கு வரவில்லை. அவர்கள் வெறுங்கையோடு அங்கு வந்தென்ன லாபம்? என்று விட்டு விட்டார்கள். ஒரு பிரதிநிதி மட்டும் கேட்ட ஆதாரங்கள் எதுவும் தம்மிடம் கைவசம் இல்லை என்று தெரிவிக்க வந்திருந்தான்.

ஆய்வுகூட அதிகாரிகள் பலருக்கும் எதிராக விசாரணைகள் எழுந்ததுதான் மிச்சம். தடயங்கள் போன வழி புரியவில்லை. மீண்டும் புதைக்கப்பட்ட மேசியின் சடலத்தை அகழ்ந்து ஆராய வேண்டிய தேவை எழுந்தது.

***

வழமையாக வாராந்தம் மேசியின் கல்லறைக்கு மலர்களைச் சாத்த வருபவன் டானியல். அவன் பிணையில் வெளியே வந்த அன்று கல்லறைக்கு வந்தபோது அவ்விடம் அசாதா ரணமாகத் தென்பட்டது. கற்கள் புரட்டப்பட்டு இருந்தன. உடனடியாக தனது சந்தேகத்தை பொலிஸில் தெரிவித்தான் அவன். அதேவேளை சடலத்தை மீண்டும் ஆராயும் நீதிமன்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் பாதுகாப்பாகப் புதைக்கப்பட்டிருந்த அவளது சடலத்தைக் காணவில்லை.

(தொடரும்)

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00–11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30–12.00 | | | | | | | |
| 12.00–12.30 | | | | | | சின்னச் சின்ன ஆசைகள் | |
| 12.30–13.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | | |
| 13.00–13.15 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்னி | சக்தி வீக்கென்ட் மெட்னி |
| 13.15–13.30 | | | | | | | |
| 13.30–14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | ரிலாக்ஸ் டைம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00–14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30–15.00 | | | | | | | |
| 15.30–16.00 | | | | | | இளையகானம் | ரிலாக்ஸ் டைம் |
| 16.00–16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | |
| 16.30–17.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | செம்பருத்தி | சனிதபதனி |
| 17.00–17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டு | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | புஷ்பாஞ்சலி |
| 17.30–18.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | இயந்திரப் பறவை | சின்னத்திரை |
| 18.00–18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | தந்திர பூமி | ஆலோசனை | இப்படிக்கு நேரம் நீங்கள் |
| 18.30–19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாட் ஷோ | ஆனந்தபவன் |
| 19.00–19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | செம்பருத்தி | சப்தஸ்வரம் |
| 19.30–20.00 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டிகளே | இப்படிக்கு தென்றல் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00–20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30–21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | இயந்திரப்பறவை | ஜன்னல் |

# என் வாழ்க்கையே வலி கலந்த சுகம்
# வாலி நாயகன் கூறுகிறார்



மென்மையான ஹீரோவாக அறிமுகமாகி 'காதல் கோட்டை' மூலம் ரசிகர்களின் மனதில் கோட்டை கட்டியவர் அஜித் குமார்.

திடீரென 'அமர்க்களம்' படத்தில் அக்ஷன் ஹீரோவாக மாறினார். அஜித்தின் இந்த மாறுபட்ட நடிப்பிற்கு மக்கள் செங்கம்பள வரவேற்புக் கொடுத்தனர்.

இந்தப் படத்தில் தான் தனது துணைவி ஷாலினியையும் சந்தித்தார். தொடர்ந்து காதல், திருமணம் என்று கலக்கினார்.

அமர்க்கள வழியில் 'தீனா', 'சிட்டிசன்' போன்ற அக்ஷன் படங்களைத் தந்தார். 'சிட்டிசன்' படத்தில் 9 வேடங்களில் நடித்து பரபரப்பையும் ஏற்படுத்தியிருக்கிறார். இப்போது அஜித்திடமும் மாறுபட்ட படத்தை ரசிகர்கள் எதிர்பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

எதையும் யோசிக்காது டைரக்டர்கள் சொல்வதை நடித்து விட்டுப் போன காலம் மாறித் தானும் தனது படத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய பொறுப்பு அஜித்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாறுபட்ட தோற்றத்திற்காக உடல்பருத்து, மெலிந்து, மேக்கப் சாதனங்களைப் பொருத்தி, அகற்றி... அப்பப்பா! அநேக சிரமங்களுக்கு உள்ளாக வேண்டியிருக்கிறதே. இதை அஜித் எப்படி எடுத்துக் கொள்கிறார்? இந்தப் புதிய பொறுப்பு அவருக்கு வலியா? சுகமா? அஜித்திடமே கேட்போமா!

''வலிகலந்த சுகம் என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. எனது வாழ்க்கையே வலி கலந்த சுகங்களில் தான் ஓடிக் கொண்டிருக்கிறது. மோட்டார் பந்தய வீரனாக வரவேண்டும் என்ற இலட்சியத்தில் இருந்த எனது இலட்சியப் பயணம் மாறி திடீரென சினிமாவிற்குள் நுழைந்து நடிகனானேன்.

இதில் மோட்டார் பந்தய வீரனாக மாற முடியாமல் போனமை மனதின் ஓரத்தில் வலியாக இருந்தாலும் நடிகனாகி இத்தனை பொருள் புகழ் கிடைத்தது சுகமே.

அது போல்தான் கரெக்டருக்காக சில வலிகளை எதிர்நோக்க வேண்டியிருந்தாலும் படம் வெளிவந்து அந்த கரெக்டரை மக்கள் பாராட்டும் போது சுகம் கிடைக்கத் தான் செய்கிறது.

அத்துடன் எனக்கு இத்தனை பெயர், பணம், புகழைத்தந்த ரசிகர்களுக்காக எந்த வலியையும் நான் தாங்கத் தயார்''.

கே: 'அமர்க்களம்', 'தீனா', 'சிட்டிசன்' போன்ற படங்கள் அக்ஷன் படங்களாகவே இருக்கின்றன. இனியும் அப்படித்தானா?

ப: அக்ஷன் படங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளீர்கள். 'வாலி', 'முகவரி' படங்களை விட்டு விட்டீர்களே! இவற்றில் நான் நடிப்பிற்கே முக்கியத்துவம் கொடுத்திருந்தேன்.

கே: 'சிட்டிசன்' படத்தில் இமேஜ் பார்க்காமல் பலமாறுபட்ட கெட்டப்புகளை ஏற்றிருக்கிறீர்களே!

ப: இன்றைய சூழலில் இமேஜைப் பார்த்துக் கொண்டிருப்பது கடினம். கலைஞர்களுக்குப் பல முகங்கள் இருக்க வேண்டியது அவசியம்.

கே: நல்ல கதைக்கு முக்கியத்துவம் கொடுத்தேன் என்று கூறும் நீங்கள் 'சிட்டிசன்' படத்தில் வசுந்தரா தாஸை பாடல்களில் மட்டுமே பயன்படுத்தியிருக்கிறீர்களே.

ப: படங்கள் மூலம் மக்களுக்கு நல்ல கருத்துக்களைச் சொல்வது மட்டுமல்ல, ஆயிரக் கணக்கானவர்களின் வயிற்றுப் பாட்டையும் பார்க்க வேண்டியிருக்கிறதே!

கே: 'சிட்டிசன்' படத்தினைப் பற்றி ஊடகங்கள் பல்வேறு பட்ட விமர்சனங்களை வெளியிட்டன. அதனைப் பற்றி உங்கள் கருத்து?

ப: சிட்டிசனைப் பற்றிய ஊடகங்களின் கருத்துக்கள் நடுநிலைமையாக இருந்தன. விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளும் குணவியல்பு கொண்டவன் நான். நிறைகளிற்கான பாராட்டை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளும் அதே நேரத்தில் குறைகளைத் தெரிந்து திருத்திக் கொள்ள முயற்சி செய்கிறேன்.

கே: வயதிற்கொவ்வாத வேடங்களை ஏற்க முயற்சிப்பது அஜித்தின் அவசரக் குடுக்கைத் தனத்தைக் காட்டுகிறது என்று கூறும் ஒரு சிலரைப் பற்றி...!

ப: அதுவும் ஒரு விதத்தில் நியாயமான கருத்தாக இருந்த போதிலும் அவசரம் இன்றைய அவசியமாகி விட்டது. ரொமான்ஸ் செய்வதற்கு பிரசாந்த் இருக்கிறார். மாதவன் இருக்கிறார். நாளுக்கு நாள் புதுப்புது ஹீரோக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். சினிமா என்னை ஒதுக்கி விட முன்னர் சினிமாவில் என்னை பதிவு செய்து கொள்ள முயற்சி செய்கிறேன் அவ்வளவே.



அஜித்குமார்

கே: தற்போது வெளிவந்துள்ள 'பூவெல்லாம் உன் வாசம்' படத்தைப் பற்றி...!

ப: குடும்பக் கதை, பல மூத்த கலைஞர்களுடன் நடிக்கிறேன். எனது சமீபத்திய படங்களிலிருந்து மாறுபட்டது.

— ஷாம்



குஷ்பு

## மும்பையில் குஷ்பு நாயகி வேட்டை

குஷ்பு நாயகி வேட்டையில் மும்முரமாகியிருக்கிறார். இதற்கென மும்பையில் சுற்றிக் கொண்டிருக்கிறார். விரைவில் சொந்தத் தயாரிப்பில் ஈடுபடப்போகிறார்.

பிரசாந்த்தை ஹீரோவாக நடிக்க வைப்பதற்கு எண்ணியுள்ளார். இந்தப் படத்திற்கு நாயகி தேடியே அம்மணி மும்பை சென்றிருக்கிறார். டைரக்டர் வேறுயாருமல்ல, அவரது கணவரேதான். தன் மனதில் நினைத்துள்ள கதாநாயகிக்காக மும்பாயின் மூலைமுடுக்கெங்கும் தேடுதல் வேட்டையை நடத்திக் கொண்டிருக்கிறாராம். இதற்கிடையில் இவர் கன்னடத்தில் நடித்து வெளிவந்திருக்கும் 'ஆன்ட்டி பிரீத்திசி' என்ற படம் சக்கை போடு போடுகிறதாம்.

## தவணை முறையில் தமிழா?

சௌந்தர்யா தெலுங்குத்திரையுலகைக் கலக்கிக் கொண்டிருக்கும் அழகு தேவதை. இருந்தாலும் இடையிடையே தமிழிலும் தரிசனம் தருவதனால் தமிழ் ரசிகர்களுக்கும் பரிச்சயமானவர். முன்னர் பார்த்த அதே அழகுடன் 'தவசி'க்காக தமிழ்த் திரையுலகை எட்டிப் பார்த்திருக்கிறார். அவரைக் கண்டதும், என்ன சௌந்தர்யா தவணை முறையில் தமிழா? இடையிடையே தமிழில் எட்டிப் பார்க்கிறீர்கள். தமிழ்த்திரையுலகிலும் கவனம் செலுத்தினால் தமிழிலும் நம்பர் வன் இடம் உங்களுக்குத்தான். என்று ஐஸ் வைத்தால், ''அப்படி ஒன்றுமில்லை. நல்ல கதையுடன் என்னைத் தேடி வருபவர்களின் படங்களில் நடிக்கிறேன்'' என்கிறார் சாதா ரணமாக.



சௌந்தர்யா

## 'பாண்டவர் பூமி' படத் துளிகள்

இரண்டு குடும்பங்களுக்கிடையிலான நிலத்தகராறு தான் 'பாண்டவர் பூமி' படத்தின் கருவாம். இதற்காக ஒரு கிராமத்தையே 'செட்' வடிவில் அமைத்துள்ளார்கள்.

* அருண் குமார் பொறியியலாளராக நடிக்கிறார்.

## தொடரும் மூன்று முடிச்சு மர்மம்!

### மறுபக்கம்

அழகு நடிகை அவர். திருப்பதி அவருக்கு சொந்த ஊர். தெலுங்கில் அறிமுகமாகி இரண்டு மூன்று படங்களில் நடித்துக் கொண்டிருந்தார்: மாநிறம் ஆனாலும் சிந்தும் சிரிப்பழகி.

'செம்பருத்தி'யில் காதல் இளவரசனுக்கு ஜோடியாக பழம் பெரும் நடிகையுடன் நடித்தார். தொடர்ந்து பல படங்களில் கதாநாயகி வாய்ப்பு வரவே மூட்டை முடிச்சுகளுடன் வந்து சென்னையிலேயே செட்டிலாகிவிட்டார்.

சில பெண்கள் இருப்பார்கள். எதையும் வெளிப்படையாக வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற ரீதியில் பேசி விடுவார்கள். இவர்களிடம் கள்ளங் கபடம் எதுவும் இருக்காது. நேசம் என்றால் அன்பைச் சொரிவார்கள். கோபம் என்றால் திரும்பியும் பார்க்க மாட்டார்கள். இவர்களுக்கு வாய் சரியில்லை என்று சொன்னாலும் நல்லவர்கள். எதையும் துடுக்குத்தனமாகப் பேசி விடுவார்கள். இந்த வகையைச் சேர்ந்தவர் 'ரோஸ்' நடிகை. இதனைத் திரையுலகினைச் சேர்ந்தவர்களும் புரிந்து கொண்டு நடிகைக்கு ஒத்துழைத்தனர். ஆனாலும் ஆரம்பத்தில் ஒரு சிலர் ரோஸ் நடிகையின் முன்னேற்றத்துக்கு தடை செய்ய முயற்சி செய்தனர். ஆனால் ரோஸ் நடிகை தனது காதலரின் உதவியினால் அனைத்து சதிகளுக்கும் முகம் கொடுத்து முன்னேறியிருக்கிறார்.

காதலர் இவர்தான் என்று அறிமுகப்படுத்தி இத்தனை வருடங்களாகியும் திருமணம் செய்து கொள்ளவில்லை.


பத்திரிகைகள் 'ரோஸ்' நடிகையின் திருமணம் எப்போது? என்று கேள்வி கேட்டுத் துளைத்துக் கொண்டிருக்கின்றனர்

''அம்மணியும் நடக்கிற நேரத்தில் நடக்கும்'', ''விரைவில் நடக்கலாம்'' என்று மழுப்பலான பதிலைக் கூறிக் கொண்டிருக்கிறார்.

ஆனால் 'ரோஸ்' நடிகைக்கும் அவரது காதலருக்கும் எப்போதோ திருப்பதியில் திருமணம் நடைபெற்று விட்டது என்றும் திருமணமான செய்தியைப் பகிரங்கப் படுத்தினால் மார்க்கெட் அவுட்டாகி விடும் என்ற பயத்தினால்தான் திருமணமாகவில்லை என கூறிக் கொண்டிருக்கிறார் 'ரோஸ்' நடிகை என்று தமிழகத்தின் பிரபல சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. ஆரம்பத்தில் கிளாமரான வேடங்களில் நடித்து வந்தவருக்கு 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படம் நல்ல பெயரைக் கொடுத்தது.

பல படங்களில் நடிப்புத் திறமையை வெளிப்படுத்தும் வேடங்களில் நடித்து வருகிறார். ரோஸ் நடிகை பிழைக்கத் தெரிந்தவர். திருமண செய்தியை அதிகார பூர்வமாக அறிவித்த தேவயானியின் இன்றைய நிலைமை அனைவருக்கும் தெரிந்ததுதானே! 'ரோஸ்' நடிகை புத்திசாலித்தனமாக நடந்து கொண்டதனால்தான் அவரால் இன்னமும் டூயட் பாட முடிகிறது. ரசிகர்களாலும் ரசிக்க முடிகிறது. தனக்கு மூன்றாவது முடிச்சை தனது கணவர் தான் போட வேண்டும். அதற்காகவே படங்களில் கல்யாணக் காட்சிகள் வந்தால் இரண்டு முடிச்சை மட்டுமே போடுவதற்கு அனுமதிப்பதாக சமீபத்தில் நடிகை கூறியிருந்தார். அப்படியென்றால்....! அவரது தாலியின் மூன்றாவது முடிச்சை காதலர் போட்டு விட்டாரா? இந்த மூன்று முடிச்சு மர்மத்திற்கு நடிகைதான் விடை சொல்ல வேண்டும்.




இஷா

'என் சுவாசக்காற்றே'க்குப் பின்னர் காணாமல் போயிருந்த இஷாவைத் தேடிப்பிடித்து 'நரசிம்மா'வின் நாயகியாக்கினார் விஜயகாந்த் ரசிகர் களிடம் சபாஷ் வாங்கி விடலாம் என்று நினைத்து

# நைஸாக பயணமானார் நரசிம்மா நாயகி இஷா

தாராளமாக கால்ஷீட் கொடுத்து நடித்தார் இஷா. ஆனாலும் 'நரசிம்மா' வெளிவந்து இத்தனை நாளாகியும் இஷாவைத் தேடி வாய்ப்புகள் வரவில்லை. அதனால் யாருக்கும் சொல்லாமல் நைஸாக மும்பைக்குப் பிளைட் புக் பண்ணி விட்டார் இஷா.

# இனி இவர்கள்...

* 'பூவெல்லாம் உன் வாசம்' படத்தை அடுத்து 'ரெட்' படத்தில் முழு மூச்சுடன் நடிக்கப் போகிறாராம் அஜித். இதன் நாயகியாக ஒப்பந்தமாகியிருப்பவர் ஜோதிகா. ஆனால் உடனடியாகப் படப்பிடிப்பு தொடங்கப்படவுள்ளதனால் ஜோதிகாவின் கால் ஷீட் 'ரெட்' படத்திற்கு கிடைப்பது நிச்சயமில்லையாம்.

*சரவணன் 'ஆயி மகமாயி' என்ற படத்தில் ராஜேஸ்வர்மாவின் இயக்கத்தில் நடிக்கப் போகிறார்.

*'அலாவுதீன்' படத்தில் பிரபுதேவா நகைச்சுவை நாயகனாக நடிக்கிறார்.

*அன்பாலயா பிரபாகரனின் 'அசோகா' படத்தில் சம்யுக்தா வர்மா கதாநாயகியாக நடிப்பது தெரிந்த விஷயம், ஆனால் புதிய செய்தி– கவர்ச்சிக்காக மும்தாஜ் இடைச் செருகல் செய்யப்பட்டிருக்கிறார்.

# கோடியைத் தாண்டும் விஜய் சம்பளம்

ஏ.வி.எம். நிறுவனத்துடன் விஜய் இணைந்து பணியாற்றப் போகும் படத்திற்காக அவருக்கு 1கோடியோடு சென்னை நகர விநியோக உரிமையும் சம்பளமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் படத்திற்குக் கதை இன்னும் கிடைக்கவில்லை. மிகப் பெரிய வெற்றிப் படங்களைத் தந்த ஏ.வி.எம். நிறுவனத்தின் கதை வல்லுநர்கள் மூளையைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கிறார்களாம்.

விஜய்



# மும்தாஜ்-ரம்பா பனிப்போர்

'உள்ளத்தை அள்ளித்தா', 'மேட்டுக்குடி', 'உனக்காக எல்லாம் உனக்காக' போன்ற வெற்றிப் படங்களைத் தந்தது சுந்தர்.சி+கார்த்திக் கூட்டணி.

இப்போது இவர்கள் 'அழகான நாட்கள்' மூலம் மறுபடியும் இணைந்திருக்கிறார்கள். அழகான நாட்களுக்கு நடத்திய கதாநாயகி வேட்டையில் கடைசியில் சிக்குப் பட்டவர் ரம்பா. இவர் 'உள்ளத்தை அள்ளித்தா' ரம்பாவாக இல்லாது மெலிந்திருக்கிறார். இதை ஈடுசெய்வதற்கு தமிழ்த் திரையுலகின்தற்போதைய கவர்ச்சிக்குண்டு மும் தாஜை ஒப்பந்தம் செய்தனர்.


மும்தாஜ்


ரம்பா

ஆரம்பத்தில் கவர்ச்சிக்கென சேர்க்கப்பட்டவர் தானே யென்று மும்தாஜை ரம்பா சட்டை செய்யவில்லை. ஆனால் படத்தின் காட்சிகள் எடுக்கப்பட்ட போது தான் தன்னளவு சரிபாதி கனம் மும்தாஜின் கரெக் டரிலும் இருப்பதை உணர்ந்து கொண்டாராம். இதனால் இருவரிற்குமிடையே பனிப்போர் நடைபெறுகிறதாம்.

# கிளாமரா? கிண்டலா?

நடிகை சுவலட்சுமி நல்ல திறமையான நடிகை என்று பெயரெடுத்தவர் தற்போது திரையுலகில் நிலவி வரும் கவர்ச்சிப் போட்டியைச் சமாளிக்க முடியாது அவரும் சின்னத் திரைப்பக்கம் தாவியிருக்கிறார்.

இன்றைய காலகட்டத்தில் கிளாமராக நடிப்பது என்பது நகைச் சுவையாக நடிப்பது போன்று சாதாரண விஷயமாகி விட்டது என்றும் கூறுகிறார். அது சரி மானம் காக்க வேண்டு மென்றால் சின்னத்திரைப் பக்கம் போக வேண்டியது தானா? நல்ல திறமையான நடிகைகளுக்கு பெரியதிரை மதிப்பளிப்பது எப்போது? சுவலட்சுமி யிடமே கேட்ட போது;''அப்படி நான் சொல்ல வரவில்லை எங்கு நல்ல வாய்ப்பு கிடைத் தாலும் அதில் நடிப்பதற்குச் சம்மதமே! என்கிறார்


சுவலட்சுமி

# கரெக்டர் டம்மி! கடுப்பில் அப்பாஸ்!!


அப்பாஸ்

மாதவனும் அப்பாஸும் கிட்டத்தட்ட ஒரே வயதினரோ என்று எண்ணும் படியான தோற்றம் கொண்டவர்கள்.

அதனால் தானோ என்னமோ இருவரிற்குள்ளும் போட்டி அதிகமாகவே நிலவுகின்றது. 'ரிலாக்ஸ்' என்ற கன்னடப்படம் தமிழிற்கு வந்த போது அப்பாஸ் முக்கிய பாத்திரம் ஏற்றிருந்தார். மாதவன் கனம் குறைந்த இணைக் ஹீரோவாகவே நடித்திருந்தார்.

இதற்கு ஈடு செய்யுமாற் போல் 'மின்னலே' படத்தில் அப்பாஸை ஓரங்கட்டி விட்டு மாதவனை ஹீரோவாக்கி விட்டனர். அப்பாஸிடம் கேட்டால் மனிதர் எண்ணெயில் விழுந்த கடுகாக பொரிந்து தள்ளுகிறார். ''டபிள் ஹீரோ சப்ஜெக்ட் என்று தான் என்னிடம் சொன்னார்கள். 50 நாட்கள் கால்ஷீட்டும் வாங்கினார்கள். பின்னர் என் கரெக்டரை டம்மியாக்கி விட்டார்கள். இதற்கு மாதவன் தான் காரணம்.''

# திரை மறைவில்


அமீஷா

'பூமி'நடிகை சென்னை வந்தால் தன் வீட்டில் தங்கும்படி காதலர் அன்புக்கட்டளை போட்டுள்ளாராம். ஹோட்டலில் தங்கினால் என்ன என்று நண்பர்கள் கேட்டால் ''காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போன கதையாகி விடக்கூடாது. நான் இங்கே காதலித்துக் கொண்டிருக்க, ஹோட்டல் மேனேஜர், ரூம்போய் என்று 'பூமி' நடிகையின் மனதைக் களவாடி விட்டால் என்ன செய்வது? அதனால்தான் இந்த முன்னேற்பாடு'' என்று கூறிச் சிரிக்கிறார்.

**

'புரட்சி'யான மூத்த கலைஞருக்கும் ரம்யமான நடிகைக்கும் இடையேயான நட்பு பலப்பட்டு வருகிறதாம். தன் சமீபத்திய படங்களில் அம்மணியை ஒரு பாடலிலாவது நடிக்க வைக்க வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறாராம். உஷாரான திருமதி கணவருக்கு ரம்ய நடிகையுடன் ஜோடி சேர்வதற்குத் தடை போட்டுள்ளாராம்.

**

நட்புக்குரிய பெயரைக் கொண்டவர் கதாநாயகியாக முன்னேறிக் கொண்டிருக்கிறார். 'புன்னகை தேசம்' தனக்கு நல்ல பெயரைத் தரும் என்று அவர் கூறிக்கொண்டிருக்கிறார். இது ஒருபுறமிருக்க, நட்புக்குரிய பெயரின் முதலெழுத்தை சாதாரணமாக மாற்றிக் கொண்டு வளர்ந்து வருகிறார் கவர்ச்சி நடிகை ஒருவர். இந்த 'சிநேக' நடிகை 'சூப்பர் குடும்பம்' படத்தில் 'விவேக' நடிகருக்கு ஜோடியாக நடித்துள்ளார்.

விசித்திர நடிகையை வீழ்த்துவதே இலட்சியம் என்று புறப்பட்டுள்ள இந்தக் கவர்ச்சிப்புயல் தமிழில் நடிப்பதற்கு அதிக ஆர்வம் காட்டுகிறதாம்.

**

'ரன்'நடிகை தமிழின் பெயர் கொண்ட படத்தில் படம் முழுவதும் பாவாடை தாவணியோடு நடித்து வருகிறார். இதைப் பார்த்த நடிகையின் காதலர் அடடா பாவாடை தாவணியில் எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா? இனியாவது கொஞ்சம் கவர்ச்சியைக்குறைத்து அடக்க ஒடுக்கமாக நடிக்கப்பார் என்று அட்வைஸ் செய்தாராம். ஆனால் படத்தின் காட்சிகளைப் பார்த்தவருக்கு தலை சுற்ற ஆரம்பித்து விட்டதாம். கமெரா 'ரன்'நடிகையின் தொப்புளைச் சுற்றியே விளையாடியிருக்கிறதாம்.

**

அழகை விலை பேசிய படத்தில் நடித்த அமீஷ நடிகை மனம் வைத்தால்தான் விலை பேசும் அழகு வெளியாகுமாம். ஆனால் அவரோ இந்தப் படத்தைப்பற்றிக் கவலைப்படாமல் மும்பைக்குச் சென்றுவிட்டாராம். முக்கால் வாசி படப்பிடிப்பு முடிந்து விட்டது. மிகுதி 25% படப்பிடிப்பினை நடத்துவதற்கு அம்மணியின் ஒத்துழைப்பு அவசியமாம்.

**

**

இதென்னய்யா இது 12பி, சீ என்று பெயர் வைத்திருக்கிறார்கள் என 12பி படத்தினைப்பற்றிப் பேசியவர்கள் அதில் 'ரன்' நடிகையும் 'ஒளி'மயமான நடிகையும் நடிக்கிறார்கள் என்று கேள்விப் பட்டதும்தான் சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுள்ளார்கள்.


சிம்ரன்

# மார்பகத்தை நீங்களே சோதித்து புற்றுநோயில் இருந்து தப்புங்கள்!

கே: எனக்கு 4 வயதில் ஒரு மகன் இருக்கிறான். ஜூலை 29ஆம் திகதி வெளியான சுடர் ஒளியில் நீங்கள் எழுதியிருந்த பதிலைப் படித்து விட்டு எனது மகனின் விதையைச் சோதித்துப் பார்த்தேன். அவனுக்கு ஒரு விதை தான் இருக்கிறது. நீங்கள் கூறியிருந்தது போல உடனடியாக மருத்துவரைச் சந்தித்து சத்திர சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமா?

ப: இதே போன்ற ஒரு கேள்வியை இன்னொருவரும் அனுப்பி யிருந்தார். நீங்கள் சுடர் ஒளி மருத்துவப் பகுதியை படித்து அதன்படி நடந்து கொள்ள முயற்சிப்பது மகிழ்ச்சி. உங்கள் இருவருக்கும் சுடரொளி யில் அன்று வெளியான பதில்கள் பொருந்தும். நீங்கள் உடனடியாக மருத்துவரைச் சந்தியுங்கள். ஒரு விதை தான் விதைப் பையில் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு சத்திரசிகிச்சை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

கே: மல்லாவியை வதிவிடமாகக் கொண்ட நான் (பெண்) வயது 26. கடந்த 11 வருடங்களாக SLE என்ற வருத்தத்திற்கு உள்ளாகியிருக்கிறேன். SLE என்றால் என்ன வருத்தம்? எந்த எந்த உறுப்புக்களை அது பாதிக்கும். ஒவ்வொரு மாதமும் வைத்தியசாலைக்கு சென்று வருகிறேன். 'பிறிட்னிசிலோன்' என்ற மருந்தைப் பாவித்து வருகிறேன். தொடர்ந்து மருந்து பாவிப்பதனால் உடலில் பாதிப்பு ஏற்படாதா? இந்த வருத்தம் உள்ளதால் நான் திருமணம் செய்யலாமா? குழந்தைகள் பெற்றுக் கொள்ள முடியுமா? தயவு செய்து இது சம்பந்தமாக உங்கள் கருத்தைக் கூறுவீர்களா?

ப: Systemic lupus erythematosus என்னும் நோயை சுருக்கமாக SLE என்று சொல்லுவார்கள். உடலின் ஒரு பகுதியினால் சுரக்கப்படும் சில பதார்த்தங்கள் உடலின் மற்றைய பகுதிகளைத் தாக்குவதனால் இந்த நோய் ஏற்படுகிறது.

இந்த நோய் என்ன காரணத்தினால் ஏற்படுகிறது என்பது இன்னும் சரியான முறையில் கண்டறியப்படவில்லை. இந்த நோயை சரியான முறையில் கட்டுப்படுத்தாவிட்டால் இது உடலின் எந்த உறுப்பையும் தாக்கக் கூடும்.

உங்களுக்கு அதிஷ்டவசமாக இந்த நோய் கட்டுப்பாட்டில் இருப்பது, நீங்கள் எழுதியிருந்த மேலதிக விவரங்களிலிருந்து தெரிகிறது. இந்த நோய் ஏற்பட்டு 10 வருடங்களுக்குள் கடுமையான விளைவுகள் தோன்றா விட்டால் அதன் பின்வரும் காலங்களில் கடுமையான பிரச்சினைகள் ஏற்படுவது சாத்தியம் இல்லை. நீங்கள் தொடர்ந்து 'கிளினிக்' சென்று மருந்து பாவித்து வருதல் அவசியமாகும்.

நீங்கள் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் திருமணத்திற்கு முன்பே உங்களுடைய நோய் பற்றி நீங்கள் திருமணம் செய்ய இருப்பவரிடம் தெரிவித்துக் கொள்வது நல்லது. நீங்கள் குழந்தைகளும் பெற்றுக் கொள்ள முடியும். திருமணத்தின் பின் கருத்தடை மாத்திரைகளையோ ஊசிகளையோ பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தேவை ஏற்படின் வேறு கருத்தடை முறைகளைக் கையாளலாம்.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன். நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—
> இலவச மருத்துவ ஆலோசன்னை
> 'சுடர் ஒளி'
> 36/2, பிரெட்றிகா வீதி,
> கொழும்பு — 06.

> அஸ்பிறின் மாத்திரையை வெறு வயிற்றில் உட்கொள்ள வேண்டாம்

கே: எனக்கு வயது 16 (பெண்). நான் பருவமடைந்தது 14 வயதில். இந்தக் காலத்திலிருந்து எனது வலது மார்பகத் தில் ஒரு கட்டி உட்புறமாக இருக்கும் அறிகுறி தெரிகிறது. அது நாளுக்கு நாள் வேறு இடத்தில் இருப்பதை அறிய முடிகிறது. இது புற்று நோயாக இருக்குமா என்று மனப்பயமாக உள்ளது. இதற்கு என்ன செய்ய வேண்டும், யாரிடம் செல்ல வேண்டும் என்ற விவரங்களை உடனடியாகத் தருவீர்களா?

ப: நீங்கள் விவரித்திருப் பதைப் பார்க்கும் பொழுது இது ஆபத்தை விளை விக்காத Fibro adenoma எனப்படும் கட்டி போலவே தெரிகின்றது. இருந்த பொழுதும் இதனை உறுதிப்படுத்துவதற்காக வைத்தியர் ஒருவரிடம் சென்று பரிசோதித்துக் கொள்வது அவசியமாகும்.

மார்பகத்தில் ஏற்படும் புற்று நோய்கள் கூட ஆரம் பத்திலேயே கண்டறியப் பட்டால் பூரணமாகக் குணப்படுத்த முடியும். எனவே எல்லா பெண் களும் 3 மாதங்களுக்கு ஒரு தடவையாவது தமது மார்பகங்களை தாமே மிக கவனமாகச் சோதித்துப் பார்க்க வேண்டும்.

அவ்வாறு சோதித்துப் பார்க்கும் பொழுது ஏதாவது கட்டி இருப்பது தெரிந்தால் அல்லது மார்பகங் களின் வடிவத்தில் ஏதாவது மாற்றம் ஏற்படுவது தெரிந்தால் உடனடியாக காலம் தாமதிக்காது வைத்தியர் ஒருவரிடம் சென்று தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

பல பெண்கள் ஒழுங்காக தமது மார்பகங் களைச் சோதித்துக் கொள்ளாததாலும், கட்டி இருப்பது தெரிந்தும் உடனடியாக மருத்துவக் கவனிப்பை நாடாததாலும் பெரும் பாதிப்புக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். மார்பில் ஏற்படும் கட்டி புற்று நோயாக இருந்தாலும் கூட அது ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால் அதனைப் பூரணமாகக் குணப்படுத்தலாம் என்பதை மறந்து விட வேண்டாம்.

> உடலின் ஒரு பகுதியில் சுரக்கும் சில பதார்த்தங்கள் மற்றைய பகுதியைத் தாக்கும் ஆபத்து.

கே: எனக்கு (ஆண்) வயது 53. கடந்த 6 வருடங்களாக எனக்கு நீரிழிவு நோய் இருந்து வருகிறது. ஒழுங்கான உணவுக் கட்டுப்பாட்டின் மூலமும் மருந்தின் மூலமும் இந்த நோய் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது. கடந்த 4 மாதங்களாக நீரிழிவு மாத்திரையுடன் எனக்கு அஸ்பிறின் மாத்திரையின் பாதிக் குளிகையையும் எடுக்குமாறு தரப்படுகிறது. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அஸ்பிறின் மாத்திரை நல்லதா? அஸ்பிரின் மாத்திரையை தொடர்ந்து பாவித்தால் வயிற்றில் புண் ஏற்படும் என்று சொல்லப்படுகிறதே, நான் கொலஸ்ட் றோலைக் குறைப்பதற்கான மாத்திரை களும் பாவிக்கின்றேன். இவ்வாறு எல்லா மருந்துகளையும் ஒன்றாகப் பாவிப்பது பாதுகாப்பானதா?

ப: நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு மாரடைப்பு அல்லது பாரிசவாதம் (Stroke) ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் சற்று அதிகமாகும். அஸ்பிறின் என்ற மருந்திற்கு மாரடைப்போ அல்லது பாரிசவாதமோ ஏற்படுவதைத் தடுக்கும் அல்லது குறைக்கும் வல்லமை உண்டு. எனவே தான் உங்களுக்கு அஸ்பிறின் என்ற மாத் திரை தரப்படுகிறது. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதில் அஸ்பிறினுக்கு எந்தப் பங்கும் இல்லை.

அஸ்பிறின் என்ற மருந்தை வெறு வயிற்றில் அல்லது சாப்பாட்டிற்கு முன் பாவித்தால் வயிற்றிலே புண் ஏற்பட சந்தர்ப்பம் உண்டு. எனவே இதனை இரவு சாப்பாட்டிற்குப் பின் கரைத்துக் குடித்தால் வயிற்றில் புண் ஏற்படும் சந்தர்ப்பம் குறைவு. நீங்கள் எல்லா மாத்திரைகளையும் சேர்த்துப் பாவிப்பதால் தீங்கு வருமென்று பயப்பட வேண்டிய அவசியமில்லை. இவற்றைப் பாவிக்கும் போது உங்களுக்கு வயிறு எரிவு ஏற்பட்டால் வைத்தியரிடம் தெரிவியுங்கள்.

# ராசி பலன்

09.09.2001 முதல் 15.09.2001 வரை

பொ.சந்திரன்.

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1**

செவ்வாய், சுக்கிரன், சூரியன், ராகு, கேது ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணத் தட்டுப்பாடு வரவாய்ப்புள்ளது. கல்வியிலே ஆர்வம் குறையலாம். எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்துமுடிக்க இயலும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத் தலாம். மன அமைதி குன்றும். தெய்வ தரிசனம் கோயில் வழிபாட்டுக்குப் பலன் உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில்துறையில் பெரிதாக முன்னேற்றம் இல்லை.

**இடபம்: கார்த்திகை 2, 3, 4, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2**

சனி, சூரியன், புதன், குரு ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதியுண்டு. எடுத்த கருமங்களுக் குத் தடங்கல் ஏற்பட்டு தாமதமாக நிறைவேறும். வீடு, வாகனம் இலாபம் தரும். இருப்பிட மாற்றத்துக்குப் பலன் உண்டு. உடல் ஆரோக்கியம் நன்று. பிரயாண வாய்ப்பு உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. தொழில்துறை முன்னேறும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

சனி, சுக்கிரன், சூரியன், புதன் ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணத்தட்டுப்பாடு வரலாம். கல்வியில் பெரிதாக ஆர்வம் இருக்காது. எடுத்த செயலை இலகுவில் வெற்றிகரமாக செய்துமுடிப்பீர்கள். மன அமைதி குன்றலாம். வீடு, வாகனம் இலாபம் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. தேக ஆரோக்கியம் நன்று. தொழில்துறையில் சில பின்னடைவு வர வாய்ப்புள்ளது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்**

சனி, புதன், சூரியன், ராகு, கேது ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயலை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். வீடு. வாகனம் செலவை உண்டாக்கலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. தேக ஆரோக்கியம் நன்று. தொழில்துறையில் மெதுவான முன்னேற்றம் இருக்கும்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1**

சூரியன், புதன், சனி, குரு, ராகு ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயலை இலகுவில் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். வீடு, வாகனங்களால் செலவுக்கு இடம் உண்டு. தேக ஆரோக்கியம் நன்று. தொழில்துறையில் சில சமயம் பின்னடைவு வர வாய்ப்புண்டு. நண்பர்களாலும் சகோதரர்களாலும் உதவியுண்டு.

**கன்னி: உத்தரம், 2,3,4, அத்தம், சித்திரை 1,2**

சூரியனையும் கேதுவையும் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயலை இலகுவில் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். மன அமைதியுண்டு. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு உண்டு. தேக ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வு உண்டு.

**துலாம்: சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

குரு, ராகு, சுக்கிரன், சூரியன், புதன், கேது ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்காது. வீடு, வாகனம் செலவை உண்டாக்கலாம். எடுத்த செயல் தாமதமாக நிறைவேறும். திருமண வாய்ப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் மெத்தனமாக இருக்கும்.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுஷம், கேட்டை**

சுக்கிரன், சூரியன், புதன், ராகு ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணத்தட்டுப்பாடு வரலாம். கல்வியில் ஆர்வம் குறையலாம். எடுத்த செயல் தாமதமாகும். மன அமைதி இருக்காது. வீடு, வாகனம் செலவை உண்டாக்கலாம். தேக ஆரோக்கியம் நன்று. தொழில்துறை முன்னேறும். பதவி உயர்வு உண்டு. புதிய தொழில் கிடைக்கலாம். நண்பர்களால் உதவியுண்டு.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1**

சனி, குரு, சூரியன், புதன் ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் பெரிதாக ஆர்வம் இருக்காது. மன அமைதி குறையலாம். எடுத்த செயலை இலகுவில் செய்து முடிப்பீர்கள். வீடு, வாகனம் இலாபம் தரும். திருமண வாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியம் நன்று. தொழில்துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

**மகரம்: உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2**

சுக்கிரன், சூரியன், புதன், ராகு, கேது ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயலை இலகுவில் செய்து முடிப்பீர்கள். வீடு, வாகனம் இலாபம் தரும். மன அமைதி உண்டு. தேக ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. நண்பர்களால் செலவு ஏற்படலாம். பிரயாணம் தாமதமாகலாம். திருமணப் பேச்சுத் தாமதமாகலாம்.

**கும்பம்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3**

குரு, சூரியன், செவ்வாய், கேது ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயலை இலகுவில் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். வீடு, வாகனம் செலவை ஏற்படுத் தலாம். திருமண வாய்ப்புண்டு. தேக ஆரோக்கியம் நன்று. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

சனி, சூரியன், புதன், கேது ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயலை தடைவரினும் செய்து முடிப்பீர்கள். மன அமைதி இருக்காது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தேக சுகம் சிறிது பாதிக்கலாம். தொழில்துறையில் மெதுவான முன்னேற்றம் இருக்கும். நண்பர்களால் மட்டுப்படுத்தப் பட்ட உதவி இருக்கும்.

நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. பௌர்ணமி தினமான அன்று வெளியே நிலா பால் போன்ற ஒளியை அள்ளித் தெளித்துக் கொண்டிருந்தது.

டி.வி.யை நிறுத்திவிட்டு, விளக்குகளையும் அணைத்து விட்டுப் படுக்கைக்கு வந்தாள் மேர்ஸி. அவள் அணிந்திருந்த மெல்லிய நைட் கவுண் அவளது உடலின் சகல பரிமாணங்களையும் வெளிக் காட்டிக் கொண்டிருந்தது.

சற்றுக் குண்டான, உருண்டு திரண்ட உடற்கட்டு அவளது செல்வச் செழிப்பைப் பறைசாற்றியது.

காற்றோட்டத்துக்காக ஜன்னல்களைத் திறந்து வைத்திருந்தாள் மேர்ஸி. மின்விசிறியின் காற்று அவளது உடலுக்குஒத்து வருவதில்லையாதலால் ஜன்னல்களைத் திறந்து வைத்து விட்டே தூங்குவது அவளது வழக்கம்.

படுக்கையில் சாய்ந்து கண்களை மூடிக்

குடித்தது காட்டேரி.

மேர்ஸியின் உடல் மெல்ல மெல்லத் துடித்து அடங்கிப் போனது.

* * *

காலையில் மேர்ஸியை எழுப்ப வந்த பணிப்பெண் அந்தக் கோரக்காட்சியைக் கண்டாள். கட்டில் எங்கும் இரத்தம் திட்டுத் திட்டாய் உறைந்து கிடந்தது. முடிக்கற்றைகளும் சதைத்துண்டங்களும் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன.

உடனடியாகப் பொலிஸார் அழைக்கப்பட்டனர். கொடூரமாக மேர்ஸி கொலை செய்யப்பட்டிருப்பது தெரிந்தது. ஆனால் அவளது உடலைக் காணவில்லை. அவளைக் கொலை செய்தது மனிதனா? கொடிய விலங்கா? என்ற கேள்விக்கு விடைகாணப் பொலிஸாரால் இயலவில்லை.

மரங்களில் திடீரென்று ஒரு சல சலப்பு; பறவைகள் மெல்லச் சிறகடித்துக் கிளைதாவி அமரும் ஓசை; ஏதோ ஒரு காட்டு மிருகம் ஆங்காரமாக மூச்சுவிடும் இரைச்சல்;

மெல்லக் கண்களைத் திறந்து ஜன்னலினூடே நோக்கினாள் மேர்ஸி. மறுகணம்....

''விஷ்... ஷ்... க்....'' என்று காற்றைக் கிழித்துக் கொண்டு, கம்பியில்லாத ஜன்னலினூடாகப் பாய்ந்து வந்தது அந்தப் பயங்கர உருவம்.

# காட்டேரிகள் மீண்டும் வரும்!



அண்மைக்காலமாக அப்பகுதியை அச்சுறுத்தி வரும் இரத்தக் காட்டேரியின் வேலைதான் இது என்று பொதுமக்கள் பேசிக் கொண்டார்கள்.

மேர்ஸியின் குரூரக் கொலையைத் தொடர்ந்து, இரவு என்றதும் அந்தப் பகுதி மக்கள் பயத்தினால் நடுங்கத் தொடங்கினார்கள். இரத்தவெறி பிடித்தலையும் காட்டேரியிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக லேசாக இருள ஆரம்பித்ததுமே வீடுகளுக்குள் பதுங்கிக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

பாதுகாப்பு ஏற்பாடுகளும் பொலிஸாரால் பலப்படுத்தப்பட்டன. இரவுக் கண்காணிப்புக்காக ஆங்காங்கே பொலிஸார் ஆயுதங்களுடன் நிறுத்தப்பட்டனர்.

ஆனாலும் காட்டேரியின் கொலைகள் தொடர்ந்தன. காவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸார் சிலரும் காட்டேரியின் தாக்குதலுக்கு இலக்கானார்கள். கொல்லப்பட்டவர்களில் எவருடைய சடலங்களும் கிடைக்கவில்லை. சதைத்துண்டங்களும் இரத்தம் உறைந்து போன அடையாளங்களுமே காணப்பட்டன.

* * *

கொண்டாள். தூக்கம் மெல்ல மெல்ல அவளை அரவணைக்கும் நேரம்—

மரங்களில் திடீரென்று ஒருசல சலப்பு; பறவைகள் மெல்லச் சிறகடித்துக் கிளைதாவி அமரும் ஓசை; ஏதோ ஒரு காட்டு மிருகம் ஆங்காரமாக மூச்சுவிடும் இரைச்சல்;

மெல்லக் கண்களைத் திறந்து ஜன்னலினூடே நோக்கினாள்.

நிலவை மறைத்திருந்த கருமேகங்கள் மெல்ல விலக, ஜன்னலை ஒட்டியிருந்த மரக்கிளையில் ஓர் பயங்கரக் கரிய உருவம் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

நெருப்புத் துண்டங்களை ஒத்திருந்த இரண்டு சிவந்த விழிகள் அவளை விழுங்குமாப் போல் பார்த்துக் கொண்டிருந்தன.

கிளுகிளுப்பை ஏற்படுத்தக்கூடிய அவளது குளுகுளு உடல் முழுவதும் வியர்வையால் தெப்பலாகிப் போனது. உதவிக் குரலெழுப்ப வாய்திறந்தாலும் வார்த்தைகள் வெளிவர வில்லை. நாக்கு புரளாமல் ஒட்டிக் கொண்டது. படுக்கையை விட்டு எழ முயன்றாள் மேர்ஸி.

மறுகணம்....

''விஷ்... ஷ்... க்....'' என்று காற்றைக் கிழித்துக் கொண்டு, கம்பியில்லாத ஜன்னலினூடாகப் பாய்ந்து வந்தது அந்தப் பயங்கர உருவம்.

அப்போதுதான் அந்த உருவத்தின் முழுப் பரிமாணத்தையும் அவளால் பார்க்க முடிந்தது.

ராட்சத வெளவாலை ஒத்திருந்த மனித உருவம் அது.

காற்றில் பறந்து வந்து கட்டிலில் கிடந்த மேர்ஸியின் மேல் 'தொப்' பென விழுந்தது. சப்த நாடியும் அடங்கிப் போய் அதிர்ச்சியில் உறைந்து கிடந்தாள் மேர்ஸி.

முகமெல்லாம் புசு புசுவென்று ரோமம் வளர்ந்திருந்த அந்த உருவத்தின் வாய்க்குள்ளிலிருந்து இரண்டு கூரிய பற்கள் எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தன.

'ஆ'வென வாயைத் திறந்தவாறு மேர்ஸியின் முகத்தை நெருங்கிவந்து அவளது கழுத்தில் பற்களைப் பதித்தது.

அந்தக் காட்டேரியின் கூரிய பற்கள் மேர்ஸியின் கழுத்தில் ஆழ இறங்கின. பீறிட்டுக் கிளம்பிய இரத்தத்தைச் ''சர்... சர்...'' ரென்று உறிஞ்சிக்




மேயரின் அலுவலகத்தில் முக்கியமான கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கு குழுமியிருந்த அனைவரும் நகரின் முக்கியஸ்தர்கள்.

மேயர் ஸ்டான்போர்ட், பொலிஸ் கமிஷனர் கோர்டன், டார்ட்டாஸ் பிரபு, தொழிலதிபர்களான கேர்வின், ஜான்டோன்... என்று ஏறத்தாழ இருபத்தைந்து பிரமுகர்கள் அங்கு கூடி விவாதித்துக் கொண்டிருந்தனர்.

''இரத்தக்காட்டேரியைப் பிடிக்க பொலிஸாரால் இயலவில்லை. அமானுஷ்ய சக்திகளை நாடினால்தான் இதற்குத் தீர்வு கிடைக்கும்...''

மேயரின் வாதத்தை இடையில் வெட்டினார் கமிஷனர் கோர்டன்.

''மிஸ்டர் மேயர், இந்த விஞ்ஞான யுகத்தில் அமானுஷ்ய சக்திகளைப் போன்ற மூடநம்பிக்கைகள் தேவையில்லை. இராணுவத்தினரின் உதவியிருந்தால் அந்தக் கொலையாளியைப் பிடித்து விடலாம். என் எண்ணப்படி, மிருக வெறிபிடித்தலையும் பைத்தியக்கார மனிதன் ஒருவன் தான் இந்தக் கொலையைச் செய்திருக்க வேண்டும்!''

அதுவரை விவாதத்தில் பங்குபற்றாமல் ஒதுங்கியிருந்த டார்ட்டாஸ் பிரபு மெல்ல எழுந்தார்.

''கனவான்களே! இடையில் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். நமது முன்னோர்களின் காலத்தில் 'ட்ரகுலா' எனப்படும் இரத்தக் காட்டேரியுடன் தொடர்புடைய பல சம்பவங்கள் நடந்துள்ளன. இரத்தம் உறிஞ்சும் ட்ரகுலாக்களை எக்காலத்திலும் அழித்து விட முடியாது. அமானுஷ்ய சக்திகளின் உதவி கொண்டு அவற்றைத் துயிலில் ஆழ்த்த மட்டுமே இயலும்.

''அந்தத் தூக்கத்தை யாராவது தமது சக்தியால் கலைத்து விட்டால் ட்ரகுலாக்கள் மீண்டும் எழுந்து நடமாட ஆரம்பித்து விடும்.

''அவை வேட்டையாடி இரத்தம் குடிக்கும் ஒவ்வொரு மனிதனும் ட்ரகுலாவாக மாறிவிடுவான். ட்ரகுலாவுடன் 'இரத்த சம்பந்தம்' வைத்துக் கொள்ளும் எவரும் ட்ரகுலாவாகவே மாறிவிடுவது தவிர்க்க இயலாதது...''

பிரபு கூறி நிறுத்தியதும் அந்த அறை முழுவதும் பயங்கர அமைதி நிலவியது.

''அப்படியானால் ட்ரகுலாக்களை ஒழித்துக்கட்டவே இயலாதா?'' மௌனத்தைக் கலைத்தார் மேயர்.

''முடியாது! ட்ரகுலாக்களுடன் போராடிய எனது மூதாதைப் பிரபுக்கள் பலர் தமது உயிரைவிட்டிருக்கிறார்கள். சிலர் ட்ரகுலாக்களாகவே மாறியிருக்கிறார்கள். இறுதியாக எனது கொள்ளுப் பாட்டனாரின் பெரு முயற்சியால் தான் அவை உறக்க நிலைக்கு ஆட்படுத்தப்பட்டன.

''இப்போது அவை யாராலோ மீண்டும் எழுப்பப் பட்டிருக்கின்றன. நீண்ட நாள் இரத்த தாகத்தை அவை தீர்த்துக் கொள்வதை யாராலும் தடுக்க இயலாது!''

''இதெல்லாம் வெறும் மூடநம்பிக்கை!'' உணர்ச்சி வசப்பட்டநிலையில் ஆவேசமாகக் கத்தினார் கமிஷனர்.

''நான் கொலையாளியைக் கண்டுபிடித்துக் காட்டுகிறேன்! எனக்கு ஒருவார அவகாசம் தாருங்கள். நிச்சயம் அந்தக் காட்டேரியைப் பிடித்துவிடுகிறேன். 'ட்ரகுலா' விஷயமெல்லாம் சுத்தப்பொய்!''

''மக்களின் உயிரோடு விளையாடக்கூடாது கமிஷனர். நாம் உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும். இராணுவத்தின் உதவியைப் பெறவும் மேலதிக பொலிஸாரை வரவழைக்கவும் ஏற்பாடுகளைச் செய்கிறேன்.'' அந்த விவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார் மேயர் ஸ்டான்போர்ட்.

அந்தக் கூட்டம் அத்துடன் கலைந்தது.

* * *

அன்று இரவு கவிழ்ந்து விட்ட பின்பு மயானக் காட்டுக்கு வந்து சேர்ந்திருந்தார் கமிஷனர் கோர்டன். ஜீப்பை நிறுத்திவிட்டு நிதானமாக அடியெடுத்து வைத்து கல்லறைத் தோட்டத்தினுள் நுழைந்தார்.

எங்கும் மயான அமைதி.

காற்றின் அசைவு கூட இருக்கவில்லை.

''சரக்... சரக்...''

சருகுகள் கமிஷனரின் காலடியில் நசியும் ஓசை மட்டும் மெல்ல எழுந்தது.

ஏதோ ஓர் உறுத்தல்; பின்னந்தலையில் ஒரு குறுகுறுப்பு; ஆறாவது புலன் விடுத்த அவசர எச்சரிக்கையால் உந்தப்பட்டு பின்புறம் சட்டெனத் திரும்பினார் அவர்.

அடர்ந்த மரக்கிளையின் இருளினுள் இருந்து ராட்சத வெளவால் உருவம் ஒன்று தன்னை நோக்கிப் பாய்ந்து வருவது தெரிந்தது.

''க்றீ... க்... கீ...ய்க்...'' அந்த உருவத்திடமிருந்து வந்த ஆங்காரமான கத்தல் அவரது இரத்தத்தை உறைய வைத்தது.

சடுதியாக அதன் பாதையிலிருந்து விலகிக் கொண்டார். நிலத்தில் இறங்கிய மறுகணம் — 'ஜிவ்'வென்று மேலெழுந்து அவரைக் குறிவைத்துப் பாய்ந்தது காட்டேரி.

''டுமீல்! டுமீல்!... டுமீல்!...''

ஐந்து குண்டுகள் தொடர்ச்சியாக வெளிக்கிளம்பிக் காட்டேரியின் மார்பில் பாய்ந்தன. கோர்டனின் குறி தப்பவில்லை.

ஆனால்—

''ஹீ... ய்... ஹா... ஹா...'' காட்டேரியிடமிருந்து கர்ணகடூரமான நகைப்பொலி எழுந்தது. தன் மார்பில் பாய்ந்த குண்டுகளைப் பற்றி சட்டை செய்யாமல் அநாயசமாக அடுத்த பாய்ச்சலுக்குத் தயாராயிற்று.

''ஓ... ஜீசெஸ். இன்றோடு நான் தொலைந்தேன்...'' கமிஷனரின் உடல் பதற ஆரம்பித்தது.

''கூடாது...! நான் நிதானத்தை இழந்து விடக் கூடாது. எப்படியும் இதை ஒழித்தேயாக வேண்டும்...'' உறுதியை வரவழைத்துக் கொண்டு காட்டேரியை எதிர் கொள்ளத் தயாரானார் அவர்.

அடுத்த பாய்ச்சல். காற்றைக் கிழித்துக் கொண்டு அந்தரத்தில் கிளம்பிப் பாய்ந்தது அந்தக் காட்டேரி.

இம்முறையும் கமிஷனரின் வேகம் கைகொடுத்தது. சட்டென்று அவர் விலகித் தப்பிக் கொள்ள நிதானமிழந்த காட்டேரி, 'தொபீரென' தரையில் குப்புற விழுந்தது.

கமிஷனர் ஒரு கணமும் தாமதிக்கவில்லை. துப்பாக்கியில் எஞ்சியிருந்த இறுதிக் குண்டை காட்டேரியின் பிடரியைக் குறிவைத்துச் செலுத்தினார்.

''டுமீல்!''

''யீ... ய்... ய்... க்... றீக்...''

பிடரியில் குண்டு பாய்ந்து இரத்தம் பீறிடத் துடிதுடித்த காட்டேரியின் உடல் சிலநிமிடங்களில் ஓய்வுக்கு வந்தது.

ஆசுவாசப் பெருமூச்சு விட்டுக் கொண்டார் கமிஷனர். மெல்ல நெருங்கி காட்டேரியின் உடலைப் புரட்டிப் போட்டார். கோரமாகத் தென்பட்ட அதன் முகம் போலி என்பது தெரிந்தது. பயங்கரமான தோற்றமுடைய முகமூடி ஒன்று பொருத்தப்பட்டிருந்தது தெரிய வந்தது.

முகமூடியை நிதானமாகக் கழற்றி எடுத்த கமிஷனருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அங்கே இறந்து கிடந்தது டார்ட்டாஸ் பிரபு!

பயங்கரக் காட்டேரியாய் இரத்த வெறிபிடித்து அலைந்து வந்தவர் அவர் தான். குண்டு துளைக்காத அங்கியொன்றை அணிந்திருந்ததாலேயே கமிஷனரின் துப்பாக்கிக் குண்டுகள் காட்டேரியின் உடலில் பாயவில்லை.

டார்ட்டாஸ் பிரபுவின் மரணத்துடன் அப்பகுதியில் காட்டேரியின் அட்டகாசம் முடிவுக்கு வந்தது.

தன்னைப் பிடிப்பதில் கமிஷனர் கோர்டன் தீவிரமாக இருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டதும் அவரைக் குறிவைத்திருக்கிறார் டார்ட்டாஸ் பிரபு. அவரது குறி சரியாக இருந்திருந்தால் காட்டேரியின் அட்டகாசத்தைத் தடுக்க ஆளே இல்லாமல் போயிருக்கும்.

டார்ட்டாஸ் பிரபுவின் அரண்மனையில் பொலிஸார் தீவிர தேடுதல்களை மேற்கொண்டனர். அப்போது, கொல்லப்பட்டவர்களது சடலங்கள் அரண்மனைத் தோட்டத்தில் புதைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

காட்டேரியின் வெறியாட்டம் முடிவுக்கு வந்து விட்டாலும், ''டார்ட்டாஸ் பிரபு உண்மையில் இறக்கவில்லை. என்றாவது ஒரு நாள் மீண்டும் காட்டேரியாக எழுந்து வருவார்'' என்றே அப்பகுதி மக்கள் பேசிக் கொண்டனர்.



# புரிந்து கொண்டால் வாழ்க்கை இனிக்கும்

வாழ்க்கையை சுவாரஸியமாக்கப் பல விடயங்கள் உள்ளன. இதைப் பெரும்பாலான தம்பதியர் புரிந்து கொள்வதில்லை.

நேசித்தல்என்பது சாதாரண விடயம்தானே அது தாம்பத்திய வாழ்க்கைக்கு அவசியம் இல்லை என்று நீங்கள் நினைத்தால் அந்த நினைப்பு தவறானது.

சின்னச் சின்ன அணைப்புகள் எதிர் பாராத நேரத்தில் கொடுக்கும் முத்தங்கள், அன்பான வருடல்கள் என்பன தாம்பத் தியத்துக்கு வலுவூட்டும் ரகசியங்கள். இவற்றின் மூலம் பல பெரிய விஷயங் களைப் பரிமாறிக் கொள்ள முடியும். கணவன் மனைவியிடையே ஏற்படும் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துவிட முடியும். உரையாடல்களை விட நேசிப்புக் குத்தான் அதிக சக்தி இருக்கிறது.

இந்த விடயத்தில் மேலை நாட்டவரை நாம் பாராட்ட வேண்டும். அங்கு குடும்பத்தில் எவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும் கணவனும் மனைவியும் அதனை வெளிப் படையாகக் காட்டிக் கொள்ள மாட்டார்கள்.

கணவன் மனைவிக்கிடையே உண்மையான புரிந்துணர்வு இருந்தால் அவர்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளும் கோபதாபங்களும் தூசி போல் பறந்துவிடும்.

கணவன் வேலைத்தளத்தில் ஏற்படும் பிரச்சினையின் காரணமாக மனப்பாரத்துடன் வீட்டுக்கு வரலாம். அந்த நேரத்தில் மனைவியின் ஆதரவான அரவணைப்பு நிச்சயம் கணவனின் மனப்பாரத்தை இல்லாமல் செய்யும்.

பலமணி நேர ஆறுதல் வார்த்தைகளை விட உண்மையான நேசிப்பு பன்மடங்கு மேலானது.

அதே போல கணவனும் மனைவியை அன்பாக நேசிப்பதன் மூலம் மனைவியின் மனச்சுமையை நீக்க முடியும்.

இப்படி அன்பான புரிந்துணர்வுள்ள கணவனும் மனைவியும் ஒருவருக் கொருவர் தெரிவிக்கும் ஆறுதல்கள் துன்பமான வேளைகளைக் கூட இன்பமய மாக்கி விடுகின்றது. கணவன் — மனை விக்கு இடையேயான பாசப்பிணைப்பை வலுப்படுத்தி விடுகின்றது.

திருமணமாகிப் பல வருடங்கள் கடந்த நிலையிலும் நீடிக்கும் விட்டுக் கொடுப்புகள் கணவன் மனைவியை இளமையானவர்களாக்கும்.

கணவனின் அரவணைப்பை மனைவி விரும்புகிறாள். ஆனால் விரும்பாதவன் போல் பாசாங்கு காட்டுகிறாள். அதை விளங்கிக் கொள்ளா மல் கணவன் மனைவியை நேசிப்பதை நிறுத்தி விட்டால் அந்த இன்பம் முற்றுப்பெற்று விடும்.

''பிள்ளை களும் பிறந்து விட்டார்கள். இன்னும் என்ன வருடலும் சீண்டலும் வேண்டியிருக்கிறது''? என்று மனைவி கணவனுக்குக் கூறுவதை நிறுத்த வேண்டும்.

மனம் முழுக்க ஆசைகளை நிறைத்து வைத்துள்ள கணவன் மனைவியிடம் தன் விருப்பத்தை எப்போது வெளிப்படுத்து வது என்ற எண்ணத்தால் மனம் நிறைந்த நேசிப்பைக் காலப் போக்கில் முற்றாகவே நிறுத்திவிடுவான்.

இந்த விடயத்தில் கணவனும் மனைவி யும் தமக்குள் ஒரு போதும் முரண்படக் கூடாது. முரண்பட்டால் பசுமையாக இருக்க வேண்டிய வாழ்க்கை வீணாகிவிடும்.

இப்படியான சின்னச் சின்ன விடயங்கள் தாம்பத்தியத்துக்கு உற்சாகம் ஊட்டும் என்பதை மறந்து விடாதீர்கள். தொடத் தொட வாழ்க்கை இனிக்கும்.

# உங்கள் இணையத் தளங்கள்



கணினித் துறையில் ஆண்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்திய காலம் இருந்தது. ஆனால் இப்போது நிலைமை மாறி விட்டது. பெண்களுக்கென்று பல இணையத் தளங்கள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன.

உலக வரலாற்றில் பெண்கள் பல சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். அவற்றை அறிய ஒரு சிறந்த வழியாக www.distinguishedwomen.com என்ற இணையத் தளம் உள்ளது. இதனை டனுடா பாய்ச் என்ற பெண்ணே நிர்வகிக்கின்றார்.

ஒரு பெண் பல பருவங்களை வாழ்க் கையில் கடக்கிறாள். எந்த வயதுடைய பெண்ணும் பயன் பெறக்கூடிய இணையத் தளம் www.herplanet.com/index.shtml என்றழைக்கப்படுகிறது. பெண்களுக்கு உபயோகமான பல்வேறு தகவல்களை இத் தளத்தினூடாக அறியலாம்.

ஒவ்வொருக்கும் அன்றாடம் பிரச்சினை கள் ஏற்படுவது வழமை. பெண்களுக்கு ஏற்படும் உளவியல் சமூகப் பிரச்சினை களைத் தீர்க்க http://www.cyber parent.com/women என்ற தளம் உதவி புரியும்.

நடுத்தர வயதுப் பெண்களின் தோழி என www.inherprime.com ஐ அழைக்கலாம். பெண்கள் ஒரு புது உலகையே இத் தளத்தில் காணலாம்.

பெண்களுக்கான உடல் நலத் தகவல்களை பல தளங்கள் தருகின்றன. அவற்றுள் www.4woman.org என்பது சிறந்த ஒன்றாகும். இதில் அமெரிக்க அரசாங்கத்தின் மக்கள் நல்வாழ்வுத் துறை தரும் பெண்கள் உடல் நலம் சார்ந்த விடயங்கள் உள்ளன.

இணையத்தில் உள்ள பெண்களுக் கான தளங்கள் மூலம் பயன் பெறுங்கள்.

# நலம் தரும் எண்ணெய் குளியல்



எண்ணெய் தேய்த்துக் குளிப்பதை நம் முன்னோர்கள் காலம் காலமாகக் கடைப் பிடித்து வந்தனர். தற்காலத்தில் மிகச்சிலரே இதனைப் பின்பற்றி வருகின்றனர்.

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் ஐம் பொறிகள் வலிமையடைகின்றன. குரல் வளமடைகிறது. அடிக்கடி ஏற்படும் தலைவலி நீங்கி உடல் குளிர்ச்சி அடை கிறது. உடல் வரட்சி நீங்கிவிடுகிறது.

புதன், சனிக்கிழமைகளில் ஆண்களும், செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் பெண்களும் நீராடலாம் என நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

எண்ணெய் தேய்த்து முழுகுவதால்,

* உடல் வலி, உளைச்சல் நீங்குகின்றன.
* கண்கள் குளிர்ச்சியாகி பார்வை தெளிவாகின்றது.
* முதுமை அணுகாமல் இளமையாக இருக்க முடிகிறது.
* உடல் வலிமை அடைகிறது. ஆயுள் நீடிக்கிறது.
* உடலில் சேரும் மிதமிஞ்சிய வெப்பம் நீங்கி நல்ல தூக்கம் உண்டாகின்றது.
* சோர்வு அகல்கிறது.
* நெஞ்சில் சளி சேருவது முதலான பல நோய்கள் தடுக்கப்படுகின்றன.

# பெண

பிரதீபா — பசீனா

# பெண்களுக்கு வரும் ஒற்றைத் தலைவலி



ஒரு பக்கத் தலைவலியால் அவதிப்படுபவர்களைப் பார்த்திருப்பீர்கள். இத்தலைவலி 'மைக்ரேன்' என்றழைக்கப்படுகிறது.

'மைக்ரேன்' எனும் தலைவலி ஒரு ஆணை விடப் பெண்ணுக்கு மூன்று மடங்கு அதிகமாக வருவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

தலைவலியோடு போராட முடியாமல் அதிகளவு மாத்திரைகளை உபயோகிக்கும் கோடிக் கணக்கான பெண்கள் உள்ளனர். பத்து முதல் அறுபது வயதுக்கு உட்பட்ட பெண்களையே 'மைக்ரேன்' பாதிக்கிறது.

மாதவிலக்குத் தொடங்கும் பருவம், கர்ப்ப காலம், மாதவிலக்காகும் நாட்கள் ஆகிய சந்தர்ப்பங்களில் மைக்ரேனின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்கின்றனர். பெண்களின் உடலில் உள்ள 'ஈஸ்ட்ரஜன்' எனும் ஹோர்மோன் கூடிக்குறைவதே இப்பாதிப்புக்குக் காரணம்.

ஆண்களின் உடலில் உள்ள 'டெஸ்ட்டோஸ்டிரான்' எனும் ஹோர்மோன் சீராக இருப்பதனால் 'மைக்ரேன்' ஆண்களைப் பாதிப்பது மிகக் குறைவு.

சிறந்த உடற்பயிற்சியும், எடை கூடாத உடலும் மைக்ரேனைத் தடுக்கக் கூடியவை என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

## சாதனை எழுத்தாளர் மகா ஸ்வேதா தேவி



விட்டுக் கொடுக்காத சக்தி படைத்த எழுத்தாற்றல் கொண்டவர் மகா ஸ்வேதா தேவி. ''கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்'' என்பது போலத்தான் மகாஸ்வேதா தேவியும் அவருடைய பேனாவும். அவருடைய பேனா எந்நேரமும் அவரு டன் இருப்பதால் இருப்பதால் அதற்கும் அவரு டைய பண்புகள் வந்திருக்குமோ என்று பலரா லும் சிலாகித்துச் சொல்லப்படுகிறது. மகா ஸ்வேதா தேவி பல விருதுகளை வாங்கிய சாத னையாளர்.

இலக்கிய உலகில் அவர் செய்த சாத னைக்காக ஞானபீடம், மகசேச போன்ற மிக உயர்ந்த விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டி ருக்கின்றன.

''என்னுடைய படைப்புகள் உண்மைக் காகப் போராடுபவை'' என்று சொல்லும் இவர் தன் இதயத்தில் பழங்குடி மக்களுக்கும், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர் களுக்கும் தனி இடம் கொடுத்திருக்கிறார்.

''என் இதயத்தில் வீற்றிருக்கும் மக்களை ஏமாற்றுகின்றவர்களையும் அவர்களை ஏமாற்றுபவர்களையும் பற்றி எழுதுவதை என் பணியாகக் கொண்டிருக்கிறேன்'' என்கிறார் இந்தப் பெண் சாதனையாளர்.

## வேண்டும் 12 பொருத்தங்கள்



ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்து வைப்பது வழக்கம்.

முக்கியபொருத் தங்களுடன் பின் வரும் 12 பொருத்தங்களையும் சேர்த்தே பார்ப் பது நல்லது என்று ''தமிழர் திருமணம்'' என்ற நூலில் தேவநேயப் பாவாணர் சொல்கிறார்.

* காதல் பொருத்தம்
* உடல் நலப் பொருத்தம்
* ஒழுக்கப் பொருத்தம்
* கருத்துப் பொருத்தம்
* உணவுப் பொருத்தம்
* வயதுப் பொருத்தம்
* உருவப் பொருத்தம்
* முறைப் பொருத்தம்
* வேலை செய்யும் ஆற்றல் பொருத்தம்
* கல்விப் பொருத்தம்
* தொழில் பொருத்தம்
* குடும்ப நிலைப் பொருத்தம்.

என்பவையே அவை.

## நாடுகள் பேசும் பெண் மொழிகள்

ஆடவர்களே இல்லாவிட்டால் பெண்கள் அனைவரும் கற்புடையவர்களே.

—இந்தியா

நாக்குத் தான் பெண்ணுக்கு வாள். ஒரு போதும் அது துருப்பிடிப்பதில்லை.

—ஜப்பான்.

இரண்டு பெண்களும், ஒரு வாத்தும் இருந்தால் போதும். அது ஒரு சந்தையாகி விடும்.

—பாரசீகம்

அழகான பெண்ணும், நீண்ட கிழிசல் உள்ள அங்கியும் ஏதாவது ஒரு கொக்கியில் மாட்டிக் கொண்டு விடும்.

—இங்கிலாந்து.

'இல்லை' என்று ஒரு பெண் சொன்னால் அதற்கு இல்லை என்ற பொருள் இல்லை.

—ஜப்பான்.

கோடரியால் ஒரே வெட்டில் மரத்தைச் சாய்த்து விட முடியாது. ஆனால் ஒரே பார்வையில் ஆணைச் சாய்த்து விடுவாள் ஒரு பெண்.

—யூகோஸ்லாவியா.

# காலம் கடந்தும் நிலைத்து நிற்கும் உலகத்து நாட்டார் கதைகள்



'உலகத்து நாட்டார் கதைகள்' நூல் வெளியீட்டில் நூலின் முதற் பிரதியை புரவலர் ஹாஸிம் உமர் வ.இராசையாவிடமிருந்து பெற்றுக்கொள்கிறார். நடுவே நூலாசிரியர் காணப்படுகிறார். சிறப்புரை ஆற்றிய க.சண்முகலிங்கம் ஆய்வுரை நிகழ்த்திய சி.வன்னியகுலம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

நீர்வை பொன்னையன் மொழிபெயர்த்த 'உலகத்து நாட்டார் கதைகள்' எனும் நூல் வெளியீடு வெள்ளவத்தை தர்மராம வீதியில் உள்ள பெண்கள் கல்வி ஆய்வு மையத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஆ.இரத்தினவேலோன் வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் உரையாற்றுகையில் ''ஈழத்தில் உள்ள படைப்பாளிகளும் பதிப்பகங்களும் இணைந்து ஒரு பொதுவான வலையமைப்பை உருவாக்கிக் கொள்வதன் மூலம் நூல்கள் மக்கள் கைகளில் சென்றடைவதனை விரைவு படுத்தலாம்'' என்றார்.

தலைமை உரையாற்றிய வ.இராசையா '' சிறந்த இலக்கியங்கள் என்ற அந்தஸ்தினை நாட்டார் கதைகளும் பாடல்களும் பெற்றிருக்கின்றன இருந்த போதும் நாகரிகச் சாயத்தால் கவரப்படும் ஒருசாராரிடையே தாலாட்டு, ஒப்பாரி போன்றவற்றைப் பாடுதல் அநாகரிகமான செயல் என்ற தப்பான எண்ணம் நிலவுகிறது. இந்த நாட்டார் பாடல்கள் எமது பிறப்போடும், இறப்போடும் தொடர்பு பட்டவை'' என்று கூறினார்.

வெளியீட்டுரை நிகழ்த்திய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தின் செய்திப் பிரிவுப் பணிப் பாளர் சி.வன்னியகுலம், '' உலகத் தரமான இலக்கியங்கள் கூட முதலில் நாட்டார் இலக்கியங்களாகத் தான் இருந்திருக்கின்றன. இதற்குத் தக்க சான்றுகள் இருக்கின்றன'' என்று கூறினார்.

இதனை அடுத்து முதற்பிரதி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. முதற் பிரதியைத் தலைவரிடமிருந்து புரவலர் ஹாஸிம் உமர் பெற்றுக் கொண்டார்.

''நிலவின் ஒளியில் மனதென்னும் நினைவேட்டில் பதிவாகியுள்ள கதைகளை செவிவழிச் செய்திகளாகக் காத்து வந்தார்கள் எம் முன்னோர். இக் கதைகள் ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்குப் பரவி வந்ததால் தான் இவை நாடோடிக் கதைகள் என அழைக்கப் பட்டன'' என்றார், சிறப்புரை நிகழ்த்திய சண்முகலிங்கம்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ''நாட்டார் பாடல்கள் மக்களைச் சென்றடைவதன் காரணமாகத்தான் இவ்விலக்கியம் எப்போது, எங்கே, யாரால், யாருக்கு எழுதப்பட்டது போன்ற குறிப்புகள் இல்லாது ஒரே ஒரு ஊரிலே, ஒரே ஒரு ராஜா என்று ஆரம்பிக்கின்றன . இதுவே நாட்டார் இலக்கியங்கள் இன்றுவரை நிலைத்து வாழ்வதற்கான காரணங்கள் '' என்றார்.

எஸ்.ரஞ்சகுமாரின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவெய்தியது.

மீரா பதிப்பகத்தைச் சேர்ந்த திருமதி அனுசியாதேவி நிகழ்வினை அழகுறத் தொகுத்து வழங்கினார்.

— இலக்கியன்

## தமிழ்ச் சங்கத்திலே நல்லதோர் இசை நிகழ்வு

கொழும்பு தமிழ்ச் சங்கம் வழங்கும் மாதாந்த தமிழிசை நிகழ்ச்சியின் மூன்றாது நிகழ்வு சமீபத்தில் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடந்தேறியது.

''இசையை வளர்ப்பதல்ல இசையோடு வாழ்வதுதான் உன்னதமானது. தமிழகத்தில் இருந்து இசைக் கலைஞர்களை இசை நிகழ்ச்சிகளுக்காக வரவழைக்கும் இக்காலத்தில் எமது இசைக் கலைஞர் கருணாகரன் உலக நாடுகள் பலவற்றிலும் இசைக்கச்சேரிகள் நடத்தி எமக்குப் பெருமை சேர்த்துள்ளார்'' என்றார், நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சட்டத்தரணி டபிள்யூ.எஸ்.செந்தில்நாதன்.

அவர் தொடர்ந்து பேசுகையில் மகாராஜபுரம் சந்தானத்திடம் பத்து ஆண்டுகள் முறையாகச் சங்கீதம் பயின்ற எ.கே.கருணாகரன் யாழ் பல்கலைக் கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராக இசைப்பணி ஆற்றி பல இசைக் கலைஞர்களை உருவாக்கியுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

சங்கீத வித்வான் எ.கே.கருணாகரனின் பாட்டுக்கு வயலின் டீ.என்.பாலமுரளி, மிருதங்கம் எ.சந்தானகிருஸ்ணன், கடம் வீ.ஐம்புலிங்கம்.

எ.கே.கருணாகரனின் இன்னிசை, செவிகளை வந்து வருடிய போது தம்நிலை மறந்து தாளம் போடாதோர் எவரும் இல்லை என்றே கூற வேண்டும். அந்த அளவுக்கு அரங்கமே மெய் மறந்து இசையின்பத்தில் திளைத்துக்கொண்டிருந்தது.

இடையிடையே ஒலிவாங்கிகள் செய்த குறும்புத்தனத்தால் குழம்பிப்போனார்கள் அவையினர். அற்புதமான இசை விருந்தை அருந்த முடியவில்லையே என்ற ஆதங்கத்துடன் ஒரு சிலர் அரங்கை விட்டு வெளியேறவும் செய்தார்கள்.

பிறவிக் கலைஞன் என்பதற்குச் சான்றாகத் திகழும் கருணாகரனின் இசைப்புலமையை பயன்படுத்தி இசையை வளர்த்துக் கொள்ள இலங்கைத் தமிழர்கள் முயல வேண்டும்'' என்றார் சிங்கப்பூரில் இருந்து வந்து கலந்து கொண்ட டாக்டர் காசியானந்தன்.

கருணாகரனின் இசை முதிர்ச்சியின் பலனாய் நல்லதோர் இசை நிகழ்வைக் கண்டுகளித்த திருப்தியுடன் கலைந்து சென்றனர் அவையோர்.

— நவரசன்

# சைவத்துக்குத் தொண்டாற்றிய அமரர் ஆ.சின்னத்தம்பி

''அமரர் பெரியார் சின்னத்தம்பி இந்து மாமன்றத்தின் மையக் கட்டடம் நிறுவுவதற்குச் செய்த சேவை மாமன்ற வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும்.''

இவ்வாறு அகில இலங்கை இந்துமாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் தெரிவித்தார். அமரர் ஆ.சின்னத்தம்பியின் அஞ்சலிக் கூட்டம் கடந்த மாதம் 26 ஆம் திகதி இந்துமாமன்றத் தலைமைக் கட்டடப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது.



ஆ.சின்னத்தம்பி

மாமன்றப் பிரதித் தலைவர் மா.தவயோக ராஜா கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

செயலாளர் மேலும் உரையாற்றுகையில் ''அமரர் மாமன்றத்தின் சார்பில் தீண்டாமை, மிருக பலி போன்றவற்றைக் கண்டித்து பல சமூகப்பணிகளில் ஈடுபட்டார். அந்த வழியில் இன்றைய தலைமுறையினரும் வருங்காலச் சந்ததியினரும் செயல்பட வேண்டும். இந்த நோக்கில்தான் இரத்மலானை மாணவர் விடுதி, மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த முதியோர் இல்லம், வன்னியில் இடம் பெயர்ந்தோர் நிவாரணப்பணிகள் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கும் மாமன்றம் மனிதாபிமான நிதி ஒன்றை ஆரம்பித்துள்ளது. சிவதொண்டர் அணியையும் ஆரம்பிக்கப் பூர்வாங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். மாமன்றத்தின் இந்த முயற்சிகளுக்கு மக்களின் ஆதரவு தேவை'' எனக் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிய மா.தவயோக ராஜா உரை யாற்றுகையில் அமரர் சின்னத்தம்பி பதின்மூன்று ஆண்டுகள் மாமன்றத்தின் பொதுச் செயலாளராகவும் இரண்டு ஆண்டுகள் தலைவராகவும் இருந்து ஆற்றிய சேவை மாமன்றச் சரித்திரத்தில் ஒரு முக்கிய அத்தியாயம் என்றார். அமரரின் முயற்சியால்தான் மாமன்றத் தலைமையகம் கட்டப்பட்டிருக்கும் காணி 99 வருடக் குத்தகைக்குக் கிடைத்ததென்றும் கூறினார்.

வடக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் வி.இரகுநாதன் தனது உரையில் ''அமரர் சைவ உலகிற்கும் ஆலயங்களுக்கும் ஆற்றிய மகத்தான சேவை என்றும் பாராட்டப்பட வேண்டியது'' என்று குறிப்பிட்டார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவரும் கப்பித்தாவத்தை பால செல்வ விநாயகர் ஆலய அறங்காவலருமான கலாசூரி இ.சிவகுருநாதன் உரையாற்றுகையில் சின்னத்தம்பி கதிர்காம யாத்திரிகர்களுக்குக் கொழும் பிலும் மாத்தளையிலும் ஆற்றிய பணி மிக முக்கியமானது என்றார்.

விவே கானந்த சபைப் பொதுச் செய லாளர் கே.இராஜ புவனீஸ்வரன் தனது உரையில்:—

''இல்லறத்திலும் நல்லறங்கண்டு மதப்பணிகளிலும் சமூ கப்பணிக ளிலும் ஈடுபட்ட அமரர் மற்றவர்களுக்கு நல்வழி காட்டியாகத் திகழ்ந்தார்'' என்று கூறினார்.

அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கச் செயலாளர் மனோகரன் உரையாற்றும் போது, ''அமரர் இளைய தலைமுறை யினருக்கு வழிகாட்டியாக இருந்து இந்து இளைஞர்களை வழி நடத்தினார். அவரைப் போன்ற வழிகாட்டிகள் இந்தச் சமூகத்திற்குத் தேவை'' என்றார்.

கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயப் பிரதமகுரு, முகத்துவாரம் ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான பிரதமகுரு ஆகியோரும் ஆசியுரை வழங்கினர்.

அமரரின் திருவுருவப் படத்துக்கு மாணிக்கவாசகக் குருக்கள் மாலை அணிவித்தார். அவரைத் தொடர்ந்து ஏனையோரும் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இறுதியாக இனிய இரவு உணவுடன் அஞ்சலிக் கூட்டம் நிறைவடைந்தது.

—அநபாயன்

கலையமுதம்

## புதுமைகள் நிறைந்த திருக்குறள் நூல் வெளியீடு

இ.சிறிஸ்கந்தராசா எழுதிய ''திருக்குறள் ஓவியத்தில் திகழும் வர்ண ஜாலங்கள்'' என்னும் நூல் வெளியிடப்படுகிறது. செப்டெம்பர், 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமையில் நூல் வெளியீட்டு விழா நடைபெறும்.

ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் வரவேற்புரை நிகழ்த்த பேராசிரியர் சோ.சந்திரசேகரன் வெளியீட்டுரை வழங்குவார். சிறப்புரையை இ.சிவகுருநாதன், உடுவை எஸ்.தில்லை நடராசா ஆகியோர் வழங்குவர். நூல் நயவுரை இ.ஜெயராஜ், மதிப்புரை சோ.தேவராஜா, ஆய்வுரை தம்பு கனகரத்தினம் ஆகியோரால் அளிக்கப்பட இருக்கிறது. முதற்பிரதியை ஆ.விநாயகமூர்த்தி (எம்.பி) பெற்றுக்கொள்வார்.

இ.சிறிஸ்கந்தராசா தமது நூலில் திருக்குறள் பற்றி சுவையாகவும் புதுமையாகவும் விளக்கங்களைத் தந்திருக்கிறார்.

ஐந்து உவமைகள் வரும் குறள், குறளில் கையாளப்படாத எண், ஒரு எழுத்தைச் சிறியதாக வைத்து முடிவுறும் குறள், ஒரு சொல்லைப்பல பொருள்பட குறளில் வலியுறுத்தும் சொற்கள் என்று பலவிவரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

அத்துடன் உதடுகள் ஒட்டும் விதமாகவும் ஒட்டாத விதமாகவும் உச்சரிக்கும் குறள்கள் பற்றியும் விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

காமத்துப்பாலின் சிறப்புகள், உவமைகள் மற்றும் சுவையான தகவல்களும் இருக்கின்றன.

குறளில் பழமொழிகள், குறளில் கதைகள், குறளை வலியுறுத்தும் திரைப்படப் பாடல்கள் பற்றியும் இந் நூலில் விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன.

## 'தூவானம்' அறிமுக விழா

வெள்ளவத்தை, தர்மராம வீதியில் உள்ள பெண்கள் கல்வி ஆய்வு மையத்தில் அ.யேசுராசாவின் ''தூவானம்'' நூல் அறிமுக விழா சமீபத்தில் நடைபெற்றது.

விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசிய காவலூர் ராஜதுரை ''ஈழத்து எழுத்தாளர்கள் உலகின் பல பாகங்களிலும் இன்று வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் எமது நாட்டு நூல்கள் உலகின் பல நாடுகளிலும் விற்பனையாகும் நிலை உருவாகும். இதனால் இந்தியாவுக்கு ஈடாக எமது நாட்டு நூல்களும் விற்பனையில் ஆரோக்கியமான நிலையை அடையும் வாய்ப்பு ஏற்படும்'' என்று கூறினார்.




'தூவானம்' நூல் வெளியீட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய எஸ்.கே.விக்னேஸ்வரன், கே.எஸ்.சிவகுமாரன், காவலூர் ராஜதுரை, மு.பொன்னம்பலம் நூலாசிரியர் அ.யேசுராஜா ஆகியோர் இடமிருந்து வலமாகக் காணப்படுகின்றனர்.

அறிமுகவுரை நிகழ்த்திய கே.எஸ். சிவகுமாரன் பத்தி எழுத்துக்கள் ஏற்படுத்தும் தாக்கம் குறித்துப் பேசினார். அத்தோடு இடையிடையே தனது இளமைக்கால இனிய நினைவுகளையும் குறிப்பிட அவர் தவறவில்லை.

இதனை அடுத்து மு.பொன்னம்பலம் கருத்துரை ஆற்றினார். இவர் ''மல்லிகை'' சஞ்சிகை பற்றியும், நீலாவணனின் ஒத்திகை வெளியீடு பற்றியும் சூடாக விமர்சித்தார். இதனால் சம்பந்தப்பட்ட நெஞ்சங்கள் சுடுபட்டது என்னவோ உண்மைதான்.

''சமகால எழுத்தாளர்களும் படைப்பாளிகளும் வாசித்து அறிய வேண்டிய சிறந்த ஆவணத் தொகுப்பே இந் நூல்'' என்றார் கருத்துரை வழங்கிய எஸ்.கே.விக்கினேஸ்வரன்.

அவர் தொடர்ந்து பேசுகையில் '' அ. யேசுராசா சமூக அக்கறை கொண்ட ஒரு படைப்பாளி என்பதுடன் அவர் ஒரு பத்திரிகை ஆசிரியரும் கூட. அவருடைய எழுத்துக்களுக்கு நூலுருக் கொடுத்தது நல்ல முயற்சியே'' என்றார்.

நிகழ்வின் இறுதியில் பதிலுரை வழங்கிய நூலாசிரியர் அ.யேசுராசா ''தூவானம்'' நூலின் அழகான வடிவமைப்புக்காக மூன்றாவது மனிதன் பதிப்பகத்தாருக்குத் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

எழுத்துப் பிழைகள் எழுத்தாளனின் கருத்துக்களை திரிபடையச் செய்து விடவல்லன. எனவே கூடிய வரையில் நூல்கள் எழுத்துப் பிழைகள் இன்றி வெளிவருவது ஆரோக்கியமானதாக அமையும் என்றார். தூவானம் நூலில் உள்ள எழுத்துப் பிழைகள் திருத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

— கருடன்

# திருமணச் சடங்கின் புனிதத்தை வீணடிக்கும் வீடியோ மோகம்

செக்கியூரிட்டி டானியலும், கொம்யூனிகேசன் லோகனும் தேரடியில் வந்து அமர்ந்த பிறகும், பரமலிங்கம் மாஸ்டரும், விநாசியரும்வந்துசேரவில்லை.

''பெரிசுகளை இன்னும் காண வில்லை, ஆச்சி?'' கேட்டான் லோகன்.

''தெரியவில்லை, இன்று கலியாண நாள் அப்படி ஏதேனும் விசேஷத்துக்கு போயிருப்பினம்'' என்றபடி கடலை வியாபாரத்தில் கண்ணானாள் சின்னாச்சி.

அவள் சொன்ன கையோடு வந்து அமர்ந்தனர் பெரியவர்கள் இருவரும்.

''எங்கடை சிநேகிதன் ஒருவனின் மகளுக்குக் கலியாணம். அதுதான் போட்டு வர லேட்டாப் போச்சுது'' தாமதத்துக்குக் காரணம் கூறினார் விநாசியர்.

''கலியாணம் வேளைக்கு முடிந்திருக்கும். இந்த வீடியோக்காரரும், போட்டோ பிடிக்கிறவரும் சேர்ந்து மினக்கெடுத்திப் போட்டினம்'' என்றார் மாஸ்டர்.

''காலம் காலமாக இருந்த சம்பிரதாயங்கள், சடங்குகளை மாற்றிப் போட்டு, இப்படி புதுசு, புதுசா தங்களுக்கு ஏற்ற மாதிரி எல்லே சம்பிரதாயங்களைக் கொண்டு வருகினம்'' வியாபாரத்தை கவனித்துக் கொண்டே கூறினாள் சின்னாச்சி.

''அவை என்ன செய்யிறது. வீடியோ படம் மூன்று மணித்தியாலம் ஓடினால் தான் கலியாண வீட்டுக்காரருக்குத் திருப்தி. 'எங்கடை கலியாணத்திற்கு 100 படங்கள், 200 படங்கள் எடுத்தனாங்கள்' என்று பெருமையடிக்கவும் வேணும். அப்ப அதற்கேற்ற மாதிரித்தானே வீடியோ, போட்டோகாரர்கள் படம் எடுப்பினம்'' அந்தத் தொழில்களில் தனது நண்பர்கள் ஈடுபடுவதால் அறிந்ததைச் சொன்னான் லோகன்.

''அதுக்கு சாமத்திய வீட்டிலை அந்தப் பிள்ளை குளிக்கிறதையும் சுத்தி சுத்தி படம் எடுக்கவேணுமே'' கேட்டாள் சின்னாச்சி. ''அதுதானே, போறபோக்கிலை மாப்பிளை, பொம்பிளை விடிய எழும்பி குளிச்சு வெளிக்கிடுவதையும் எல்லே வீடியோ எடுக்கப் போகினம்'' என்றார் மாஸ்டர்.

''அவை என்ன தங்கடை தேவைக்கே எடுக்கினம். வீட்டுக்காரர் இது வேண்டாம், அது வேணும் என்று சொல்லி தேவையில்லாததை தடுக்கலாமே'' விடாமல் கூறினான் லோகன்.

''வெளிநாட்டிலை இருந்து எங்கடை ஆட்கள் அனுப்பிற படங்களைப் பார்த்துப் போட்டுத்தான், இங்கேயும் இவை சம்பிரதாயங்களை கைவிட்டுப் போட்டு சினிமாப் படம் எடுக்கிற மாதிரி எல்லோ எடுக்கினம்'' என்றான் டானியல்.

மேலும் அவனே தொடர்ந்தான், ''வெளிநாடு களையும் பார்த்து வெறும் 'ரெஜிபோம்' மட்டைகளை ஐஸிங் கினால் மூடி ஓர் அங்குலக் கேக்துண்டை மட்டும் வைத்த கேக்கை 5 ஆயிரம், 6 ஆயிரம் என்று விலைக்கு வாங்கிப் பெருமையாக வீடியோ எடுக்கினம்.

''சகல உரிமைகளும் பெற்று சுதந்திரமாக வாழும் சமூகத்தில் இப்படி பணத்தை இறைத்தால் பரவாயில்லை. எங்கடை இனம் அழிக்கப்படும் சூழ்நிலையில்; இப்படி ஆடம்பரச் செலவுகளை வீடியோவில் பார்க்கும் பிற நாட்டினர் இவைக்கு ஒரு குறையும் இல்லை என்று தான் நினைப்பினம். வீண் செலவாகும் காசை ஆதரவற்றவர்களுக்கு பிரயோசனப்படும்படி கொடுக்கலாம்''

''அது சரி டானியல், சில தேவையில்லாத சம்பிரதாயங் களைக் கைவிடுவது நல்லது தானே'' என்றான் லோகன்.

''தம்பி லோகன், திருமணச் சடங்குகளைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை, அது அவரவரின் நம்பிக்கை யைப் பொறுத்தது. ஆனால் சம்பிரதாயங்களை கருத்தோடு தான் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்தவை.

''இப்ப கலியாணம் முடிந்து மாப்பிள்ளை பொம்பிளை, பெண் வீட்டுக்குப் போய் பூதாக்கலம் என்ற விருந்தில் கலந்து கொள்ளும் சம்பிரதாயம் இருக்கு. இது தேவையில்லாத மாதிரித் தான் தெரியும்.

''ஆனால் இந்தக் காலத்தில் — மாப்பிள்ளையும் பொம்பி




ளையும் மணவறையிலை தான் ஒருவரை ஒருவர் பார்க்க நேரிடும் அவசர கலியாணங்களில் — இந்தப் பழைய சம்பிர தாயம் அவசியமாக இருக்கு. பூதாக்கலம் வைக்கும் போது, உணவைப் பரிமாறி மாப்பிள்ளை தான் முதலில் சாப்பாட்டை எடுத்து மணப் பெண்ணுக்குக் கொடுப்பார். அப்ப அவர் எந்தக் கறியை முதலில் சோற்றுடன் பிசைகிறாரோ அது அவருக்குப் பிடித்த கறி என்று பொம்பிளை விளங்கிக் கொள்ளுவா, அது போல பொம்பிளை குழைச்சுக் கொடுக்கும் போது மாப்பிள்ளை தெரிந்து கொள்ளுவார். உணவு திருப்தியாக இருந்தால் அந்தக் குடும்பத்திலை அரைவாசிப் பிரச்சினை உருவாகாது.

''இதே மாதிரி நாள் கடை என்று கடைகளுக்குப் புதுத் தம்பதிகளை உறவினர்கள் கூட்டிச் சென்று அவர்களுக்குப் பிடித்ததை வாங்கிக் கொடுப்பது ஒரு சம்பிரதாயம். அப்படிக் கடைகளுக்குக் கூட்டிக் கொண்டு செல்லும்போது மனைவி தேர்ந்தெடுக்கும் நிறங்கள், பொருள்கள் ஆகியவற்றைக் கணவனும் கணவனுக்குப் பிடித்ததை மனைவியும் புரிந்து கொள்கின்றார்கள்.

''பிறகு நல்ல நாள் பெருநாள்களில் ஒருவருக் கொருவர் பிடித்தமான பொருள்களைப் பரிசளிக்க இது உதவுகிறது. இப்படி தமிழரின் சம்பிரதாயங்கள் வாழ்வை வளமாக்க அமைக்கப்பட்டவை. அதைப் புரிந்து கொள்ளாமல் சம்பிரதாயங்களை ஏனோ தானோவென்று செய்தும், செய்யாமல் விட்டும் வீடியோ மாயையில் சிக்குவது தவறுதான்'' நீண்ட உரை நிகழ்த்திய சின்னாச்சி முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

''அதுமட்டுமே, நல்ல நேரம் பார்த்து, நாள் வைத்துவிட்டு, வீடியோ எடுப்பதில் தாமதமாவதால், அவசர அவசரமாக மணவறைக்கு வந்து, அரை குறையாக மதச் சடங்குகளைச் செய்து தாலிகட்டினால் வாழ்க்கை சிறக்குமே? இதைவிடக் கொடுமை, தாலி கட்டுற நேரம் வீடியோக்காரனின் லைற் நின்று விட்டால், தாலியைத் திருப்பிக் கட்டுற கூத்தும் சில இடங்களில் நடக்குது. வீடியோக்காரர்தான் இப்ப கலியாண வீட்டிலை எல்லா முடிவுகளையும் எடுக்கினம்போல'' என்றார் மாஸ்டர்.

''வீடியோ எடுக்கிறம், புகைப்படம் எடுக்கிறம் என்று நாள் முழுக்க இருத்தி எழுப்பினால் அந்தத் தம்பதிகள் தங்கள் வாழ்க்கையை அன்று நிம்மதியாக, சந்தோஷமாகத் தொடங்க முடியுமே. முதல் முதல் கலியாணம் முடிந்து தனிமையில் சந்திக்கும்போது, உடம்பு நோகுது என்று பொம்பிளை ஒரு பக்கமும், தலையிடிக்குது என்று மாப்பிள்ளை மற்றப் பக்கமும் திரும்பிக் கொண்டால், பிறகு அதுகளின் வாழ்க்கை துன்பத்தில்தான் தொடங்கும்'' சொல்வதை நாசூக்காகச் சொல்லி முடித்தான் டானியல்.

''வீடியோ எடுக்கிறவை சும்மா கமெராவிலை சிக்கிறதெல்லாத்தையும் 3 மணித்தியாலம் சுத்திக் கொடுத்தால் சரி என்று நினைக்கினம். ஆனால் அதை ஒருத்தரும் முழுசாகப் பார்க்கிறதில்லை என்பதுதான் உண்மை. அதைப்போல 200 போட்டோக்களையும் ஒருத் தரும் ஆர்வமாகப் பார்ப்பதில்லை. வீடியோ போட்டால் மிஞ்சி மிஞ்சி 15 நிமிஷம் பார்ப்பினம். போட்டோ விலை ஒரு 30 படங்களைப் பார்ப்பினம். பிறகு தங்கடை பாட்டுக்குக் கதைக்க வீடியோ சும்மா ஓடும். விரல்கள் ஆர்வமின்றி ஆல்பத்தைப் புரட்டும். இதைவிட தேவை யானதை மட்டும் கொஞ்ச நேரம் எடுத்தால் போதும்'' அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார் மாஸ்டர்.

''அதோட 'என்னை வீடியோ எடுக்கக் கூப்பிட வில்லை' என்று புதுப் பிரச்சினைகளும் உருவாகுது'' என்றாள் சின்னாச்சி.

''ஆனால் சில விவரமான ஆட்கள், போட்டோக் காரருக்கும், வீடியோக்காரருக்கும் ரகசியமாக 'நாங்கள் கண்ணைக் காட்டினால் மட்டும் உண்மையாக எடுங்கோ, மற்ற நேரம் எல்லாம் வெறும் லைற்றை மட்டும் அடியுங்கோ' என்று சொல்லிவிடும் ஐடியாவும் நடக்குதாம்'' கூறினான் லோகன்.

''சரி காசைக்கொட்டிக் கலியாணம் செய்யிறவை தங்கடை விருப்பத்துக்குச் செய்யட்டும் எங்களுக் கென்ன'' என்றபடி எழுந்த மாஸ்டரைத் தொடர்ந்து மற்றவர்களும் எழுந்தனர்.

தேரடி கலைந்தது.

—ஏகலைவன்

# பித்தன் பதில்கள்

செந்தூரன், *மட்டக்களப்பு.*
கே : முதியவர்கள் திருமணம் செய்ய நினைப்பது?
ப : *மரண தேவதையை அணைக்குமுன் மனித தேவதையை அணைக்கும் முயற்சி.*



வி.சுதர்ஷன், *வத்தளை.*
கே : அக்கால நடிகைகளுக்கும் இக்கால நடிகைகளுக்கும் என்ன வித்தியாசம்.
ப : *அவர்கள் நடிப்பைக் காட்டினார்கள். இவர்கள் துடிப்பைக் காட்டுகிறார்கள்.*

பெ.சுரேந்திரன், *கொச்சிக்கடை.*
கே : பேச்சைக் குறைத்து செயலில் இறங்க வேண்டியவர்கள் யார்?
ப : *அரசியல்வாதிகளும் முதல் இரவு கொண்டாடும் மணமக்களும்.*

சி.ரஞ்சன், *கரைத்தீவு.*
கே : திருமணத்தை எதிர்பார்த்திருக்கும் காதலருக்கு நீங்கள் கூறும் அறிவுரை.
ப : Handle with care! *அதாவது அவதானமாகக் கையாளுங்கள் என்பதே.*

இ.அருந்ததியன், *நா..ர்கோவில்.*
கே : காதலிப்பதற்கு வயதுக் கட்டுப்பாடு இருக்கிறதா?
ப : *பல் உள்ளவரை முறுக்குச் சாப்பிடலாம்.*

அ.தவச்செல்வன், *கரணவாய்.*
கே : மிதமிஞ்சிய நம்பிக்கை எதில் போய் முடியும்?
ப : *அவநம்பிக்கையில்...!*




ம.கருணாநிதி, *திருகோணமலை.*
கே : வாழ்க்கையில் வெற்றியடைய என்ன செய்ய வேண்டும்?
ப : *"எழுமின், விழிமின் கருதிய கருமம் கைகூடும்வரை உழைமின்" என்பதை வேதவாக்காகக் கொள்ள வேண்டும்.*

வி.காண்டீபன், *கந்தானை.*
கே : யுத்தம் — முத்தம் ஒற்றுமை என்ன?
ப : *இரண்டிலும் 'தழுவுகிறார்கள்'.*

சந்திரிகா சுப்பிரமணியம், *ஜா—எல.*
கே : பித்தனே அதிஷ்டம் என்று எதைச் சொல்வீர்கள்?
ப : *அரசியல் வாரிசுகள் அரசுக்கட்டில் ஏறுவதனை.*

க.நாகபூஷணி, *நுவரெலியா.*
கே : சைவக்காதல் என்றால் என்ன?
ப : *கதைப்பதோடு நிறுத்திக் கொள்வது.*

கென்னடி விஜயரட்ணம், *காரைநகர்.*
கே : ரணிலுக்கு உப ஜனாதிபதி ''போஸ்ட்'' கிடைத்தால்....?
ப : *பதவிப் பிரமாணத்தோடு தூக்கம் போடுவதற்கு ஒரு கட்டிலையும் தயார்படுத்திக் கொடுத்தால் நல்லது.*




ச.விதுரன், *புத்தளம்.*
கே : இஸ்லாமடத்தில் நடைபெறவுள்ள தெற்காசிய விளை யாட்டு விழாவில் (சாவ்) பங்குபற்ற சம்மதித்துள்ள இந்தியா தமது கிரிக்கெட் அணியை பாகிஸ்தானுக்கு அனுப்ப மறுப்பது ஏன்?
ப : *இந்தி கிரிக்கெட் அதிகாரிகளுக்குக் கூட புரியாத புதிர் அது.*

சி.வர்த்தனி, *பம்பலப்பிட்டி.*
கே : ஆண்கள் தலை முடிக் குக் கறுப்புச் சாயம் பூசலாமா?
ப : *பெண்கள் உதட்டுச் சாயம் பூசுவதை யாரும் தடுக்க வில்லையே?*

ஞானி, *பருத்தித் துறை.*
கே : ஜனா திபதி சந்தி ரிகா அரசை நடத்துவ தற் கும்— எதிர்க் கட்சித் தலைவர் ரணில் ஆட்சிக்கு வந்து அரசைக் கொண்டு நடத்துவதற்கும் வித்தியாசம் ஏதும் இருக்குமா?
ப : *'பால்' வித்தியாசம் மட்டும் இருக்கும்.*

சுபாஷ் சந்திரபோஸ், *மன்னார்.*
கே : தலைவர்களுக்காகத் தற்கொலை புரிகிறார்களே பித்தனே?
ப : *ஆமாம், அது எங்கள் அண்டை நாட்டுக்காரர்களுக்குச் சொந்தமான பைத்தியம்.*



ப.வருணன், *இளவாலை.*
கே : பெரியவர்கள் சின்னத்தன மாக நடந்து கொண்டால்...?
ப : *'டமேஜ்' ஆகும் அவர்கள் 'இமேஜ்'.*

ச.தமிழ்ச் செல்வன், *நுணாவில்.*
கே : நல்ல கவிதை எப்படி இருக்க வேண்டும்?
ப : *இலக்கணத்தைப் பற்றிக் கவலைப் படாது சிறந்த சிந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும்.*

எஸ்.பிரஷாந்த், *திருக்கோவில்.*
கே : பித்தனுக்குச் சிறை அனுபவம் உண்டா?
ப : *ஏன் இல்லை? பத்து மாதங்கள்!*


ப.ராஜேஸ்வரன், *தாமரைக் கேணி.*
கே : ஐ.தே.கவுடன் ஆட்சியைப் பகிர்ந்து கொள்ள பொ.ஐ.மு அரசாங்கம் ஆர்வம் காட்டியது ஏன் பித்தனே?
ப : *முற்றாக இழக்க வேண்டிய தருணத்தில் பாதியை மட்டும் இழப்பதற்குத் தயக்கம் தேவையில்லையே.*

க.சுந்தரி, *கட்டுகஸ்தொட்டை.*
கே : கணக்குவாத்தியாரை எனது சினேகிதி காதலிக்கிறாளே?
ப : *வாத்தியார் கணக்கு விடாமற் பார்த்துக் கொண் டால் சரி.*

ஆர்.பிரியதர்ஷினி, *வவுனியா.*
கே : அம்பாந்தோட்டையில் வரட்சியில் வாடும் மக்களுக்குத் தலைநகரிலிருந்து உணவுப் பொருட்கள் அனுப்பியதுபோல் வன்னி மக்களுக்கும் அனுப்பினால்?
ப : *இலவசமாக அனுப்பாவிட்டாலும் பணம் கொடுத்து வாங்குவதற்குப் பொருட்களை அனுப்பினாலே போதுமே!*

பாரத், *சின்னப்பூவரசங்குளம்.*
கே : இலங்கை விளையாட்டு நட்சத்திரங்களில் ஆகக் கூடுதலான ஊதியம் பெறுபவர் யார்?
ப : *கிரிக்கெட் அணித் தலைவர் சனத் ஜயசூரிய.*



## எனக்குத் தெரிந்த பாரதி

சுப்பிரமணிய பாரதியார் தமிழ் நாட்டிலுள்ள எட்டய புரத்தில் பிறந்தார். இவர் பெரும் புலவர். இவர் பெண்ணடிமைத்தனத்திற்காகப் போராடினார். பலமுறை சிறையும் சென்றார். அக்காலத்தில் பெண்கள் அடிமைகளாக வாழ்ந்தனர். அதனால் அடிமைத் தனத்தைச் சாடி ''என்று தணியும் இந்த சுதந்திர தாகம் '' என்று பாடினார். நாட்டுச் சுதந்திரம் மட்டுமன்றி வீட்டுச் சுதந்திரமும் வேண்டும் எனவும் பாடினார்.

''ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்'' என்று இவர் பெண்களின் சுதந்திரம் வேண்டிப் பாடினார். இவர் எல்லோராலும் போற்றப்படுபவர் ஆவார்.

சி.தவரூபிகா,8ஆம் தரம்,
யா/ வேம்படி மகளிர் கல்லூரி.

## பெருமைமிக்க ஐந்து

*ஐம்பெரும் காப்பியங்கள்:— சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி.
* பஞ்சலோகங்கள்:— பொன், வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு.

T.பிரநீதன்,தரம் — 10,
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி.

## ஒளகு சிட்டு

ஷர்மிலா

## சிறுவர் கைவண்ணம்



ஞான செந்தூரன்
தரம் —8
சென்ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்



சி. மயூரன்
தரம் —7 C
வடகொழும்பு இந்து இளைஞர் சங்க அறநெறிப்பாடசாலை

## நண்பனே! எனது உயிர் நண்பனே!!

பணத்தைக் கண்டு வருவது நட்பல்ல
பாசத்தைக் கண்டு வருவதே நட்பு
பள்ளி முடியும் வரை வருவது நட்பல்ல
பரமசிவனை அடையும் வரை வருவதே நட்பு
நண்பனின் உயிரை எடுப்பது நட்பல்ல
நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதே நட்பு
நண்பன் நண்பன் என்று சொல்பவன் நண்பனும் அல்ல,
நண்பன் என்று சொல்லாதவன் நட்பில்லாதவனும் அல்ல
சந்தோஷத்தில் மட்டும் பங்கெடுப்பது நட்பல்ல
துக்கத்திலும் பங்கெடுப்பவனே நண்பன்
பேசாதிருந்தால் புரியும் நட்பு
பேசிக் கொண்டிருந்தால் ஏற்படும் வெறுப்பு



யோ.அருண், ஆண்டு—9, யா/ பரி. யோவான் கல்லூரி.

## சிங்கம்

சிங்கம் காட்டு மிருகம்.
சிங்கம் குகையில் வாழும்.
அது மிருகங்களின் அரசன் என்று கூறப்படுகின்றது.
சிங்கம் கர்ஜிக்கும்.
ஆண் சிங்கம் அழகானது.
பெண் சிங்கம் குட்டி ஈனும்.

நிருசிகா,
தரம் — 1,
கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை,
கல்கிஸ்ஸ.

## சிந்தனைக்கு

*நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடை யாளர் தொடர்பு.*

பொருள்:— நற்குணமுடையவர்களுடனான நட்பு பழகுந்தோறும் இன்பம் தருவது நூற்பொருளை கற்குந்தோறும் இன்பம் அடைவதைப் போன்றதாகும்.

எஸ்.எம்.நெய்பர்சானா,
சீனக்குடா.



புளூட்டோ

சூரியனிலிருந்து மிகவும் தொலைவிலுள்ள கோள். சாதாரண கண்களுக்குத் தெரியாது. கணக்கியல் முறையில் கண்டு பிடிக்கப்பட்டது. பருமன்—2285 கிலோமீற்றர். சூரியனைச் சுற்றி வருவதற்கு 248 வருடங்களை எடுக்கின்றது. சூரியனைச் சுற்றி வரும்போது நெப்டியூனின் ஒழுக்கிற்குள்ளும் செல்லும். இதற்கான அச்சுறுத்தலை 20 வருடங்களுக்கு முன்னரே தெரியப்படுத்திவிடும். கெட்டியான பனி சூழ்ந்தது. அதனால் இதில் உயிரினங்கள் வாழ முடியாது. உரோமானியர்கள் இதனை பாதாள உலகத்தின் அரசன் என்று கருதினர்.




## சிறுவர்களுக்கு மூளைப் பாதிப்பு

மொபைல் என அழைக்கப்படும் செலூலர் தொலைபேசியினை சிறுவர்கள் பயன்படுத்துவதனால் மூளையில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருக் கிறது என்று பிரிட் டனின் அரசுத்தரப்பு விஞ்ஞானி வில்லியம் ஸ்டீவார்ட் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு தெரிவித்துள்ளது. இவர்கள் 8 மாதகாலமாக மேற்கொண்ட சுதந்திர ஆய்வின் பின்னரே இந்த முடிவைத் தெரிவித்திருக்கின்றனர். செலூலர் தொலைபேசி வெளியிடும் கதிரியக்கம் மூளையில் சலனத்தை ஏற்படுத்துகிறதாம். சிறுவர்களின் மூளை வளரும் கலங்களைக் கொண்டது. அதனால் செலூலர் தொலைபேசி ஏற்படுத்தும் இந்தச் சிறிய சலனங்கள் கூட அவர்களது மூளையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. அத்துடன் இதன் மைக்ரோ அலைகள் சிந்தனையைத் தடை செய்யக் கூடியவையாம். இதனால் சிறுவர்கள் செலூலர் தொலைபேசியைப் பயன்படுத்துவது தடை செய்யப்படவேண்டும் என விஞ்ஞானிகள் கேட்டுள்ளனர்.

## செலூலர் விலை 83 லட்சம்!!



உலகிலேயே அதிகூடிய பெறுமதியுடைய செலூலர் தொலைபேசி லண்டனில் உருவாக்கப்பட்டுள்ளது. இது தங்கத்தைவிட விலை கூடிய பிளாட்டினத்தினால் செய்யப்பட்டுள்ளது. இதனை லண்டனைச் சேர்ந்த ஹார்ரேட்ஸ் நிறுவனத்தினர் வடிவமைத்துள்ளனர். இதன் பெறுமதி 83 லட்சம் ரூபாய். இது நீண்டகாலம் பயனைத் தரக்கூடியதாகும்.

## அன்னை

''தாயிற் சிறந்த தொரு கோயிலும் இல்லை'', ''நாம் கண்ட முதல் தெய்வம் அன்னை'' என்று முன்னோர்கள் அன்னையின் சிறப்பை நமக்கு உணர்த்தியிருக்கிறார்கள். தன் உதிரத்தைப் பாலாக்கி எமக்கு அன்புடன் ஊட்டி, அரவணைத்து, நல்வழி காட்டி எம்மை நல்வழிப் படுத்துபவள்தான் அன்னை. வற்றாத அன்பின் ஊற்று. அன்பின் இமயம் அவள்தான் அன்னை.அன்னையின் சிறப்புக்களை எழுதிக் கொண்டே போகலாம். அன்னையின் அன்பிற்கு எல்லையே இல்லை.

த. அஜந்தகுமார்,
யா/ நெல்லியடி
ம.ம. வித்தியாலயம்.

## பழமொழிகள்

* யாருமில்லார்க்குத் தெய்வமே துணை.

யாரும் அற்றவருக்குத் தெய்வம் துணை செய்யும்.

* நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

நோய் அற்ற வாழ்வு பெருஞ் செல்வம்.

* உடையவன் பாராவேலை ஒரு முழம் கட்டை.

தன் கருமத்தைத் தானே செய்தல் வேண்டும்.

* உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யலாமா?

கூடி வாழ்ந்தவர்களுக்கு குந்தகம் செய்தல் கூடாது.

* பெற்றவளுக்குத்தான் தெரியும் பிள்ளையின் அருமை.

பிள்ளை அருமை தாய் அறிவாள்.

விஜிதா,தரம் — 10,
இந்து மகளிர் கல்லூரி

## நமக்கு வேண்டியது

நகைச் சுவை தருவது — சிரிப்பு, மானத்தைக் காப்பது — உடுப்பு.
அளவுக்கு மிஞ்சினால் — வெறுப்பு, குடும்பத் தலைவனுக்குள்ளது — பொறுப்பு. நல்லதைக் கண்டால் — விருப்பு, நடிகர்களுக்கு தேவையானது — நடிப்பு, மீதியாக இருப்பது — இருப்பு, நமக்கு வேண்டியது — படிப்பு.

வசந்தகுமார் ஜெயந்தன்,
தரம் — 5,
யா/இந்து ஆரம்ப பாடசாலை.

## தாவரப் புதுமைகள்



* பூச்சி உண்ணும் தாவரங்களும் இருக்கின்றன. இவற்றின் இலைகள் திறந்த குடுவையும் மூடியும் போன்று அமைந்திருக்கின்றன. பூச்சிகள் அமர்ந்தால் போதும் மூடி குடுவை மேல் மூடிக் கொள்ளும் அப்போது பூச்சிகள் குடுவைக்குள் அகப்பட்டு விடும்.

* உலகிலேயே மிகச் சிறிய தாவரம் — உல்பியா.

* தாவரங்களைப் பெயரிடும் முறை 1623ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

* இந்தியாவில் 80 வகை நெல் வகைகள் பயிரிடப்படுகின்றன.

* மலர்களில் வெள்ளை நிற மலர்களே அதிக வாசனை கொண்டவை.

* மூங்கிலை ஆங்கிலத்தில் பாம்பூ (Bamboo) என்று அழைக்கிறோம். இது மலே மொழியிலிருந்து வந்தது.

* தாமரை இலைகள் எப்போதும் தண்ணீரில் மிதந்து கொண்டே இருக்கின்றன. இதற்குக் காரணம் அவற்றின் மேற்பரப்பில் காணப்படும் ஒருவித மெழுகுப்படையே.

* உலகிலேயே மிக உயரமான மரம் கலிபோர்னியாவிலுள்ளது.

# விருந்தினரைக் கவர்ந்திட முகமூடிகள் எத்தனை விதம்

கலை நிகழ்ச்சிகளுக்குப் பார்வையாளர்களாக வருபவர்களைக் கவர்ந்திழுப்பது முக்கியமானது. விருந்தினரைக் கவர்ந்திழுப்பதற்காக எத்தனையோ தந்திரங்களை ஏற்பாட்டாளர்கள் செய்ய வேண்டியிருக்கிறது. முக மூடி அணிந்த கலைஞர்கள் பார்வையாளர்கள் மத்தியில் புகுந்து அவர்களைக் குதூகலப்படுத்துவது முக்கியமானது. விருந்தினரைக் கவர்ந்திழுக்க அவர்கள் அணிந்து கொள்ளும் முக மூடிகள்தான் எத்தனை விதம் என்பதை இந்தப் படம் விளக்குகிறது.





# மின்சார வெளிச்சத்தில் ஜொலிக்கும் நயாகரா

நயாகரா நீர்வீழ்ச்சி மிகவும் பிரமாண்டமானது. அமெரிக்கா, கனடா ஆகிய இரு நாடுகளையும் பிரதேச ரீதியாகப் பிணைக்கும் விதத்தில் நீண்டு பரந்து விரிந்து எழில் பரப்புகிறது நயாகரா நீர்வீழ்ச்சி. அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் செல்லும் வெளிநாட்டுப் பயணிகள் தவறாமல் கண்டு ரசிக்கும் பிரதேசம் நயாகரா நீர் வீழ்ச்சிதான். இரவு நேரத்தில் மின்சார வெளிச்சத்தில் நயாகரா எவ்விதம் ஜொலிக்கிறது என்பதைச் சித்திரிக்கிறது இந்தக் காட்சி.

ஒலிம்பிக் விளையாட்டுகள் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறுகின்றன. ஆயினும் ஒலிம்பிக் விளையாட்டுகள் எந்த நாட்டில் நடைபெற வேண்டும் என்பதை ஏழு வருடங்களுக்கு முன்னரே தீர்மானித்து விடுகிறார்கள். அடுத்த ஒலிம்பிக் 2004ஆம் ஆண்டில் ஏதென்ஸ் நகரில் நடைபெறுகிறது. அதற்கு அடுத்த ஒலிம்பிக் 2008ஆம் ஆண்டில் சீன நாட்டில் நடைபெறும். அதற்கான ஆயத்தங்களை சீனா ஏற்கனவே ஆரம்பித்து விட்டது.

சீனாவில் ஒலிம்பிக் போட்டி நடத்துவது பற்றி தீர்மானிக்கப்பட்டபோது அதற்கு உலகில் வரவேற்பும் எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டன. பீஜிங் நகரிலுள்ள தியனமென் சதுக்கத்தில் ஒலிம்பிக் சின்னம் பின்னணியில் அழகுற எழுந்து நிற்க கலைஞர்கள் ஆடிக் களித்த காட்சியை



# கிரந்தி வந்த யானை கமெராவுக்கு போஸ்



வரட்சி காலத்தில் யானைகள் தண்ணீருக்காக அலைந்து திரியும் பரிதாப நிலை பற்றி பத்திரிகைகளில் விவரிக்கப்படுகின்றன. அத்துடன் தனது மிகப் பெரிய தேகத்தைச் சுமந்து கொண்டு அதி வேகத்துடன் ஓடும் திறன் படைத்தது யானை என்பதும் முக்கியமானது. ஆபிரிக்க யானைகள் மனித நடமாட்டத்தை வெறுக்கும் தன்மை கொண்டவை. அதற்குக் காரணம் வேட்டைக்காரர்கள் யானைகளை அவற்றின் தந்தத்திற்காகக் கொன்று குவித்து விடுவதனால் தான். வன விலங்கு சரணாலயம் ஒன்றில் மிருகங்களைக் கண்டு களிக்க வந்தவர்களை ஒரு யானை விரட்டிச் சென்றது. யானையிடமிருந்து தப்புவதற்காக அவர்கள் ஒரு தந்திரம் செய்தனர். கமெராவை கையில் எடுத்து அதில் யானையின் பிரதி பிம்பத்தைப் பதிவு செய்ய முயன்றனர். ஆத்திரம் கொண்டு விரட்டி வந்த யானை கமெராவைக் கண்டதும் சாந்தம் அடைந்து அமைதியாக நின்ற காட்சி இது. கமெராவுக்கு போஸ் கொடுக்கிறதா யானை?

# ஒளிந்திருக்கும் முகம் எது?



ஓகஸ்ட் 26, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை ரம்யா கிருஷ்ணனுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. யோ.துஜீபா, கொழும்பு – 06.
2. எஸ்.எச்.றஸ்மின், மதுரங்குளி.
3. ந.மனோராஜ், வவுனியா.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (02.09.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? நகைச்சுவை நடிகர்கள் மத்தியில் சக நடிகையிடம் உதை வாங்கி ஜொலிப்பவர். புயல் என்னும் பட்டப் பெயரையும் பெற்றவர்.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு – 06.



# 2008 சீன ஒலிம்பிக்கிற்கு வரவேற்பும் எதிர்ப்பும்

இங்குள்ள ஒரு படத்தில் காணலாம்.

மனித உரிமை மீறல்கள் சீனாவில் நடைபெற்றதால் அங்கு ஒலிம்பிக் நடைபெறக் கூடாது என்று பாரிஸ் நகரில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. ஒலிம்பிக் சின்னத்தைக் கைவிலங்குகள் போல் சித்திரித்து ஆர்ப்பாட்டக் காரர்கள் கண்டனம் தெரிவித்தனர். அந்தக் காட்சியையும் இங்கு காணலாம்.



# தமிழர் வாழும் இடங்களில் தமிழுக்கு இடம் இல்லையா?

## மாகாண அமைச்சர் நவவி ஜனாதிபதியிடம் கேள்வி

"புத்தளம் மாவட்டத்திலுள்ள புத்தளம், கற்பிட்டி, முந்தல், வண்ணாத்திவில்லு ஆகிய நான்கு பிரதேச செயலர் அலுவலகங்களிலும் சிங்கள மொழியுடன் தமிழையும் நிர்வாக மொழியாக நடைமுறைப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடித மொன்றில் வடமேல் மாகாண போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சர் எம்.எச்.எம். நவவி மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

கடிதத்தின் பிரதிகள் இனவிவகார, தேசிய நல்லிணக்க, கனிப் பொருள் அபிவிருத்தி அமைச்சர் அத்தாவுட செனவிரத்தின மற்றும் பிரதியமைச்சர் எஸ்.கணேசமூர்த்தி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

சிங்களமும், தமிழும் இலங்கையில் அரச கரும மொழிகளாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில் தமிழர்கள் பெருமளவில் வாழும் வடக்கு — கிழக்கு மாகாணத்திலும் பதுளை, நுவரெலியா மற்றும் கொழும்பு மாவட்டங்களிலும் உள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் தமிழும் நிர்வாக மொழியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதேபோன்று புத்தளம் மாவட்டத்திலுள்ள மேற்படி நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் தமிழ் பேசும் மக்கள் பெருமளவு வாழ்ந்து வருகின்றனர்.



நவவி

இவர்கள் அரசுடன் தொடர்பு கொள்ளும் போது தமிழ் மொழியை பயன்படுத்தி ஆவன செய்தால் பெரும்பயன் ஏற்படும்.

தமிழ் மொழியையும் நிர்வாக மொழியாக அமுல் படுத்தினால் இப்பகுதியில் வதியும் தமிழ், முஸ்லிம் மக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஒன்று நிறைவேறும்.

இப்படி அமைச்சர் நவவி அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

## புத்தளத்தில் சருகுமான் வேட்டை

சருகுமான் ஒன்றை வேட்டையாடிய இராணுவ வீரர் உட்பட நான்கு பேருக்கு புத்தளம் மாவட்ட நீதிமன்றம் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது.

இராணுவ வீரரான பீ.துஷார இந்திரஜித் என்பவர் விடுமுறையில் வீடு வந்திருந்த சமயம் தமது நண்பர்களான பீ.எம்.ஜுனைதீன், எம்.சாஹுல்ஹமீத், எம்.ஜிபிரி ஆகியோருடன் சேர்ந்து மான் வேட்டையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

வனப்பாதுகாப்புத் துறையினர் இவர்களை மான் மற்றும் துப்பாக்கி, ரவை ஆகியவற்றுடன் கைது செய்து புத்தளம் மாவட்ட நீதிவான் பிராஸ்க் குணவர்த்தனா முன் ஆஜர் செய்தனர். நீதிவான் மேற்படி தண்டனையை விதித்தார்.

விடுமுறையில் வந்திருந்த இராணுவ வீரரை மறுபடியும் அவர் கடமையாற்றும் இராணுவ முகாமில் கொண்டு போய் விடுமாறு நீதிவான் பொலிஸாரைப் பணித்தார்.

# பெயரளவிலேயே கதிர்காமர் தமிழர் சந்திரசேகரன் குற்றச்சாட்டு

பெயரளவில் மட்டும் தமிழராக இருக்கும் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் தமிழ் மக்களின் உணர்வுகளை மதித்து அவர்களின் அரசியல் எதிர்காலத்திற்காக எப்போதாவது குரல் எழுப்பி உள்ளாரா? இவர் ஜனாதிபதியின் ஒலி பெருக்கியாகவே செயல்படுகின்றார்.

இப்படி மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி. சந்திரசேகரன் குற்றம் சுமத்தி உள்ளார்.

புலிகளுடன் பேசுவதற்குத் தயார் என கதிர்காமர் வெளியிட்ட செய்தி தொடர்பாக சந்திரசேகரன் அமைச்சர் கதிர்காமருக்குப் பகிரங்க கடிதம் ஒன்றை எழுதி உள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் நான்கு மாத காலம் தன்னிச்சையான யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்தனர். ஆனால் அரசு யுத்த நிறுத்தத்துக்குத் தயாரில்லை என்று பிடிவாதமாக மறுத்து வந்தது.

இது உங்களுக்குத் தெரியாதா? அரசாங்கத்தின் இந்தப் பிடிவாதப் போக்கே சமாதானப் பேச்சுவார்த்தைக்கான கதவுகளை மூடிவிட்டது.

இன்று அரசியல் தள்ளாட்டம் ஏற்பட்ட வேளையில் ஐ.தே.கவுடனும் ஜே.வி.பியுடனும் பேசுகின்றீர்கள். அப்போதுகூடப் பேச்சுவார்த்தை தொடர்பாக நீங்கள் எதையும் முன்வைக்கவில்லை. நாடாளுமன்ற ஆயுட் காலத்தையும் பதவிகளையும் பற்றி மட்டுமே பேசினீர்கள். அதிலும் வெற்றி பெறவில்லை.

இப்பொழுது சர்வதேச ஆதரவைப் பெறுவதற்காகவே புலிகளுடன் பேசுவதற்குத் தயார் என்று கூறுகின்றீர்கள். இது உங்களுடைய அரசியல் ஆயுதம் என்றே கருதுகின்றோம்.

இறக்கும் தறுவாயில் இருக்கும் இந்த அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்காகத் தமிழ் மக்களின் உணர்வுகளை கொச்சைப் படுத்தாமல் நீங்கள் மௌனமாக இருப்பதே தமிழ் மக்களுக்குச் செய்யும் பெரும் சேவையாக அமையும்.

இப்படி கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## முஸ்லிம் இளைஞர் குத்திக் கொலை

ஓட்டமாவடி மூன்று பரிசாரியார் வீதியைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர் ஒருவர் கத்தியால் குத்தி கொல்லப்பட்டார்.

30 வயது ஹமீத் லெப்பை முகைதீன் அப்துல் காதர் (30 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

இவருக்கும் இன்னொருவருக்கும் இடையில் நீண்டகாலமாகத் தகராறு இருந்து வந்ததாகவும் இந்தக் கொலைக்கு இதுவே காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்புப் போதனா வைத்திய சாலையில் நடைபெற்ற பிரேதபரிசோதனையின் போது கத்திக் குத்தால் இதயம் தாக்கப்பட்டு அதிக இரத்தப் போக்கால் ஏற்பட்ட மரணம் என சட்டவைத்திய அதிகாரி எம்.எஸ்.எம்.ஜாபீர் அறிக்கை சமர்ப்பித்தார்.

விசாரணைகள் மட்டக்களப்பு பதில் நீதிவான் விநோபா இந்திரன் முன்னிலையில் நடைபெற்றன.

## ஹக்கீம் கண்டனம்

கிழக்கு மாகாணத்தில் தமிழ் — முஸ்லிம் உறவு வேகமாக சீரடைந்து வரும் இந்த வேளையில், கல்முனையில் இடம்பெற்றுள்ள குண்டு வெடிப்புச் சம்பவம் கவலைக்குரியதும் கண்டனத்துக்குரியதும் ஆகும்.

இப்படி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

## திருக்கேதீச்சர ஆலய யாப்பில் திருத்தம்

சமய கல்வி, ஆலய விவகாரங்களில் அரசியல்வாதிகள் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் ஆலய திருப்பணிச் சபையின் யாப்பில் சில திருத்தங்கள் செய்யப்படவேண்டும்.

மேற்கண்டவாறு திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை ஏகமனதான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உள்ளது.

அரசியல்வாதிகள் உண்மைக்குமாறான செய்திகளை வெளியிடுகின்றனர். ஊர்ஜிதப்படுத்தப்படாத விவரங்களை இவர்கள் தொலைபேசி மூலம் செய்தியாளர்களிடம் தெரிவிக்கின்றனர். இது பல முரண்பாடுகளை விளைவிக்கிறது.

எனவே திருப்பணிச்சபை, ஊடகத் துறையினரைக் கூட்டி விடயங்களைத் தெளிவு படுத்தவேண்டும் எனவும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கும்பாபிஷேகம்

நாவற்காடு ஸ்ரீ செல்வமுத்து மாரி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் கடந்த 30ஆம் திகதி வெகு கோலாகலமாக நடந்தேறியது.

துரதிஷ்டவசமாக இப்பிரதேசத்தில் இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களினால் இவ்வாலயம் பாரிய சேதங்களுக்குள்ளானது. தற்பொழுது வடக்கின் மீள் குடியேற்ற அதிகாரசபையின் நிதி உதவியுடனும் பொதுமக்களின் நன்கொடைகளுடனும் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் அம்பாள், விநாயகர், சுப்பிரமணியர், நாகதம்பிரான், வைரவர் பீடங்களும் மணிக் கூட்டுக் கோபுரம், நவக்கிரகக்கோயில் என்பவற்றுடன் முன்மண்டபமும் அன்னதான மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன. 25—08—2001 திகதி முதல் 12—09—2001 திகதி வரை கும்பாபிஷேக கிரியைகளும் மண்டலாபிஷேகப் பூஜைகளும் தொடர்ந்து இடம்பெறும்.

# பேரியல் நுஆ தலைவிதான் நீதிமன்றம் உறுதி செய்தது



பேரியல்

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் தான் என மேல் முறையீட்டு நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்துள்ளது. முன்னணியின் தலைவியாக செயற்படுவதில் எந்தவிதமான சட்டத் தடையும் இல்லைஎன்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியாக பேரியல் அஷ்ரப்பும், சிரேஷ்ட பிரதி தலைவராக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவும் தவிசாளராக அசித்த பெரேராவும் இயங்குவதை தடை செய்யக்கோரி டாக்டர் ஹப்ரத் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இம்மனு மீதான விசாரணை மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் உடலகம, நாணயக்கார ஆகியோர் முன் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இருதரப்பினரும் சமர்ப்பித்த விடயங்களை நன்கு பரிசீலனை செய்த மேல் நீதிமன்ற நீதிபதிகள் டாக்டர் ஹப்ரத்தின் மனுவை நிராகரித்ததோடு திருமதி பேரியல் அஷ்ரப் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியாக செயல்படுவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை எனத் தீர்ப்பளித்துள்ளார்.

# வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் கோரிக்கை

"தங்கள் அமைச்சின் இணைப்பு அதிகாரியாக அனுபவமும், நேர்மையும் வாய்ந்த முஹம்மது சுல்தான் பலீல் என்பவரை நியமனம் செய்யுமாறு இடம்பெயர்ந்த மக்களாகிய நாம் பணிவுடன் வேண்டுகின்றோம்.....!"

மேற்கண்ட கோரிக்கை அடங்கிய மகஜரொன்றை யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து தற்சமயம் புத்தளம் பகுதியில் வதியும் 60 நலன் விரும்பிகள், கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் கிராமிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பேரியல் அஷ்ரப்புக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

60 பேரும் கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ள அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

"யாழ் மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து தற்சமயம் நாம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றோம். எமது குறைகளையும், தேவைகளையும் தீர்த்து வைப்பதில் தாங்கள் பெருமுயற்சி செய்து வருவது குறித்து நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம்.

எனவே நாங்கள் நியமனம் செய்யவுள்ள தங்களது அமைச்சின் இணைப்பு அதிகாரியாக எமது குறைகளை நன்கு அறிந்த முஹம்மது சுல்தான் பலீல் என்பவரை நியமனம் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இவர் கடந்த ஆறு வருடங்களாக முன்னாள் யாழ் மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளராக சேவையாற்றி நன்கு அனுபவம் பெற்றுள்ளார்.

மேலும் இவர் முன்னாள் பொதுசன தொடர்பு அதிகாரியாகவும், அகில இலங்கை சமாதான நீதவானாகவும் உள்ளார். எனவே இவரை இணைப்பு அதிகாரியாக நியமனம் செய்யுமாறு வேண்டுகின்றோம்!" என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏ.எஸ்.புல்கி

## பரீட்சை எழுதிய போலி பேர்வழி பாய்ந்து ஓட்டம்

புத்தளம், கற்பிட்டி, நிர்மலமாதா மஹா வித்தியாலயத்தில் இடம் பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர பரீட்சையின் போது ஆள்மாறாட்டம் செய்த மாணவரொருவர் கண்டு பிடிக்கப்பட்ட போது அம் மாணவன் பரீட்சை மண்டபத்தை விட்டுத் தப்பியோடியுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

பரீட்சை மண்டபத்திலிருந்து தப்பியோடிய மாணவன் விட்டுச் சென்ற அடையாள அட்டை, பிரவேசப் பத்திரம் என்பவற்றைக் கைப்பற்றிய மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவற்றைக் கற்பிட்டிப் பொலிஸாரிடம் கையளித்து உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

# தமிழ் மக்கள் ஏற்று திருப்தியடையக் கூடிய தீர்வினை இலங்கை அரசு காண வேண்டும்

## அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து

"இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இதுவே அமெரிக்காவின் விருப்பம் ஆகும். இந்த அரசியல் தீர்வு தமிழ் மக்கள் ஏற்கக் கூடியதாகவும் அவர்களுக்குத் திருப்தியைத் தரக்கூடியதாகவும் அமைய வேண்டும்."

—இவ்வாறு இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் தெரிவித்தார். இலங்கை வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் உரையாற்றிய போதே அமெரிக்கத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பாதுகாப்புக் காரணங்களினால் இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகம் மூடப்படவுள்ளது என்று வெளியான தகவல் தவறானது. ஆயினும் அமெரிக்காவிலிருந்து எவரையும் தற்போது இலங்கைக்கு வர அனுமதிக்க முடியாது. அமெரிக்க பிரஜைகளின் பாதுகாப்பு எமக்கு முக்கியம்" என்று தூதுவர் தெரிவித்தார்.

அமெரிக்கத் தூதுவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"நான் இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளுக்கிடையே மத்தியஸ்தம் செய்து வைக்க முயலவில்லை. ஆனால் இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை கொண்டிருக்கிறது.

"இலங்கையில் திறந்த பொருளாதாரம் காணப்படுகிறது. தென்கிழக்கு ஆசியாவில் இலங்கையே முதலில் திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தியது. ஆனால் அதன் திறந்த தன்மை போதாமல் உள்ளது. இலங்கையில் நிலவும் தொழில் சட்டங்கள் மாற்றப்படல் வேண்டும்.

"இலங்கையின் அபிவிருத்தியில் அமெரிக்கா அதிக ஆர்வம் கொண்டிருக்கிறது. நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டால் மேலும் அதிகமான முதலீடுகளை எம்மால் செய்ய முடியும்.

"இலங்கை எதிர் நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியின் அளவு எங்களுக்குத் தெரியும். கட்டுநாயக்கா தாக்குதலைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடி மேலும் அதிகரித்துள்ளது. விமானத் தாக்குதல் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளை மழுங்கடித்து விட்டது இந்தத் தாக்குதல் சம்பவம் முக்கியமான பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

"இலங்கையின் நிலவரம் குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. இலங்கையில் நிலவும் அரசியல் ஸ்திரமின்மை ஏற்படுத்தக் கூடிய பாதிப்பு குறித்து அமெரிக்கா கவலை கொண்டிருக்கிறது" —இவ்வாறு அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் தெரிவித்தார்.

# இந்தியாவைத் தண்டிக்க வேண்டும்

## ஐ.சி.சியிடம் இம்ரான்கான் கோரிக்கை

ஆசிய டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டிகளிலிருந்து திடீரென வாபஸ் பெற்றமைக்காக இந்தியாவை ஐ.சி.சி தண்டிக்க வேண்டும். இவ்வாறு பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான் கான் கூறியுள்ளார்.


இம்ரான்

இச்சுற்றுப்போட்டி ஆகஸ்ட் 29ஆம் திகதி ஆரம்பமானது. இந்தியா செப்டெம்பர் 13 ஆம் திகதி பாகிஸ்தான் அணியுடன் லாகூரில் போட்டியிடவிருந்தது.

ஆனால் போட்டி ஆரம்பமாகுவதற்கு 2 வாரங்களுக்கு முன்னர் இத்தொடரிலிருந்து வாபஸ் பெறுவதாக இந்தியா அறிவித்தது. இம்ரான்கான் இது குறித்து இந்தியாவை குறை கூறியுள்ளார்.

''போட்டிகளில் பங்குபற்ற இணங்காதிருந்தால் அது வேறு விடயம். ஆனால் இருவாரங்கள் இருக்கும்போது வாபஸ் பெறுவதாக அறிவிப்பது பாரதூரமான குற்றமாகும். இந்த நடத்தையை அலட்சியப்படுத்தக் கூடாது.

இணக்கத்தின்படி நடக்காமைக்காக இந்தியாவுக்கு ஐ.சி.சி தண்டனை அளிக்க வேண்டும்.

கடந்த வருடமும் இந்தியா இதேபோன்று பாகிஸ்தானை ஏமாற்றியது. இப்போது ஆசிய கிரிக்கெட் சம்மேளனத்திடமும் அவ்வாறே நடந்து கொண்டுள்ளது.

1999இல் பாகிஸ்தான் அணி இந்தியாவில் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியது. இதன் மூலம் இந்தியா பல மில்லியன் டொலர் லாபமீட்டுவதற்கு பாகிஸ்தான் உதவியுள்ளது. இந்த வாய்ப்பை பாகிஸ்தானுக்கும் வழங்கவேண்டும்.

கடந்த வருட இறுதியில் திட்டமிடப்பட்ட போட்டிகள் ரத்தானதால் பாகிஸ்தானுக்கு 15 மில்லியன் டொலர் நஷ்டமேற்பட்டது.

கிரிக்கெட் தவிர்ந்த பிற விளையாட்டுப் போட்டிகளில் பாகிஸ்தானுடன் இந்தியா பங்குபற்றுகிறது. இதன் காரணம் எனக்குப் புரியவில்லை. வேறு சில காரணங்கள் இதன் பின்னணியில் இருக்கக் கூடுமென நான் நம்புகிறேன்.'' இவ்வாறு இம்ரான்கான் கூறியுள்ளார்.

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# இலங்கையிடம் இந்தியா இம்முறை படுதோல்வி!

இந்தியாவுடனான கிரிக்கெட் டெஸ்ட் தொடரிலும் இலங்கை அணி அபாரமான வெற்றி பெற்றுள்ளது.

காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட்டில் இலங்கை 10 விக்கட்டுகளால் வெற்றி பெற்றது.


திலான்


முரளி


ஹஸான்

கண்டியில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டில் இந்திய அணி 7 விக்கட்டுகளால் வெற்றி பெற்றது.

தொடரின் வெற்றி யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும் மூன்றாவது டெஸ்ட் போட்டி எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் ஆகஸ்ட் 29 தொடக்கம் செப்டெம்பர் 2 வரை நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சிவ் சுந்தர் தாஸ், சடகோபன் ரமேஷ் ஆகியோர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். எனினும் முரளி பந்துவீச ஆரம்பித்ததும் ஆட்டத்தின் போக்கு மாறத் தொடங்கியது.

தாஸ் 59 ஓட்டங்களும், சடகோபன் ரமேஷ் 46 ஓட்டங்களும் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தனர். ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் முரளியிடம் தாக்குப் பிடிக்கவில்லை.

81.1 ஓவர்களில் 234 ஓட்டங்களுக்குச் சகல விக்கட்டுகளையும் இழந்தது இந்திய அணி. முரளிதரன் 87 ஓட்டங்களுக்கு 8 விக்கட்டுகளைக் கைப்பற்றினார். சமிந்த வாஸ் 60 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளை வீழ்த்தினார்.

இலங்கை அணி 48 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சனத் ஜயசூரிய 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன்பின் மார்வன் அத்தபத்து (108), மஹேல ஜயவர்தன (139), ஹஸான் திலகரத்ன(139), திலான் சமரவீர (103) ஆகியோர் அபாரமான சதங்களைக் குவித்தனர்.

திலகரத்னவும் சமரவீரவும் இணைந்து ஏழாவது விக்கட்டுக்காக வீழ்த்தப்படாத 194 ஓட்டங்களைப் பெற்றுப் புதிய இலங்கைச் சாதனை ஒன்றைப் படைத்தமை குறிப்பிடத் தக்கது.

4 வருடங்களின் பின் இலங்கை அணியில் இடம்பெற்ற ஹஸான் திலகரத்ன தனது திறமை மங்கிவிடவில்லை என்பதை நிரூபித்துள்ளார்.

இலங்கை 6 விக்கட் இழப்பிற்கு 610 ஓட்டங்கள் பெற்றநிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இது இலங்கை அணியின் இரண்டாவது அதிகூடிய மொத்த ஓட்ட எண்ணிக்கையாகும்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 376 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் இந்தியா இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. ஆனால் 299 ஓட்டங்களுக்குள் சகல விக்கட்டுகளையும் இழந்தது. இதனால் இலங்கைக்கு இன்னிங்ஸாலும் 77 ஓட்டங்களாலும் வெற்றி கிடைத்தது.

இதனால் போட்டியின் வெற்றியோடு தொடரிலும் 2-1 விகிதத்தில் இலங்கைக்கு வெற்றி கிடைத்துள்ளது. மூன்றாவது போட்டியில் 11 விக்கட்டுகளை வீழ்த்திய முரளி சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார். தொடரில் 23 விக்கட்டுகளை வீழ்த்தியமையால் தொடரின் நாயகன் விருதும் அவருக்கே வழங்கப்பட்டது.

1985 இல் நடை பெற்ற டெஸ்ட் தொடரில் இலங்கை 1-0 விகிதத்தில் வெற்றியீட்டியது. அதன்பின்னர் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி வெற்றியீட்டியமை இதுவே முதல்தடவையாகும்.

## கன்னி டெஸ்ட் போட்டியில் சதம் குவித்த ஆசிய வீரர்கள்

இந்தியாவுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அறிமுகமான திலான் சமரவீர ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களைப் பெற்றார். அறிமுகமான போட்டியிலேயே சதம் குவித்தவர்களில் உலகின் 70ஆவது வீரர் திலான் சமரவீர ஆவார். இவர்களில் ஆசிய வீரர்களின் விவரம் வருமாறு:

| பெயர் | அணி | ஓட்டம் | எதிரணி | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| லலா அமர்நாத் | இந்தியா | 118 | இங்கிலாந்து | மும்பாய் | 1933-34 |
| பி.எப். சேடன் | இந்தியா | 110 | பாகிஸ்தான் | கல்கத்தா | 1952-53 |
| தீபால் சிங் | இந்தியா | 100* | நியூஸிலாந்து | ஹைதராபாத் | 1955-56 |
| ஏ.ஏ. பேயிங் | இந்தியா | 112 | இங்கிலாந்து | மாஞ்செஸ்டர் | 1959 |
| ஹனுமந்த சிங் | இந்தியா | 105 | இங்கிலாந்து | தில்லி | 1963-64 |
| கே. அப்துல்லா | பாகிஸ்தான் | 166 | அவுஸ்திரேலியா | கராச்சி | 1964 |
| ஆர். விஸ்வநாத் | இந்தியா | 137 | அவுஸ்திரேலியா | கான்பூர் | 1969-70 |
| எஸ். அமிர்நாத் | இந்தியா | 124 | நியூஸிலாந்து | ஒக்லன்ட் | 1975-76 |
| ஜாவிட் மியன்டாட் | பாகிஸ்தான் | 163 | நியூஸிலாந்து | லாகூர் | 1976-77 |
| ஸலீம் மலிக் | பாகிஸ்தான் | 100* | இலங்கை | கராச்சி | 1982-83 |
| மொஹமட் அஸாருதீன் | இந்தியா | 110 | இங்கிலாந்து | கல்கத்தா | 1984-85 |
| பிரண்டன் குருப்பு | இலங்கை | 201* | நியூஸிலாந்து | கொழும்பு | 1986-87 |
| ருமேஷ் களுவிதாரன | இலங்கை | 132* | அவுஸ்திரேலியா | கொழும்பு | 1992 |
| பிரவின் அம்ரே | இந்தியா | 103 | தென் ஆபிரிக்கா | டேர்பன் | 1996 |
| மொஹமட் வஸீம் | பாகிஸ்தான் | 109 | நியூஸிலாந்து | லாகூர் | 1996 |
| அலி நக்வி | பாகிஸ்தான் | 115 | தென் ஆபிரிக்கா | ராவல்பிண்டி | 1997 |
| அஸார் மொஹமட் | பாகிஸ்தான் | 128 | தென் ஆபிரிக்கா | ராவல்பிண்டி | 1997 |
| சௌராவ் கங்குலி | இந்தியா | 131 | இங்கிலாந்து | லோர்ட்ஸ் | 1999 |
| யூனுஸ்கான் | பாகிஸ்தான் | 107 | இலங்கை | ராவல்பிண்டி | 2000 |
| அமினுல் இஸ்லாம் | பங்களாதேஷ் | 145 | இந்தியா | டாக்கா | 2000 |
| தௌபீக் உமர் | பாகிஸ்தான் | 104 | பங்களாதேஷ் | முல்தான் | 2001 |
| திலான் சமரவீர | இலங்கை | 103* | இந்தியா | கொழும்பு | 2001 |

# இலங்கை மெய்வல்லுநர் குழுவின் முகாமையாளர், வீரர்களுக்குத் தடை!

கனடாவின் எட்மன்டன் நகரில் நடைபெற்ற உலக மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றிய இலங்கை அணியின் முகாமையாளர் பாலித பெர்னாண்டோவுக்கு 4 வருடகாலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் குழுவில் இடம்பெற்ற 400 மீற்றர் அஞ்சலோட்ட வீரர் சுமேத அருணசாந்த பெர்னாண்டோவுக்கு 2 வருடத் தடையும் மேலும் மூவருக்கு 6 மாதத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவினரல் இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

குடிவெறியுடன் விளையாட்டுக் கிராமத்திற்கு வந்தமை, கடையில் பொருட்களை திருடியமை, பெண் ஒருவரிடம் தகாத முறையில் நடக்க முயன்றமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு அஞ்சலோட்ட வீரர் சுமேத அருண சாந்த பெர்னாண்டோ உள்ளானார். அவருக்கு 2 வருட காலம் போட்டிகளில் பங்குபற்றத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுமேதவுடன் 'திருட்டுக்' குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்ட பிரசன்ன அமர சேகரவுக்கும் குடிபோதை குற்றச்சாட்டுக்கு உள்ளான ரொஹான் பிரதீப் குமார, ரங்க விமலவன்ஸ ஆகியோருக்கும் தலா 6 மாதத் தடை விதிக்கப்பட்டது.

அணி முகாமையாளரான பிரிகேடியர் பாலித பெர்னாண்டோ தமது கடமையை ஒழுங்காகச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுக்குள்ளானார். அவரும் மதுபோதையுடன் காணப்பட்டதாக சில வீரர்கள் எதிர்குற்றச்சாட்டை சுமத்தியிருந்தனர். இதனால் அவர் 4 வருட காலம் இலங்கை அணியின் முகாமையாளராக கடமையாற்றத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுசந்திகா ஜயசிங்க பத்திரிகைகளுக்குத் தகவல் அளித்தமைக்காகக் கடுமையாக எச்சரிக்கப்பட்டார். 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்ட வீரர் ஹரிஜன் ரத்னாயக்க அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல் எட்மன்டன் நகரைவிட்டு வெளியேறியமைக்காகவும், இலங்கைக் குழுவின் பயிற்றுநர் டேர்வின் பெரேரா 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிக்கு அணியைத் தயார் செய்யத் தவறியமைக்காகவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனத்தின் ஒழுக்காற்று விசாரணைக் குழுவின் விசாரணை அறிக்கையைத் தொடர்ந்து இத்தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

சம்மேளனத்தின் உப தலைவர்களில் ஒருவரான என்.ஏ.டி ஜயசிங்க தலைமையில் இக்குழு நியமிக்கப்பட்டது. தடைவிதிக்கப்பட்டுள்ள பாலித பெர்னாண்டோவும் சம்மேளனத்தின் உபதலைவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது.

இதேவேளை தன்மீதான குற்றச்சாட்டை பாலித பெர்னாண்டோ மறுத்துள்ளார். ''நான் எனது கடமையைச் செய்யத் தவறியிருந்தால் சில வீரர்கள் வீடு திரும்பியிருக்க முடியாது. அவர்கள் கனடா சிறையில் இருந்திருப்பார்கள்.'' இவ்வாறு பெர்னாண்டோ கூறுகிறார்.

ஏற்கெனவே சுமேத, அமரசேகர, விமலவன்ஸ, ரொஹான் பிரதீப் குமார ஆகியோர் தெற்காசிய விளையாட்டு போட்டிகளுக்கான பயிற்சி முகாமில் கலந்துகொள்ள முடியாதவாறு விளையாட்டுத்துறை அமைச்சினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுவந்த மாதாந்த கொடுப்பனவுகளும் நிறுத்தப்பட்டுள்ளன. எந்தவொரு பொது விளையாட்டு மைதானத்திற்குச் செல்லவும் இவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# குத்துச்சண்டை வீரர்களின் மல்யுத்தம்!


ரஹ்மான்


லூயிஸ்

உலக அதிபார குத்துச்சண்டை சாம்பியனான ஹஸிம் ரஹ்மானும் முன்னாள் சாம்பியன் லெனொக்ஸ் லூயிஸும் தொலைக்காட்சி நிலையமொன்றில் திடீர் மல்யுத்தத்தில் ஈடுபட்ட சம்பவம் கடந்த 30ஆம் திகதி நடைபெற்றது.

ரஹ்மானும் லூவிஸ் இருவரும் நவம்பர் 7ஆம் திகதி லாஸ்வேகாஸ் நகரில் குத்துச்சண்டைப் போட்டியொன்றில் பங்குபற்றவுள்ளனர்.

இது தொடர்பான தொலைக்காட்சி நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றில் இவ்விருவரும் கலந்து கொண்டனர்.

அப்போது, வேறொரு நிகழ்ச்சியில் ரஹ்மான் கூறிய கூற்று தொடர்பாக கேள்வி எழுப்பினார் லூயிஸ். ''நான் ஓரினச் சேர்க்கையாளர் என்று ஏன் கூறினீர்கள்? நான் அப்படிப்பட்டவன் அல்லன்.'' இவ்வாறு லூயிஸ் கூறினார்.

''நீங்கள் ஒரு ஓரினச் சேர்க்கையாளர் போல் நடந்துகொண்டதாக நான் கூறினேன். முடியுமானால் நீதிமன்றத்திற்குச் செல்லலாம்.'' இவ்வாறு பதிலளித்தார் ரஹ்மான்.

அதையடுத்து ரஹ்மானின் சகோதரியைத் தொடர்புபடுத்தி லூயிஸ் பேசினார். ''என் குடும்பத்தினரைப் பற்றி எதுவும் பேச வேண்டாம்'' என்றார் ரஹ்மான்.

அதையடுத்து இருவரும் எழுந்து நின்று பரஸ்பரம் முகத்தை உரசிக்கொண்டு நின்றனர். ரஹ்மான் லூயிஸைத் தள்ளிவிட்டார். இதையடுத்து இருவரும் கட்டிப் புரண்டனர். இருவரும் அருகிலிருந்தோரால் விலக்கப்பட்டதால் மோதல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. எனினும் அதற்கிடையில் மேசையொன்று நொறுங்கியது.

''ரஹ்மான் மீண்டும் என்னை தோற்கடிக்க முடியாது. அப்படி நடந்தால் நான் ஓய்வு பெற்றுவிடுவேன்.'' இவ்வாறு லூயிஸ் கூறியுள்ளார்.

# மகளிர் குத்துச்சண்டையில் இலங்கைக்கு வெண்கலம்

ஆசிய மகளிர் குத்துச் சண்டைப் போட்டியில் இலங்கைக்கு வெண்கலப் பதக்கமொன்று கிடைத்துள்ளது.

மகளிருக்கான முதலாவது ஆசிய குத்துச் சண்டைப் போட்டிகள் ஆகஸ்ட் 25 தொடக்கம் 30 வரை தாய்லாந்தின் பேங்கொக் நகரில் நடைபெற்றன.

இலங்கையிலிருந்து 7 போட்டியாளர்கள் இதில் பங்குபற்றினர்.

இவர்களில் எச்.எம்.எம். ஹேரத் லைட் வெல்டர் கிளாஸ்-63.5- கிலோவின் கீழ் பிரிவில் வெண்கலப்பதக்கத்தை வென்றார். இவர் அரையிறுதிப் போட்டியில் பிலிப்பைன்ஸின் மார்ட்டினஸ் இடம் தோல்வியுற்றார். மார்ட்டினஸ் இறுதிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

மற்றொரு இலங்கை வீராங்கனையான எல்.ஜி சந்திரிக்கா லைட் பிளை வெயிட்டில் (48 கிலோ பிரிவில்) பதக்கம் பெறும் வாய்ப்பு மயிரிழையில் தவறியது. சீன வீராங்கனை றி ஜோங் ஹையிங்கிடம் சந்திரிக்கா தோற்றார்.

10 நாடுகள் இப்போட்டிகளில் பங்கு பற்றின.

கொரியா 5 தங்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்று முதலிடத்தைப் பெற்றது. இலங்கைக்கு எட்டாவது இடம் கிடைத்தது.



அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்ற ரட்ணம் ஜோசப் கிண்ணத்திற்கான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் திருகோணமலை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் சாம்பியனானது. ரட்ணம் ஜோசப் குடும்பத்தினரிடமிருந்து ஒலிம்பிக் அணித்தலைவர் வெற்றிக்கிண்ணத்தைப் பெறுவதைப் படத்தில் காணலாம். -நேரன்

# Planning to Migrate Canada / Japan

***Learn French in 6 months and Gain More Points at the Interviews**
***Learn Japaneese in 6 months all 3 Alpherbats by Award winning Lectures**

# TOEFL

Fully Airconditioned Environment
Students are restricted to 10

- ❐ Use of Original latest cassettes and lessons on CD's
- ❐ Regular Handouts based on the latest materials
- ❐ More enough exercises in listening comprehension and structure
- ❐ Hands on training in our modern computer Lab for Answering TOEFL

A/L English for A/L Students

# SPOKEN ENGLISH

For Elders, School Leavers & Job Seekers

- ❐ Qualified and Experienced Teachers
- ❐ Fully Equipped and Air Conditioned Class Rooms
- ❐ Computer Assisted Language Learning Facilities

**EXPRESS STREAM**
**1 MONTH ONLY**

## SOFTWARE ENGINEERING



- Soft ware Management
- Practical Work
- Software Phototyping
- Requirement Engineering
- Software Design
- Validation & Verification
- Software Maintenance
- Project Management
- Risk Management
- Documentation & Other Events

## DIPLOMA IN COMPUTERS STUDIES



- Fundamental of Information
- Programming Techniques
- VB Introduction to OOP
- MS Office 2000
- Java & HTML Programming
- Data Communication
- Logical / Physical Organization
- Organizing for Computer
- Project Works

## JAVA



- Introduction to Java
- Arrays & Strings
- Classes & Packages & Interfaces
- Streams & Files
- ANT
- Event Handling
- Multi - Threading
- Application & Applets
- JDBC, RMI
- Java Beans

## GRAPHIC DESIGNING



- Windows Me
- Adobe Pagemaker 6.5
- Corel Draw 10
- Adobe Photoshop 6.0
- Picture IT 2001
- Colour Separations
- Art Works
- Scanning
- Computer Printing

## C++ / OOP



- Introduction to C++
- Tokens
- Expressions
- Control Structure
- Decision Making
- Branching & Looping
- Structures & Functions
- General Concepts of OOP
- Classes & Objects
- Constructors & Destructors
- Object Oriented System Development

## ORACLE & i



- Introduction to RDBMS
- DDL, PML, TCL
- Integrity Constraints
- Arithmetic & Group Expressions
- PL/SQL introduction
- Cursor Management
- Transaction Handling
- Database Triggers
- Stored Procedure & Function

## VB 6.0 & SQL SERVER 2000



- Introduction to Application Development Using VB 6.0
- Working with Form & Code
- Controlling Program Execution & Debugging
- Active X Controls
- Windows API
- Data Access using ADO
- T-SQL
- Database Concept & Administration of SQL Server 2000
- Practical Project.


## MILLENNIUM KIDS



- Computer Awareness
- Graphics
- Presentation
- Cartoons
- Animations
- Sound Recording & Playing
- Spreadsheet
- Word Processor
- *MS Publisher & Much More....*

**1 YEAR DURATION**

## WEB DESIGNING




- HTML
- Java Script
- Front Page
- Photoshop
- Flash
- Dream Wave
- Fire Works

## MS OFFICE 2000




- Windows Me
- MS Word
- Ms Power Point
- MS Access
- Ms Publisher
- Ms Front Page

## AUTO CAD 2000



- Creating Drawings Sheets
- Drawing & Editing Commands
- Controlling & Handling WCS & UCS
- Object Snapping Methods in Auto Cad
- Managing Layers
- Shading & Rendering
- Creating 3D Surfaces
- Isometric & Orthogonal View

**RIBS**

**Free E-mail & Internet Training**

**For Futher Details Contact :-**

# RETINA INSTITUTE OF BUSINESS STUDIES

*2 -1/2, Edward Lane, Colombo - 03. Tel : 507781, 507782*
*Fax: 507781 E-mail :* study@retina.lk

# புதிய நகரம் எதற்காக பொலிவிழந்து போனது?

## திக்குமுக்காடும் திகண நகரில் ''மிஸ்டர் க்றோ''



நீண்ட கால ஓய்வுக்குப்பின்னர் 'மிஸ்டர் க்றோ' மலையகப் பிரதேசத்துக்குச் சிறகடித்தார். மகாவலி கங்கையின் பின்னணியில் கண்டி விக்டோரியா அணைப்பகுதி எழிற்கோலம் பூண்டிருப்பதைக் கண்டு புளகாங்கிதம் அடைந்தார்.

கைத்தொழில் பேட்டைகள், விவசாயப் பண்ணைகள் நிறைந்த இரஜவல மலைச்சரிவில் நீண்ட நேரம்அனாயாசமாக ஒய்வெடுத்துக்கொண்டு இருந்தார் ''மிஸ்டர் க்றோ''.

அவ்வேளையில் இரஜவல திகண புதிய நகரம் அவரது கண்ணில் பட்டது. இனிய சுற்றுப்புறச் சூழலுடன் நிறுவப்பட்ட புதிய நகரம் திகண என்று மிஸ்டர் க்றோ கேள்விப்பட்டிருக்கிறார். பொலிவிழந்து போய் இருக்கிறதே! காரணம் என்ன?



திகண புதிய நகர கடைத் தொகுதியில் லொறிகளும், கடைச் சாமான்களும் வீதியை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. பாதசாரிகள் செல்ல முடியாத நெருக்கம்.

அதை அறிந்து வருவதற்காக திகண நகரில் வட்டமிட்டார் 'மிஸ்டர் க்றோ'.

'மிஸ்டர் க்றோ' என்ற அழைப்புச் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தார் 'மிஸ்டர் க்றோ'.

படித்த இளைஞர் ஒருவர் நீங்கள் தானே 'மிஸ்டர் க்றோ' என்று வாத்ஸல்யத்தோடு கேட்டார்.

''ஆமாம்,உங்களுக்கு எப்படி என்னைத் தெரியும்?''

'உங்களை அறியாமல் இருக்க முடியுமா? நான் கொழும்பு வந்திருந்தபோது உங்களைப் பார்த்தேன். நீங்கள் இங்கே வந்தது நல்லதாகி விட்டது. பாருங்கள் எங்கள் நகரத்து அலங்கோலங்களை'' என்று எல்லா இடங்களுக்கும் அழைத்துச் சென்று விவரங்களை தெரிவித்தார்.

கண்டியில் இருந்து 33 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கிறது இந்த இரஜவல திகண புதிய நகரம். விக்டோரியா நீர்த்தேக்கத்தில் மூழ்கிப் போன கிராமங்களுக்கு ஈடாக மகாவலி அபிவிருத்தி அதிகார சபை இப்புதிய நகரை உருவாக்கியது. மலைச்சரிவில் மிகவும் அழகான சூழலில் திகண புதிய நகரம் நிறுவப்பட்டது.

ஐந்து வீதிகளாகப் பிரிக்கப்பட்டு 300 கடைத் தொகுதிகள் அமைக்கப்பட்டன. விக்டோரியா அணைக்கட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடைத் தொகுதிகள் இலவசமாகவே வழங்கப்பட்டன.

நடை பாதையுடன் கூடிய தெருக்கள் அமைக்கப்பட்டன. ஆனால் அவற்றால் எந்தப் பயனும் இல்லை. பொது மக்களும் பாதசாரிகளும் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.



பாதசாரிகளுக்கான நடைபாதைகளில் அதிகமான வாகனங்களும் லொறிகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

திகண புதிய நகரில் இரண்டு தமிழ்ப் பாடசாலைகளும் ஒரு சிங்களப் பாடசாலையும் இருக்கின்றன. சுமார் 6000 பிள்ளைகள் படிக்கின்றனர்.

சுதந்திர வர்த்தக வலயத்தில் 20 தொழிற்சாலைகள் இயங்குகின்றன. 18 ஆயிரம் பேர் பணி புரிகின்றனர். இவர்களோடு அன்றாடம் தமது தேவைகளுக்காக நகருக்கு 25 ஆயிரம் பேர் வந்து போகின்றனர்.

வாகனப் போக்குவரத்து விதிகள் கடைப் பிடிக்கப் படுவதில்லை. நகரின் எல்லையில் சகல வசதிகளுடன் பஸ்நிலையம் அமைக்கப்பட்டது. ஆயினும் பஸ்கள் கடை வீதியிலேயே நிறுத்தி வைக்கப்படுகின்றன. பஸ் நிலையம் காடு மண்டிக் கிடக்கிறது.

நடை பாதைகளை கடைக்காரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். கட்டட உபகரணங்கள் இரும்புக் கம்பிகள், மணல், செங்கற்கள், எண்ணெய் பீப்பாய்கள், அரிசி மூடைகள் நடைபாதையில் குவிக்கப்பட்டுள்ளன. தப்புச் செய்தவர்களைத் தட்டிக் கேட்க எவரும் இல்லை. இந்த நிலைமை கண்டு கவலை கொண்டார் ''மிஸ்டர் க்றோ''.

கடை அடைப்பு சாப்பு சட்டம் எதுவும் இல்லை. தினசரி கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெறுகிறது. கடமையாற்றும் ஊழியர்களுக்கு விடுமுறை என்பதே இல்லை.

சுகாதார வசதிகள் எதுவுமே இல்லை. நகரிலும் தொழிற்சாலைகளிலும் சேகரிக்கப்படும் குப்பைகள் வண்டி வண்டியாக அழுத்தொட்ட கிராமத்தின் மத்தியில் கொட்டப்படுகின்றன. இங்கு 600 குடும்பங்கள் வாழ்கின்றன. துர்நாற்றம் சகிக்க முடியாது. பல கொடிய நோய்களை உண்டாக்கும் விஷக் கிருமிகளின் உற்பத்தி நிலையமாக அது அமைந்துள்ளது.

திகண புதிய நகரம் குண்டசாலை பிரதேச சபையின் கீழ் வருகிறது. வருடாவருடம் வரி வசூலிப்பதோடு அதன் வேலை முடிந்துவிடும். மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையோ நகரத்தை உருவாக்கிக் கொடுத்ததோடு தனது வேலை முடிந்து விட்டது என்கிறது.

இதனால் இரஜவல திகண புதிய நகரப் பிரதேச மக்கள் எப்பக்கத்தின் உதவியும் இன்றி பரிதவிக்கிறார்கள்.

வர்த்தகர்களும் வாகன உரிமையாளர்களும் எதேச்சாதிகாரமாகச் செயற்படுகின்றனர். இதனால் திகண நகருக்குள் வரும் பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் திக்கு முக்காடுகின்றனர் என்று அந்த இளைஞர் மிஸ்டர் க்றோவுக்கு எடுத்துக் கூறினார். மிஸ்டர் க்றோ கண்களைத் துடைத்துக் கொண்டார்.

அந்த இளைஞரைப் பாராட்டி அவருக்கு நன்றி தெரிவித்து விட்டு திகண புதிய நகர மக்களை, முருகா மலை முருகா நீதான் காப்பாற்ற வேண்டும் என்று கும்பிடு போட்டுக் கொண்டே ''மிஸ்டர் க்றோ'' கொழும்பை நோக்கிப் பறந்தார்.


திருமறைக் கலாமன்றம் நடத்தும்

தமிழ் விழா — 2001

14.09.2001
இராமகிருஷ்ண மிஷன் மண்டபம்,
வெள்ளவத்தை
மாலை 6.00 — 9.30
• நடனம் • நவீன நாடகம்
• நாட்டுக்கூத்து • இசை நாடகம்

15.09.2001
புதிய கதிரேசன் மண்டபம்,
பம்பலப்பிட்டி
அசோகா (வார்த்தைகளற்ற நாடகம்)
மாலை 6.00 — 7.00 மணி முதற்காட்சி
மாலை 7.30 — 8.30 மணி இரண்டாம் காட்சி

16.09.2001
சரஸ்வதி மண்டபம்,
பம்பலப்பிட்டி
கருத்தரங்கு
காலை 10.00 — 01.00 மணி
கவியரங்கு
மாலை 02.00 — 04.00 மணி

டவர் மண்டபம்,
மருதானை
மாலை 6.00 — 9.30 மணி
• நடனம் • நாடகம்
• நாட்டுக்கூத்து • சிறுவர் நாடகம்


# பன்றியை விழுங்கிய பாம்பு

மலைப்பாம்பு ஒன்று காட்டுப் பன்றியை விழுங்கிய சம்பவம் அண்மையில் பலாங்கொடையில் உள்ள சமனல வத்தை என்ற இடத்தில் இடம் பெற்றது.

பாம்பு பன்றியை விழுங்குவதைக் கண்ட பிரதேச வாசிகள் ஓடிச் சென்று ஏனையோரை அழைத்து வருவதற்கு முன் பாம்பு பன்றியை முழுதாகவே விழுங்கி விட்டது.

விடயம் அறிந்து அப்பகுதிக்கு விரைந்து வந்த வன பாதுகாப்பு அதிகாரிகள் பன்றியை விழுங்கிய நிலையில் நகர முடியாது கிடந்த பாம்பைப் பிடித்து பிக்கப் வாகனம் ஒன்றில் ஏற்றிச் சென்றனர்.

அந்தப் பாம்பு வன விலங்கு பாதுகாப்புப் பிரிவிடம் கையளிக்கப் பட்டது. பன்றியை விழுங்கி வயிறு புடைத்த நிலையில் பாம்பு கிடப்பதைப் படத்தில் காணலாம்.

படம்: இரத்தினபுரி நிருபர்




UTHAYAN VIDEO
ஓச்சாட் திருமண மண்டபம்
நவீன வசதிகளுடன் கூடிய நான்கு மண்டபங்கள்
Hall No 1: 100 பேர் தொடக்கம் 300 பேர் வரை
Hall No 2: 50 பேர் தொடக்கம் 135 பேர் வரை
Hall No 3: 100 பேர் தொடக்கம் 300 பேர் வரை
7 வது மாடியில் 100 பேர் தொடக்கம் 400 பேர் வரை
உங்கள் பதிவுகளுக்கு :
ஓச்சாட் கட்டிடம்
OFFICE: 074-514298
HOT LINE: 077-355297

SINDARLLA BEAUTY FASHION
மணப்பெண் அலங்காரம் மற்றும் கேக் வகைகள் சிறந்த முறையில் நிறைந்த திருப்தியுடன் செய்து தரப்படும்.
கேக் வகைகள், மணப்பெண் அலங்காரம் என்பவற்றுக்கான பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன.
புதிய வகுப்புகளுக்கும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
Mrs.Sreethran
7/4 Ground Floor, Orchard Building,
Galle Road, Colombo - 06. T.P: 074-514298
Hot Line: 077-316453